விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 20 சனிக்கிழமை (05.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 229.

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வரையாவது

# ஜனாதிபதியும் பிரதமரும்
# இணைந்து செயற்பட வேண்டும்

## சம்பந்தன் வலியுறுத்தல்



(கொழும்பு) தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வரையாவது ஜனாதிபதியும் பிரதமரும் தொடர்ந்து இணைந்து செயற்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்தார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (23-ம் பக்.)

## பொலிஸாருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி துன்னாலைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற போது இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்து 23☛

## இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். சாவகச்சேரி தனங்கிளப்புப் பகுதியில் 25 வயதான இளைஞர் ஒருவர் நேற்று மதியம் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞரின் மரணத்துக்கான காரணம் 24☛

## கொக்குவில் வாள்வெட்டு பொலிஸ் வலைவீச்சு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் பொலிஸார் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் என அடையாளம் காணப்பட்டுள்ளவரை கைது செய்வதற்கு விசேட நடவடி 23☛

## புலிகளின் யோசனையை ரணில் ஏற்றிருந்தால் ஜனாதிபதி - ஹக்கீம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் இடைக்கால அரசு யோசனையை ஏற்றிருந்தால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2005 ஆம் ஆண்டே ஜனாதிபதியாகியிருப்பார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற பிரதமருக்கு வாழ்த்து தெரி 23☛

## வலயக்கல்வி அலுவலகத்துள் புகுந்தது பஸ்



08☛

## மீண்டும் புலிகள் - பொலிஸ்மா அதிபர் நிராகரித்தார் இராணுவத் தளபதி

(கண்டி)



பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர கூறுவதைப் போன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடாகவோ அல்லது கடும்போக்குவாத குழுக்களின் ஊடாகவோ மீண்டுமொரு யுத்தம் வடக்கில் ஏற்படுவதற்கு ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை என்று இராணுவத் தளபதி ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார். 23☛

## லலித் - குகன் வழக்கு டிசம்பர் 8க்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

மனித உரிமை செயற்பாட்டாளர்களான லலித், குகன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை யாழ் நீதவான் நீதிமன்றில் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் யாழ் நீதவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. 23☛

## சிறுப்பிட்டி இளைஞர் கொலை; 5 இராணுவத்தினருக்கும் பிணை

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி பகுதியில் இரு இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 5 இராணுவத்தினரும் மேன்முறையீட்டு நீதிமன்றின் கட்டளையினை அடுத்து நேற்றைய தினம் யாழ் நீதவான் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மட்டுவில் வடக்கை சேர்ந்த செல்வரத்தினம் ஜெயசீலன், நாகமணி சௌந்தரராஜன் ஆகிய இளைஞர்கள் இருவர் கடந்த 1997 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி மயிலங்காட்டு பகுதிக்கு உறவினருடைய திருமணத்துக்காக சென்ற போது இருவரும் சிறுப்பிட்டி புத்தூர் வாதரவத்தையில் அமைந்திருந்த இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந் 23☛

## ரவி விவகாரம்; ஜனாதிபதி - பிரதமர் விரைவில் சந்திப்பு

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் சில தினங்களில் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாகவும் விசாரணைகள் நிறைவடையும் வரை ரவி கருணா 24☛

## இந்த அரசு தொடர்ந்தால் எதுவுமே மிஞ்சாது!

(கொழும்பு)

இன்றைய அரசின் லிபரல் பொருளாதார நடவடிக்கையால் இந்த நாட்டின் மக்கள் எதுவித மிச்சமுமின்றி பிச்சை எடுக்க மேற்கு நாடுகளுக்கு செல்ல வேண்டி ஏற்படும்.

தொழிற்சங்க அமைப்பு ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் மாநாட்டின் போதே பிரபல பொரு 02☛

## யாழில் காரை பந்தாடியது ரயில்; தெய்வாதீனமாக உயிர்தப்பிய மருத்துவர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆத்திசூடி விநாயகர் வீதியில் ரயில் கடவையை கடக்க முற்பட்ட கார் ஒன்றை காங்கேசன்துறையில் இருந்து யாழ் நோக்கி சென்ற புகையிரதம் மோதித்தள்ளியதில் கார் தூக்கி வீசப்பட்டு பாரிய விபத்துக்குள்ளானதுடன் காரில் பயணித்த பெண்வைத்தியர் ஒருவர் காயங்கள் ஏதுமின்றி மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்குப் பின்புறமாகவுள்ள ஆத்திசூடி விநாயகர் வீதியை 02☛

## வவுனியாவில் ரயில் - பஸ் விபத்து 6 பேர் படுகாயம்; மக்கள் முற்றுகை



(குருமன்காடு)

வவுனியா, செட்டிக்குளம் பகுதியில் ரயிலுடன் இ.போ.சபை பேருந்து மோதி விபத்துக்கு 02☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு வேப்பந்திடலில் நாளை தேர்த்திருவிழா

மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும்.

காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூசை, தம்ப பூசை என்பன இடம்பெற்று பத்து மணியளவில் அம்மன் தேரில் ஆரோகணித்து திருவீதி வலம் வரும் நிகழ்வு இடம்பெறும். (ந)

## இந்த அரசு...

ளாதார நிபுணர் மொகான் சமரநாயக்க இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

அம்பாந்தோட்டை துறைமுகம் குத்தகைக்கு கொடுக்கப்பட்டதாகக் கூறினாலும் அது யதார்த்தமாக 1842இல் இங்கிலாந்து சீனாவுடன் செய்த யுத்தத்தின் பின்பு இங்கிலாந்து ஹொங்ஹொங்கை கைப்பற்றிக் கொண்டது.

அங்கே ஒப்பந்தம் இருந்தது. 1999இல் மீண்டும் ஹொங்ஹொங் சீனாவுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் நடைபெற்றது சீனா பலமான நாடு என்பதால் சாத்தியமாயிற்று.

ஆனால் எமது நாடு 99வருடங்களுக்கு அம்பாந்தோட்டைத் துறைமுகம் கொடுப்பதானது நாம் பலம் அடைந்து விடுவோம் என அர்த்தப்படுமா என்ற கேள்வியை எழுப்பினார். இன்றைய அரசு ஐ.தே.க தலைவர் ஏகாதிபத்திய குணம் கொண்ட வலதுசாரி கூட்டம். அதேபோல் 2001ஆம் ஆண்டும் அதிகாரத்தில் இருந்த போதும் இவ்வாறே செயற்பட்டார். அதேவேலையைத்தான் இப்போதும் தொடர்கிறார்.

ஆகவே இந்த ஆட்சியும் ரணிலின் பொருளாதாரக் கொள்கையும் தொடர்ந்தால் பொருளாதாரச் சீர்கேடு, கலாசார சீரழிவு, தேசிய பாதுகாப்பு அனைத்தும் பாதிக்கப்பட்டு எமது மக்கள் பிச்சை எடுக்க மேற்குலகை நாடவேண்டி வரும் என்றார். (மு)

## வவுனியாவில்...

ள்ளானதில் ஆறு பேர் படுகாயமடைந்துள்ளனர். வவுனியா, செட்டிகுளம், மெனிக்பாம் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்து குறித்து மேலும் தெரிய வருவதாவது.

வவுனியாவிலிருந்து செட்டிகுளம், மெனிக்பாம் நோக்கிச் சென்ற இ.போ.சபை பயணிகள் பேருந்து ஒன்று மெனிக்பாம் பகுதியில் பாதுகாப்பற்ற புகையிரத கடவையை கடக்க முயன்ற வேளையில் மதவாச்சியிலிருந்து மன்னார் நோக்கி பயணித்த புகையிரதத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் பேருந்தின் சாரதி உட்பட அதில் பயணித்த 6 பேர் படுகாயமடைந்துள்ளனர். பேருந்தின் சாரதி கவலைக்கிடமான நிலையில் செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ் விபத்து குறித்து செட்டிக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இதேவேளை, விபத்து இடம்பெற்ற புகையிரதக் கடவை பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை எனத் தெரிவித்து புகையிரதத்தை செல்ல விடாது அரை மணிநேரம் மக்கள் அதனை மறித்து வைத்திருந்தனர். இதனால அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது டன் சம்பவ இடத்திற்கு சென்ற செட்டிக்குளம் பொலிஸார் அப்பகுதியில் பாதுகாப்பு கடவைக்கு இருவரை நியமிப்பதாக வழங்கிய வாக்குறுதியை அடுத்து மக்கள் புகையிரதம் செல்ல அனுமதித்திருந்தனர்.(மு-250,15,112)

## யாழில் காரை...

கன்னியர்மட வீதி சந்தி புகையிரத கடவையிலேயே நேற்றைய தினம் 1.30 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த பாதுகாப்பற்ற புகையிரதக்கடவையை கடப்பதற்கு பெண் வைத்தியரின் கார் மற்றும் வேறு வாகனங்கள் முயற்சித்த போது காங்கேசன்துறையில் இருந்து அதிசொகுசு புகையிரதம் குறித்த இடத்தை நெருங்கியுள்ளது. அப்போது புகையிரத கடவையை கடக்க முற்பட்ட காரை மோதித்தள்ளியுள்ளது. கார் எதிரே தூக்கி வீசப்பட்டு பாரிய சேதமடைந்தது. ஆனால் அதில் பயணம் செய்த பெண் வைத்தியர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

குறித்த புகையிரத கடவையில், கடவை கேற் பழுதடைந்து காணப்பட்டதால் கடவை காப்பாளர் கைகளால் சைகை மூலம் போக்குவரத்தை சீர் செய்துவருவதாகவும், பாதுகாப்பு கடவையை சீரமைத்து தருமாறு உரிய தரப்பினரிடம் கோரியிருந்த போதும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, சைகை மூலம் போக்குவரத்தை சீர் செய்த போதும் சிலர் அதை மீறி செல்ல முற்படுவார்கள். இதனால் வாக்குவாதங்கள் ஏற்படுகின்றன எனவும் குறித்த காப்பாளர் தெரிவித்திருந்தார்.

இந்த விபத்தினையடுத்து குறித்த புகையிரத கடவைக் கேற் நேற்றைய தினம் மாலை மீள சீரமைக்கப்பட்டிருந்தது. குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மு-4,9)

# தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள் ஆளுநரால் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட பரீட்சையில் தோற்றி நேர்முகத் தேர்வில் தெரிவாகிய 25 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான நியமனக்கடிதங்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களை ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியதன் பின்னர் அவர்கள் முன்னிலையில் அவர்களுக்கான நியமனக் கடிதங்களை வடமாகாண பிரதம செயலாளர் பத்திநாதன் அவர்களிடம் வழங்கினார்.

நியமனங்களை பெற்றுக்கொள்ளும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்த அவர், பாகுபாடு இன்றி அனைத்து மக்களுக்கும் சிறந்த சேவையாற்ற வேண்டும் என இதன்போது அவர் கேட்டுக்கொண்டார். (மு-60)


### தேவை

திருநெல்வேலியில் உள்ள எமது நிறுவனத்தின் சிறிய விடுதிக்கு சமையல் வேலை தெரிந்த இரவு/பகல் நேர ஆண் தொழிலாளி தேவை.

தொடர்பு:-
0779530496, 0212222478

(036)



## உளம் நிறைந்த வாழ்த்துக்கள்

### செல்வி கோபிகா முருகேசு



கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டத் துறையில் கல்வி பயின்று கடந்த 02.08.2017 அன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் சட்டமாணிச் சிறப்பு (LLB.Hons) பட்டம் பெற்ற இத்தாவில், பளையை வசிப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி முருகேசு அன்னலட்சுமி அவர்களின் கனிஷ்ட புதல்வி செல்வி கோபிகா முருகேசு அவர்களை மேலும் பல உயர்வுகள் பெற்று நாட்டுக்குச் சேவையாற்ற மனதார வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துபவர்கள்**

திரு.திருமதி குலவீரசிங்கம் அன்னம்
மாமா-அத்தை குடும்பத்தினர்
திருமதி க.பூரணம்-அம்மம்மா
திரு.திருமதி சுந்தரலிங்கம் வாகேஸ்வரி
மாமா-அத்தை குடும்பத்தினர்
இத்தாவில், பளை

(030)



# 31ஆம் நாள் நினைவலைகள் அந்தியேட்டி அழைப்பு

## அமரர் லோகேஸ்வரன் தயாவதி (மாலா அக்கா)



என் அன்பிற்கும் மதிப்புக்கும் உரிய நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் நான் நேரடியாக அழைக்க சந்தர்ப்பம் கிடையாமைக்காக முதலில் இருகரம் கூப்பி மன்னிப்பு கோரிக்கொண்டு, கடந்த 06.07.2017 வியாழக்கிழமையன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தின் 'நவரசநாயகி' அமரர் லோகேஸ்வரன் தயாவதி (மாலா அக்கா) அவர்களின் 31ஆம் நாள் நினைவாக அந்தியேட்டி கிரியையும் நாளை 06.08.2017 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் இடம்பெற்று தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

இங்ஙனம்
கந்தரோடை குடும்பத்தினர்

(039)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாமல் விற்ற கார் குறித்து நீதிமன்றத்தின் உத்தரவு



பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு சொந்தமாக இருந்து, பின்னர் பிறிதொருவரால் கொள்வனவு செய்யப்பட்ட சொகுசுக் கார் ஒன்றை விடுவிக்கத் தேவையான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மூன்று வாரங்களுக்குள் மேற்கொள்ளுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்த வழக்கு கடுவலை நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த கார் கடுவலை பகுதியிலுள்ள வாகனம் திருத்தும் நிலையம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த நிலையில், நிதி குற்ற விசாரணைப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டது.

இதனையடுத்து, இது தொடர்பில் அவர்களால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த வாகனம் ஒரே இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையால் சேதத்திற்குள்ளாகலாம் என்பதால், அதனை விடுவிக்க உத்தரவிடுமாறு, பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி கோரினார்.

எனினும், தொடர்ந்தும் இது குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், குறித்த காரை விடுவிக்க ஆட்சேபனை தெரிவிப்பதாக முறைப்பாட்டாளர்கள் தரப்பு குறிப்பிட்டுள்ளது.

விடயங்களை ஆராய்ந்த நீதிமன்றம், மூன்று வாரங்களுக்குள் இந்த வாகனத்தை விடுவிக்கத் தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு உத்தரவிட்டுள்ளது. மேலும், இந்த வழக்கு எதிர்வரும் 31ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ-7)


## குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

## Special Treatment for Gastric Ulcer

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer),வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.

**ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


# தவறுகளைத் தடுத்து நிறுத்தக்கூடிய வல்லமை உள்ளவர்களாக மாறவேண்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

**பண்பட்ட சமூகத்தை உருவாக்குவதற்கு தவறுகளைத் தட்டிக் கேட்கவும் தடுத்து நிறுத்தக்கூடிய வல்லமை உள்ளவர்களாக எம்மவர் ஒவ்வொருவரும் மாற வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

காக்கைதீவு பொதுச் சந்தை கட்டடத் திறப்புவிழா நேற்றைய தினம் சந்தை வளாகத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்.

இந்த இலத்திரனியல் யுகத்தில் மாற்றங்கள் என்பது தவிர்க்க முடியாததாகின்றன. இந்த மாற்றங்களுக்கு ஏற்ப நாமும் எமது விற்பனை நடவடிக்கைகளில் முன்னேற்றகரமான மாற்றங்களை கொண்டு வருவதுடன் சுற்றுச் சூழலுக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு எம்மை நாம் தயார்ப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

எந்தவொரு தொழிலை எடுத்துக் கொண்டாலும் மாற்றம் என்பது தவிர்க்க முடியாதது. மாற்றங்கள் என வரும் போது பழக்கங்களுக்கு, பரீட்சயங்களுக்குப் பழக்கப்பட்ட நாங்கள் சினமடைகிறோம், சீறிவிழுகின்றோம். ஆனால் ஆர அமர ஆறுதலாய் இருந்து சிந்தித்தால் மாற்றங்கள் வாழ்க்கையில் மறுக்க முடியாதவை என்பது புலனாகும்.

நாங்கள் அண்மைக் காலங்களில் பலாத்கார நடவடிக்கைகளுக்கு அடிமையாகி விட்டோம். இன்றைய ஜனநாயக யுகத்தில் பலாத்காரத்திற்கு இடமளிக்காது வாழ நாம் பழகிக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பிரதேசசபையும் தனது பிரதேசத்திற்கு உட்பட்ட பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளை அவதானிப்பதற்கும் அவற்றை நெறிப்படுத்துவதற்கும் ஏற்ற அதிகாரங்களைக் கொண்டிருக்கின்ற போதும் அவ் அதிகாரங்கள் அடக்கு முறைகளாக மாற்றம் பெறாது சிநேக வழியில் அவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய ஆற்றல்களை அவை கொண்டிருத்தல் அவசியமாகும்.

நாளுக்கு நாள் முன்னேற்றமடைந்து வரும் சமுதாய வளர்ச்சியில் நீங்களும் பங்குதாரர்களாக இணைந்து கொண்டு ஒரு பண்பட்ட சமூகத்தை உருவாக்குவதற்கும் தவறுகளை தட்டிக் கேட்கக் கூடிய அல்லது தடுத்து நிறுத்தக்கூடிய வல்லமை உள்ளவர்களாகவும் நீங்கள் மாற வேண்டும் என எதிர்பார்க்கின்றேன். அது உங்களால் முடியும்.

உங்கள் உங்கள் பகுதிகளில் ஏற்படக் கூடிய தீய செயல்கள்,போதைப்பொருள் பழக்கவழக்கம், களவு நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபடக்கூடிய மிகக் குறுகிய தொகுதியினரை அடையாளம் கண்டு அவர்களுக்கு அறிவுரை கூறி திருத்த முயலுங்கள்.

அது முடியாவிட்டால் சட்டரீதியாகவாவது அவர்களைத் திருத்தி அவர்களையும் இச் சமுதாய நீரோட்டத்தில் பங்குதாரர்களாக இணைத்துக் கொண்டு எமது பயணத்தை தொடர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# அவுஸ்திரேலியாவிலிருந்து நேற்று 15 இலங்கையர்கள் நாடு கடத்தல்

அவுஸ்திரேலியாவில் இருந்து 15 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். குறித்த 15 பேர் நேற்றுக் காலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு நுழைந்திருந்த சந்தர்ப்பத்தில், அந்த நாட்டு பாதுகாப்பு பிரிவினால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட அனைவரும் ஆண்கள். இவர்கள் அங்குள்ள தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த 15 பேரும் நேற்றுக் காலை 7.30 மணியளவில் அவுஸ்திரேலியாவுக்கு சொந்தமான SND1 ரக ஸ்கை ட்ரேடஸ் என்ற விசேட விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் இவர்கள் ஒப்படைக்கப்பட்ட பின்னர். விமான நிலைய குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகளினால் வாக்கு மூலம் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் இவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர். (இ-7)

# 'மா விலையைக் குறைத்தால் பாண் விலையை குறைப்போம்'

"இறக்குமதி செய்யப்படும் கோதுமைமாவின் விலை குறைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், மா விலை இன்னும் குறைக்கப்படவில்லை. மாவின் விலை குறைக்கப்படும் வரையிலும் பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்தி பண்டங்களின் விலைகளைக் குறைக்க முடியாது" என்று, அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

"மாவின் விலையைக் குறைத்த உடனேயே, அதற்குச் சமாந்தரமாக பாண் உள்ளிட்ட சகல வகையான, பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகளையும் குறைப்போம்" என்று, அந்தச் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் கோதுமை மாவுக்கான வரி, 25 ரூபாவிலிருந்து 15 ரூபாய் வரையிலும் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் குறைக்கப்பட்டுள்ளது. (இ-7)


## வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை

## Special Treatment for Rheumatism

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

**சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


# சீனக் கடற்படையின் பாரிய மிதக்கும் வைத்தியசாலை இலங்கை வருகிறது



சீன கடற்படையின் அதி நவீன நடமாடும் வைத்தியசாலைக் கப்பலான, ஆர்க் பீஸ் நல்லெண்ணப் பயணமாக நாளை இலங்கைக்கு வரவுள்ளது. இந்தக் கப்பல் எதிர்வரும் 9ஆம் திகதி வரை கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் என்று சீன தூதரகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி, இந்த மிதக்கும் வைத்தியசாலையில் இலங்கையர்களுக்கு இலவச மருத்துவ உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது, ஆர்க் பீஸ் கப்பல், சீனாவினால் கட்டப்பட்ட மிகப் பெரிய வைத்தியசாலைக் கப்பல் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நயினாதீவு இரட்டங்காலி

# அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமான் தேவஸ்தானம்

## ஏவிளம்பி வருட மஹோற்சவம் - 2017

# தேர் வெள்ளோட்ட விழா

**நயினாதீவு இரட்டங்காலி அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமானுக்கும் விநாயகப் பெருமானுக்கும் உள்ளூர், வெளியூர், புலம்பெயர் முருகன் அடியார்களினால் புதிதாக அமைக்கப்பட்ட**

## சிற்ப சித்திரத் தேர்கள் வெள்ளோட்ட நிகழ்வு

இன்று 05.08.2017ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து "கந்தரதம்" வெள்ளோட்ட சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெற வுள்ளது. அடியார்கள் அனைவரும் வருகை தந்து முருகப் பெருமானின் இஷ்ட சித்தி களைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

**திருத்தேர்கள் அமைப்பு**
**சிற்பாசாரி தம்பிராசா - கதிர்காமநாதன் குழுவினர்**
**மட்டுவில், சாவகச்சேரி**
**ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சிற்பாலயம்**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**இரட்டங்காலி**
**ஸ்ரீ முருகப் பெருமான் ஆலயம்**
**நயினாதீவு.**

**இங்ஙனம்**
**தேர் திருப்பணிச் சபையினரும்**
**ஆலய பரிபாலன சபையினரும்**

(037)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் நல்ல மனநிலையுடன் கற்பிப்பதற்கு தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்படும்

## ஜனாதிபதி மைத்திரி உறுதி

ஆசிரியர்கள் நல்ல மனநிலையுடன் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் வழங்கக்கூடிய அனைத்து வசதிகளையும் நிறைவு செய்வதாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அநுராதபுரம் வலிசிங்க சரத்சந்ர மகா வித்தியாலயத்தில் புதிய கட்டட தொகுதியை நேற்று முற்பகல் திறந்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிள்ளைகளுக்குகல்வியை வழங்கி அவர்களது அறிவை மேம்படுத்துவதற்காக அதிபர், ஆசிரியர்கள் மேற்கொள்ளும் அர்ப்பணிப்பு ஒருபோதும் சம்பளத்துக்கு என மட்டுப்பட்டதல்ல என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பாடசாலைக்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு பிள்ளைகளால் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. நினைவு பலகையை திரைநீக்கம் செய்து ஜனாதிபதி கட்டடத்தை மாணவர்களுக்கு உரித்தாக்கி கண்காணிப்பு விஜயத்திலும் ஈடுபட்டார்.

அழகியல்துறையில்தேசிய மட்டத்தில்வெற்றிபெற்றமூன்று மாணவர்களுக்கு ஜனா திபதி பரிசில் வழங்கினார். அதிபர் டி.ரணசிங்கவால் ஜனாதிபதிக்கு விசேட நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

அமைச்சர் துமிந்த திசாநாயக்க வடமத்திய மாகாண ஆளுநர் பி.பீ.திசாநாயக்க, முதலமைச்சர் பேஷல் ஜயரத்ன உள்ளிட்டோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அத்துடன் ஜனாதிபதி அவர்கள் இதற்கு முன்னர் அநுராதபுரத்திற்கு விஜயம் செய்திருந்தபோது அநுராதபுரம் நிவந்தகச்சிய வித்தியாலய 12 ஆம் ஆண்டு மாணவியானஏ.டிடிசத்சரணிவிடுத்த கோரிக்கைக்கமைய அந்த மாணவியிடம் ஜனாதிபதி அன்பளிப்பு செய்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, பிள்ளைகள் உலகை வெற்றி கொள்வதற்கான வாய்ப்பு க்களை வழங்குவதற்காக அரசாங்கம் உயர் வசதிகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு நீதவான் சமிந்த கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

சரியான சாட்சியங்கள் இல்லாமல் வெறும் சந்தேகத்தின்பேரில் ஐந்து பேரைக் கைது செய்து அலைக்கழித்த இரு பொலிஸ் பரீட்சகர் களுக்கு (இன்ஸ்பெக்டர்கள்) பாணந்துறை பிரதம நீதவான் சமிந்த லியனகே கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவர்கள் ஐவரும் பள்ளிவாசலொன்றின் மீதும், கடையொன்றின் மீதும் பெற்றோல் குண்டுகளை வீசினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். எனினும், வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அவர்களுக்கு எதிரான சாட்சியங்கள் எதுவும் பொலிஸாரால் முன்வைக்கப்படவில்லை.

இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபிக்க போதிய ஆதாரங்கள் இல்லையென சட்டமா அதிபரும் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

அதனடிப்படையில் இவர்களைக் கைது செய்து வழக்கு தொடர்ந்திருந்த கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவின் பொலிஸ் பரீட்சகரான நெவில் டீ சில்வாவுக்கு பாணந்துறை தெற்கு தலைமையகப் பொலிஸ் பரீட்சகரான துஷார டீ சில்வாவுக்கும் பகிரங்க நீதிமன்றத்தில் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கு ஆதாரங்கள் எவையேனும் இருப்பின் அவற்றை ஒக்டோபர் 30ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டுமென நேற்று முன்தினம் உத்தரவிட்ட நீதவான் சந்தேகநபர்களை அதுவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (இ-7)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிழக்கிலிருந்து ரூ.9 மில்லியன் நிவாரணம்

நாட்டில் கடந்த மே மாதம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக கிழக்கு மாகாண சபை அவசர தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது. அதற்கான நிதியாக 09 மில்லியன் ரூபாவினை சேகரித்து நேற்று முன்தினம் கிழக்கு மாகாண சபையில் இருந்து சென்ற உயர்மட்டக்



குழு பாதிக்கப்பட்ட மக்களிடம் கையளித்துள்ளது.

மாத்தறை, தெனியாய தொகுதி மற்றும் பிட்டபெத்தர பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த மற்றும் சேதமடைந்தவர்களுக்கான கட்ட பொருட்கள் மற்றும் உயிர் இழந்தவர்களுக்கான உதவிகள் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், அமைச்சர்கள், உத்தியோகத்தர்களால் 9 மில்லியன் ரூபா அம் மக்களிடம் கையளிக்கப்பட்டது. (இ-7)

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை புதிய துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் யோ.திவாகர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு அனுசரணையாளர்களாக துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்கு லயன் பூமா தேவி மகாதேவா ஞாபகார்த்தமாக லயன் செ.மகாதேவாவும் தீவகத்தைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் அமரர் செல்லையா இந்திரஜித் ஞாபகார்த்தமாகவும் இராஜேஸ்வரி திருமண மண்டபத்தினரும் நிதியுதவி வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வில் லயன்ஸ் கழகம் மாவட்டம் 301 (B1) இன் 2 ஆவது உப மாவட்ட ஆளுநர் தொழிலதிபர் லயன் பி.மகேந்திரன் தம்பதிகளும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச் சங்கத்தினர்,வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர், வைத்தியசாலை சமூகத்தினர், லயன்ஸ் கழக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொள்வர். (இ)

# அவன்கார்ட் நிறுவன விவகாரம்

# நிஷங்க சேனாதிபதி-பாலித பெர்னாண்டோ இடையே 355 இலட்சம் ரூபாய் இலஞ்சமாகப் பரிமாற்றம்

(கொழும்பு)

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஷங்க சேனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் இணைப்பதிகாரியான மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ ஆகியோருக்கு இடையில் 355 இலட்சம் ரூபா இலஞ்சமாக பரிமாற்றப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பான சீராய்வு மனு ஒன்று கொழும்பு மேல் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் இந்த சீராய்வு மனு கையளிக்கப்பட்டுள்ளது. மேலும் 47 குற்றச்சாட்டுகளுடனான குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடற்படையின் கீழ் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை அவன்கார்ட் நிறுவனத்திற்கு கையளிப்பதற்காக 355 இலட்சம் ரூபா இலஞ்சமாக வழங்கப்பட்டதாக அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் 30 சாட்சிகள் மற்றும் 55 ஆவணங்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவதாக இலஞ்சஊழல்விசாரணைஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த குற்றச்சாட்டு தொடர்பில் அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஷங்க சேனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் இணைப்பதிகாரியான மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ ஆகிய இருவருக்கும் வெளிநாடு செல்ல கொழும்பு முதன்மை நீதவான் நீதிமன்றம் தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராசி பலன்

05.08.2017

(ஆடி 20, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

திரயோதசி முன்னிரவு 9.49 மணிவரை

பூராடம் முன்னிரவு 1.11 மணிவரை

சுபநேரம் 3.04-4.34 மணிவரை

இராகுகாலம் 9.04-10.34 மணிவரை

பிரதோச விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரோகினி, மிருகசீரிடம் | | ராகு<br>செவ்<br>சூரி |
| கேது | | | புத |
| சந் | சனி | | குரு |

**மேடம்** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது, விரயங்கள் கூடும் நாள், மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

**இடபம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** நட்பு வட்டம் விரிவடையும் நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்** மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, கற்பனை மிகுதியான நாள்

**சிம்மம்** உள்ளம் மகிழும் சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சிக்கு உறு துணை புரிவீர்கள், வரு மானம் திருப்திகரமாக அமை யும், நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங் களை மறந்து செயற்படு வது நல்லது, காரிய வெற் றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**மகரம்** பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும் நாள்.

**கும்பம்** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பொது வாழ்வில் பாராட் டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெற லாம், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங் கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டடத் திறப்பு எப்போது?



கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்காக கட்டப்பட்ட கட்டட வேலைகள் முடிவுற்றும் இதுவரை திறந்து வைக்கப்படவில்லை என அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி வைத்தியசாலைக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட இக் கட்டட வேலைகள் ஒரு மாதத்திற்கு முன்னர் நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வேலைகள் நிறைவடைந்தும் ஏன் இக் கட்டடம் இன்னும் திறக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (இ-60)

## மருதங்கேணி வைத்தியசாலையில்

# அவசர சிகிச்சைப் பிரிவு உட்பட 2 கட்டடங்கள் திறக்கப்படவில்லை

மருதங்கேணி வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட இரண்டு கட்டடங்கள் இதுவரை திறந்து வைக்கப்படவில்லை என வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்திக்குழுக்கூட்டம் கடந்த முதலாம் திகதி இணைத்தலைவர்களான சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப் பினர்களான எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இதில் மருதங்கேணி வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினரால் இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள பிரேத அறை மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு என்பன திறக்கப்படவில்லை எனவும் அதனைத் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டதுடன் வைத்தியர்கள், தாதியரின் பற்றாக்குறை இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-60)

# நாட்டுக் கூத்துப்போட்டியில் மகாஜனக் கல்லூரி சாதனை



மாகாண மட்ட கூத்துப் போட்டியில் மகாஜனக் கல்லூரியின் வடமோடிக் கூத்து இம்முறையும் முதலாம் இடத்தினைப் பெற்று சாதனை படைத்துள்ளது. அத்தோடு இம்முறை காத்தவராயன் கூத்துப் போட்டியிலும் மாகாண மட்டத்தில் 2 ஆம் இடத்தினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விரு கூத்துக்களையும் நாடகத்துறை ஆசிரியர் து.அயூரன் நெறியாள்கை செய்திருந்தார். (இ-10)

# உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் காட்சிப்படுத்தலும் சந்தைப்படுத்தலும்

இலங்கை வங்கியால் நடைமுறைப்படுத்தப்படும் வறுமை ஒழிப்புக் கடன் திட்டத்தில் இணைந்துள்ள பயனாளிகளால் (சிறு குழு நண்பர்கள்) உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் காட்சிப்படுத்தலும் சந்தைப்படுத்தலும் எதிர்வரும் 8, 9, 10 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை அரசடிவீதி, கந்தர் மடத்தில் அமைந்துள்ள யாழ். சைவப் பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக பிரதிப் பொது முகாமையாளர் (Sales & Channel Management) செனரத் பண்டார கலந்து கொள்ளவுள்ளார். (இ-3-78)

# 13வது சர்வதேச மாநாடு யாழில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் 13ஆவது சர்வதேச மாநாடு இன்றும் நாளையும் இடம்பெறும். இம் மாநாட்டு ஆய்வரங்கங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கிலும், கவியரங்கம், கருத்தரங்கம், கலை நிகழ்வுகள் என்பன யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டல் அரங்கத்திலும் இடம்பெறும். (இ-3-102)

# வழிகாட்டல் கருத்தரங்கு

(கரணவாய்)

வடமராட்சிக்கிழக்கு லயன்ஸ் கழகத்தினரால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களிற்கான வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்று இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை தாளையடி றோ.க.த.க பாடசாலை மண்பத்தில் நடைபெறும் என வடமராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத் தினர் அறிவித்துள்ளனர். (இ-60)

# மாணவர்களுக்கான கருத்தரங்கும் சுற்றாடல்சார் கண்காட்சியும் நாளை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில், கோண்டாவில், நல்லூர் பொது நூலகங்கள் இணைந்து நடத்தும் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான கருத்தரங்கும் சுற்றாடல் சார் கண்காட்சியும் நாளை 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிமுதல் நண் பகல் 12 மணிவரை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலக மண்டபத் தில் பிரதேச சபை செயலாளர் எஸ். சுதர் ஜன் தலைமையில் இடம் பெறும். (இ-7)

# முன்பள்ளியின் மெய்வல்லுநர் போட்டி நாளை

CHILDREN'S WORLD முன்பள்ளியின் மெய்வல்லுநர்ப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இணுவில் வைத்தியசாலைக்கு அருகிலுள்ள CSI தேவாலயத்தில் இடம் பெறும்.

கே.சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கணனி பயன்பாட்டு உதவியாளர் எஸ்.கோவிந்தன் கலந்து கொள்வார். (இ-3)

# பண்ணையாளர்களுக்கான உதவிகள் வழங்கிவைப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியுதவியின் கீழ், சுன்னாகம், கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட, தெரிவு செய்யப்பட்ட கால்நடை பண்ணையாளர்களுக்கான பண்ணை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில், சுன்னாகம் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது.

சுன்னாகம் கால்நடை வைத்திய அதிகாரி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் ப.கஜதீபன் கலந்து கொண்டு முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான உதவிப்பொருட்களை வழங்கி வைத்தார். வடக்கு மாகாணத்தில் கால்நடை வளர்ப்பு மற்றும் பண்ணைச் செய்கையை முன்னேற்றும் முகமாக வடமாகாணசபை தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மேற்படி உதவி வழங்கும் செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# துணிப்பை தயாரிப்பு பயிற்சி சாவகச்சேரியில் ஆரம்பம்







சாவகச்சேரி நகர இளைஞர் கழகமும் சாவகச்சேரி நகராட்சி மன்றமும் இணைந்து மேற்கொள்கின்ற துணிப்பை தயாரிப்பு பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் காலை நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தில் இடம் பெற்றது. இளைஞர் கழக தலைவர் ஞா. கிஷோர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனும் சிறப்பு விருந்தினர்களாக தமிழரசுக்கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் க.அருந்தவபாலனும் வர்த்தகர் ந.கவிச் சந்திரனும் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் மாதத்தில் இலங்கையில் பொலித்தீன் பாவனை முற்றாக தடை செய்யப்படுகின்ற பொழுது அதற்கு மாற்றீடாக துணிப்பைகளின் பாவனை அதிகரிக்கப்படும். துணிப்பைகள் தயாரிப்பு பயிற்சி நெறியானது பிரதேச செயலகத்தி னால் தெரிவு செய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கு இளைஞர் கழகத்தின் அனுசரணை யுடன் பயிற்சிகள் வழங்கப்படவுள் ளது. 30 பேர் இப் பயிற்சி நெறிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பயிற்சி நிறைவில் உற்பத்தி செய்யப்படுகின்ற துணிப் பைகளுக்கான சந்தை வாய்ப்பும் ஏற்படுத்தப்படவுள்ளது. (இ-89)




# "மகப்பேறின்மை" சிறப்புக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் பெண் நோயியலும் மகப்பேறின்மையும் என்னும் தொனியில் சிறப்புக் கருத்தமர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்திற்கு அருகில் உள்ள தெல்லிப்பழை லயன்ஸ் கழக மண்டபத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் நா.தயாரூபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கருத்துரையை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பெண் நோயியல் மகப்பேற்ற வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி [illegible] வழங்குவார். (இ

# வனவள ஜீவராசிகள் திணைக்கள காணி தொடர்பில் ஆராயக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் வனவள ஜீவராசிகள் திணைக்களத்திற்கு என வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒதுக்கப்பட்ட இடம் தொடர்பில் ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 8 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறும் என மருதங்கேணி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மருதங்கேணிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த முதலாம் திகதி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற போது சுண்டிக்குளம் பகுதியிலும் நாகர் கோவிலின் மூன்று கிராம அலுவலர் பிரிவினையும் உள்ளடக்கிய பொது மக்களின் குடியிருப்புக்கள், ஆலயங்கள், விளை நிலங்கள், மேட்டுக் காணிகள் என்பன வனவள ஜீவராசிகள் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டமை தொடர்பில் கருத்துக் கூறப்பட்ட போது இது தொடர்பில் விரிவாக ஆராய்வதற்காக 08.08.2017 அன்று யாழ். மாவட்ட செயலகத்தில் இதற்கான கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் ரவி கருணாநாயக்க குறித்து ஜனாதிபதியே தீர்மானிக்க வேண்டும்

## கூட்டு எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு



வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே தீர்மானிக்க வேண்டுமென கூட்டு எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் ஊழல் மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ஓர் அமைச்சருக்கு பதிலீடாக வேறு ஓர் அமைச்சரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதியே ரவி கருணாநாயக்கவை நிதி அமைச்சிலிருந்து, வெளிவிவகார அமைச்சிற்கு மாற்றினார் என சுட்டிக்காட்டியுள்ள அவர் வெளிவிவகார அமைச்சர் ஒருவர் தொடர்பிலான நம்பிக்கை மிகவும் முக்கியமானது என சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச சமூகத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான ஓர் ஊடகமாக வெளிவிவகார அமைச்சரே செயற்பட்டு வருகின்றார் எனவும் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் அரசாங்கத்தினது நன் மதிப்பை வலுவிழக்கச் செய்யும் எனவும் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். (இ-7)

# பொறுப்பற்ற நீதியமைச்சர்; பிரதியமைச்சர் அஜித் விசனம்

நாட்டின் நீதி அமைச்சர் தனது பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்ற வேண்டும் என மின் சக்தி எரிசக்தி பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

நிறைவு செய்யப்பட்ட 88 ஊழல் மோசடி விசாரணைகள் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தும், அவற்றில் 15 ஊழல்களுக்கு எதிராகவே வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது பொலிஸாருடன் தொடர்புபட்ட பிரச்சினையல்ல. மாறாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் நீதி அமைச்சுக்குமே இந்தப் பிரச்சினை பொறுப்பானது என பிரதியமைச்சர் பெரேரா சுட்டிக்காட்டினார்.

கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் அரசியலமைப்பு தொடர்பான செயலமர்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறியுள்ளார். (இ-7)


**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பளையில் டச்சு றோட்டில், அரச வைத்தியசாலை பிரதான வீதி ஆகியவற்றுக்கு அண்மையாக முப்பது (30) பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (தரகர்கள் தேவையில்லை)

தொடர்புகளுக்கு
018 0718381119, 077 3960 224

**யாரிடம் பேசுவது?**

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


# இடைக்கிடையே பெய்யும் மழையால் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம்

நாட்டின் பல பாகங்களில் இடைக்கிடையே பெய்து வரும் மழையால் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் அதிகரித்திருப்பதால் நாடெங்கும் மேற்கொள்ளப்பட்டுவரும் சுத்திகரிப்புப் பணிகளைத் தொடர்ந்து நடத்துமாறும் சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தனது அமைச்சு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி நேற்று ஆரம்பமான டெங்கு ஒழிப்புப் பணிகள் நாளையும் நாடெங்கும் தொடர்ந்து நடைபெறும்.

பாடசாலைகள், வீடுகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், காலி, மாத்தறை, கண்டி ஆகிய மாவட்டங்களில் தீவிர கவனம் செலுத்தப்படும்.

இந்தப் பணிகளுக்கு சுகாதார ஊழியர்கள், முப்படையினர் உட்பட 2 ஆயிரம் குழுக்கள் ஈடுபடுத்தப்படவுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வருடம் சுகாதார அமைச்சு மேற்கொண்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளின்போது நாடெங்கும் 14 இலட்சத்து 63 ஆயிரத்து 33 இடங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவற்றுள் 34 ஆயிரம் இடங்களில் டெங்கு நுளம்புக் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டன. 23 ஆயிரத்து 519 பேருக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

# RK என்றால் யார்? உதய கம்மன்பில விளக்கம்



(கொழும்பு)

ரவி கருணாநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு மனச்சாட்சிப் படி ஐக்கிய தேசிய கட்சியின் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று கூட்டு எதிர்க்கட்சி கூறியுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இதனை கூறியுள்ளார்.

ரவி கருணாநாயக்க விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் RK என்ற நபரை தெரியாது என்று கூறியிருந்த போதிலும், அது அவர் தான் என்று தனக்கு தெரியும் என்றும் உதய கம்மன்பில கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களின் பெயர்களில் முதல் எழுத்து R என்ற எழுத்தும் குடும்பப் பெயராக K என்ற எழுத்தும் வரக்கூடிய ஒரே உறுப்பினர் ரவி கருணாநாயக்க என்று அவர் கூறியுள்ளார். (இ-7)


**நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை**

கலைமாமணி

**Dr.S.S.சர்மா குருஜீ**
82/4 கலட்டி அம்மன் கோவிலடி,
வண்ணார்பண்ணை.
077 784 1558 (சி. 8817)

**யாழ். மண்ணில் முதன் முறையாக சினிமா பாடல்களுடன்**

பிரபல தென்னிந்திய பாடகர் கலைமாமணி
**உன்னிகிருஷ்ணன்**
500/=, 1000/= டிக்கெட் கொள்வனவு செய்பவர்களுக்கு ஆசன வசதி உண்டு.
**உத்ரா உன்னிகிருஷ்ணன்**
இணைந்து வழங்கும்
**இன்னிசை பாடிவரும்...**
மாபெரும்
திரை இசை நிகழ்ச்சி
மாலை 6.00 மணிக்கு
இம் மாதம் ஆகஸ்ட் 12 இல்



நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: K.T.பிரசாத்
யாழ். ஸ்ரான்லி வீதி லிங்கம் கூல் பார் முன்பாக உள்ள மைதானம் (வெலிங்டன் தியேட்டர்)
(006)
Event Management C.A.C Tel: 077 550 4910
டிக்கெட்டுக்கள்: 300/= 500/= 1000/=

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 28 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/மலேசியா<br>தொ.இ: B/6676 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 35 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/3203 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 28<br>உயரம்: 5'6'<br>தகைமை/தொழில்:B.COM, HNDA/அரசதொழில்<br>தொ.இ: B/6677 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 29<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/3232 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 15<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/6679 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 44<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3233 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: சூரி செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/சாரதி<br>தொ.இ: B/6681 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 40<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:DIPLOMA/ஆசிரியர்<br>தொ.இ: G/3235 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பல தடைகளையும் தகர்த்தெறிந்து

# கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தினுள் நுழைந்தது தனியார் சொகுசு பேருந்து








கிளிநொச்சி தனியார் சொகுசு பேருந்து விபத்துக்குள்ளானதில் சாரதி உட்பட ஆறு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை மூன்று மணியளவில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த சொகுசு பேருந்து ஒன்று வேகக்கட்டுப்பாட்டையிழந்து கிளிநொச்சி வலயக்கல்வி பணிமனைக்கு அருகிலிருந்த மின்சார கம்பங்கள், தொலைத் தொடர்பு கம்பங்கள், யாழ் முஸ்லிம் உணவக முன் பகுதி, செல்வி சலூன் முன் பகுதி இவை அனைத்தையும் சேதப்படுத்தியவாறு வலயக் கல்வி பணிமனை வேலியை பிரித்து பணிமனை கட்டடத்தை இடித்து நின்றது. இதில் பயணித்த பயணிகளில் 5 பயணிகளும் நடத்துநரும் காயமடைந்து நோயாளர் காவு வண்டியில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(3-8-312-271)

# மரத்துடன் மோதியது டிப்பர் வாகனம்



வவுனியா, புளியங்குளத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வாகனம் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இவ்விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மல்லாவியிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த டிப்பர் வாகனம் புளியங்குளம், இராமனூர் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இவ் விபத்தில் டிப்பர் வாகனத்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(8)

# அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பில்

## சிவில் சமூக அமைப்பினர்க்கான செயலமர்வு





புதிய அரசியலமைப்பு தயாரித்தல் தொடர்பில் சிவில் சமூக அமைப்பினருக்கு தெளிவூட்டும் செயலமர்வு ஒன்று நேற்று காலை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முல்லைத் தீவு உதவி மாவட்ட செயலாளர் ஆ.லதுமீரா, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் ஆர்.ராஜமல்லிகை உள்ளிட்ட விருந்தினர்கள் கலந்து கொண்டதோடு 3 பேர்கொண்ட வளவாளர்கள் அணியினால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் உள்ள கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள்,மாதர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், கமக்கார அமைப்பின் உறுப்பினர்கள் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு புதிய அரசியலமைப்பு தயாரித்தல் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. (3-8-281)

# குடிமனைக்குள் பிரவேசிக்கும் குரங்குகளால் அல்லலுறும் மக்கள்

வவுனியா நகரப்பகுதியை அண்டியுள்ள மக்கள் குடியிருப்புக்களில் புகும் குரங்குகள் மக்களுக்கு பல்வேறு அசௌகரியங்களை ஏற்படுத்துவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரையண்டியுள்ள கற்குழி, குட்செட்வீதி, வைரவபுளியங்குளம், உள்வட்ட வீதி, வவுனியா நகரம், குருமன்காடு உள்ளிட்ட பகுதிகளில் நாளாந்தம் வந்து செல்லும் குரங்குள் அப்பகுதியில் உள்ள மக்களது வசிப்பிடங்களில் புகுந்து அவர்களது ஆடைகள், வீட்டு வளவில் உள்ள பொருட்கள், பயன்தரு மரங்களில் உள்ள காய்கள் மற்றும் பழங்கள் என்பவற்றை எடுத்துச் சென்று அயலில் அவற்றை வீசுவதுடன் சிலவற்றை தாம் உணவாகவும் உட்கொள்கின்றன.

வீதிகளில் குரங்குளின் செயற்பாடு காரணமாக விபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனால் தினமும் குரங்குகளுக்கு காவல் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களம் கவனம் செலுத்தி நகரப்பகுதியில் உள்ள குரங்குகளை காடுகளுக்குள் விடுவதற்கு அல்லது விரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர். (3-8-250)

வன்னி வலம்

# வாக்காளர் எண்ணிக்கையில் மாறுபாடு; விளக்கம் கோரி ஆணையாளருக்கு கடிதம்

வவுனியா மாவட்டத்தில் வாக்காளர் எண்ணிக்கையில் காணப்படும் மாறுபாடு குறித்து விளக்கம் கோரி தேர்தல் ஆணையாளருக்கு சிவசக்தி ஆனந்தன் எம்.பி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

வவுனியா மாவட்டத்திற்குட்பட்டதான பிரிவுகளில் வாக்காளர் எண்ணிக்கையில் காணப்படும் மாறுபாடு தொடர்பாக உரிய விளக்கம் அளிக்குமாறு கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ்.இன் செயலாளரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது,

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாக்காளர்கள் இடாப்பிற்கும் வவுனியா வடக்கு பிரதேச சபையின் கீழுள்ள வாக்காளர் இடாப்பிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள வாக்காளர்கள் வித்தியாசத்தை தெளிவுபடுத்தப்படவேண்டும். குறிப்பாக வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு வவுனியா தேர்தல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள 2016 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் பட்டியலில் 11747 பேரும், வவுனியா வடக்கு பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்ட வாக்காளர்கள் பட்டியலில் 8577 பேரும், பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இந்த இரு நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட பட்டியலுக்கிடையில் 3170 வாக்காளர்கள் வித்தியாசப்படுவதற்கான காரணத்தை தெளிவுபடுத்தி உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரம், முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா கிராமத்திலுள்ள வாக்காளர்கள், நெடுங்கேணி பிரதேச சபை வாக்காளர்கள் பட்டியலுடன் இணைக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். அத்துடன் 2015 ஆம் ஆண்டு வெடிவைத்தகல் கிராம சேவையாளர் பிரிவில் 18 பேரே வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தார்கள். தற்போது இந்த கிராம சேவையாளர் பிரிவில் திடீரென 758 வாக்காளர்களாக அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் அறியவருகிறது.

இந்த விடயம் தொடர்பாக நாம் ஏற்கனவே எல்லை மீள் நிர்ணயக்குழுவிற்கு முறைப்பாடு செய்துள்ளதோடு இது தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டங்களில் முன்னிலைப்படுத்தி, அதற்கான விளக்கத்தை வழங்குமாறு கோரப்பட்டபோதும் அதற்கான பதில் இன்றுவரை யாராலும் எமக்கு வழங்கப்படவில்லை.

அப்பிரதேச மக்களின் இந்த கேள்விகளுக்கு நாம் பதிலளிக்க வேண்டியவர்களாகவிருப்பதால் இதற்கான விளக்கத்தை எனக்கு வழங்கி உதவுமாறு தங்களைத் தயவாகக் கேட்டுக் கொள்கிறேன் என்றுள்ளது.

இக்கடிதத்தின் பிரதி வவுனியா மாவட்ட செயலாளர் ரோகண புஸ்பகுமாரவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-8-260)





கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புகளின் அதிகார சபையும், மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து குருதி கொடை முகாம் ஒன்றை நடத்தியுள்ளனர். (படங்கள்: நிபோர்)

# வீதிகளை புனரமைக்க கிரவல் பெற்றுக் கொள்வதில் சிரமம்

## மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு வீதிகளைப் புனரமைப்பதற்கு கிரவல் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் காணப்படுவதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் பா.சிவபாலராஜா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தைகிழக்கு பிரதேச சபையின் கீழ் உள்ள பெருமளவான வீதிகள் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றன.

குறித்த வீதிகளைப் பயன்படுத்தும் மக்கள் அவற்றைப் பயன்படுத்த முடியாமல் இருப்பதாகவும் இந்த வீதிகளைப் புனரமைத்துத் தருமாறும் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். இவ்வீதிகளில் அதிகளவானவை பிரதேச சபைக்குச் சொந்தமான வீதிகளாகக் காணப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பில் மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் சிவபாலராஜா குறிப்பிடுகையில்,

மாந்தை கிழக்கு பிரதேசத்தில் உள்ள கூடுதலான வீதிகள் வருடாந்தம் கிடைக்கப்பெற்ற நிதியொதுக்கீட்டிலிருந்து கணிசமான வீதிகள் புனரமைக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன், கனரக இயந்திரங்களைக் கொண்டும் சில வீதிகளை செப்பனிட்டிருக்கின்றோம். சபைக்கான வருமானமின்மையால் பல்வேறு திட்டங்கள் ஊடாக கிடைக்கின்ற நிதியைக் கொண்டே புனரமைத்து வருகின்றோம்.

சபைக்கான வருமானம் இல்லையென்றும் தெரிவித்த அவர் தற்போது வீதிகளைப் புனரமைப்பதற்கான கிரவலை பெற்றுக்கொள்வதில் பாரிய பிரச்சினையாக உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலைகள் விளையாட்டு விழா





வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தி பிரிவினரின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் மழலைகள் விளையாட்டு விழா- 2017 நேற்று மாலை 2 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மைதானத்தில் சிறப்புற இடம்பெற்றது

இந்நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் மற்றும் வட மாகாண சபை பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன் வடமாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன்,ஆ.புவனேஸ்வரன்,க சிவநேசன், முன்பள்ளி ஆசிரியர்கள் மழலைகள் பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (3-8-281)









## அனுமதிப்பத்திரமின்றி
## மணல் ஏற்றிய குற்றச்சாட்டு

⇨ ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா தண்டம்

⇨ பத்து நாட்கள் கட்டாய சமூக சேவை

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிய மூவருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தினால் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிய மூவரை கைது செய்த கிளிநொச்சி பொலிஸார் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதைத் தொடர்ந்தே குறித்த மூவருக்கும் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச் சட்டத்தின் கீழ் பத்து நாட்கள் கட்டாய சமூக சேவைகளுக்கும் குறித்த மூவர் உட்படுத்தப்பட்டுள்ளனர். (8)

வன்னி வலம்

## மாற்றுத் திறனாளிகளது உற்பத்தி பொருட் கண்காட்சி

டெவ்லிங்க் அமைப்பினரால் சமூக பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகளின்உற்பத்திப் பொருட்களது கண்காட்சி நிகழ்வு 07.08.2017 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி கருணா நிலையத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் உலர் உணவுப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், பழச்சாறுகள் உட்பட பல பொருட்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.(3-8)

## வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை



(வவுனியா)

வவுனியாவில் உள்ள வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிறுத்தல் அளவு தராசுகள் நேற்று திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

வடமாகாண அளவைகள், நிறுவைகள், நியமங்கள் அளவீட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வவுனியா நகர்ப்பகுதி வியாபார நிலையங்களில் அளவு தராசுகளைச் சோதனை செய்யும் நடவடிக்கை இடம்பெறுகிறது.

மேற்குறிப்பிடப்பட்ட திணைக்களத்தின் சட்டதிட்டத்துக்கு அமைவாக நிறுத்தல் அளவு கருவிகளை பரிசோதித்து பதிவு செய்யப்படாத நிறுத்தல். அளவை கருவிகளை பயன்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கு அமைவாக வவுனியா சந்தை உள்ளவட்ட வீதி, பசார்வீதி, முதலாம் குறுக்குத்தெரு, இரண்டாம் குறுக்குத்தெரு போன்ற பல பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டதாக வடமாகாண அளவைகள். நிறுவைகள், நியமங்கள் அளவீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள்தெரிவித்தனர். (3-8-250)

## நோயாளர் விடுதிக்கான அடிக்கல் நாட்டு விழா





வவுனியா, பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் விடுதிக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றைய தினம் இடம் பெற்றது. வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து 18 மில்லியன் ரூபா நிதியில் இந்நோயாளர் விடுதி அமைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ப.சத்தியசீலன், இணைப்பாளர் பா.சிந்துஜன், சுகாதார அமைச்சரின் அலுவலக உத்தியோகத்தர்கள், தாய் சேய் நல பொறுப்பதிகாரி வைத்தியர் எம்.ஜெயதரன், பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்(3-8-250)

# வைத்தியசாலைகளை தரமுயர்த்த அனுமதி

## வடமாகாண சுகாதார அமைச்சர்

வடக்கு மாகாணத்திலுள்ள குறிப்பிட்ட சில வைத்தியசாலைகளை தரமுயர்த்துவதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

மன்னார் முருங்கன் வைத்தியசாலையில் நடைபெற்ற சத்திரசிகிச்சை பிரிவு விடுதி மற்றும் வைத்தியர் விடுதி திறப்பு விழாவில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

வடக்கு மாகாணத்திலுள்ள 8 வைத்தியசாலைகளை தரமுயர்த்துவது தொடர்பில் கோரிக்கையொன்றினை கடந்த வருடம் மத்திய சுகாதார அமைச்சிற்கு அனுப்பியிருந்தோம். இவ்விடயம் தொடர்பாக 2016ம் ஆண்டு நடைபெற்ற மாகாண சுகாதார அமைச்சின் ஆலோசனைக்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு தீர்மானமானது மாகாண அமைச்சர் வாரியத்தின் அனுமதியுடன் மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்டு சபையின் ஆதரவுடன் மத்திய சுகாதார அமைச்சிற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதில் வவுனியா மாவட்டத்தில் பொது வைத்தியசாலையை மாகாண பொது வைத்தியசாலையாகவும், நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலையை தள வைத்தியசாலையாகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் சிலாவத்துறை, மல்லாவி மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலைகளை தள வைத்திய சாலைகளாகவும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தெல்லிப்பழை தள வைத்தியசாலையை விசேட வைத்தியசாலையாகவும் பருத்தித்துறை தள வைத்தியசாலையை பொது வைத்தியசாலையாகவும் மன்னார் மாவட்டத்தில் முருங்கன் பிரதேச வைத்தியசாலையை தள வைத்தியசாலையாகவும் தரமுயர்த்துவது தொடர்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்நிலையில் கொழும்பில் சுகாதார பணிப்பாளர் நாயகம் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மல்லாவி, புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலைகளை தள வைத்தியசாலைகளாகவும் மன்னார் மாவட்டத்தில் முருங்கன் பிரதேச வைத்தியசாலையை தள வைத்தியசாலையாகவும் தரமுயர்த்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், வவுனியா, தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறை வைத்தியசாலைகளை தரமுயர்த்துவது தொடர்பில் விரைவில் அமைச்சர்கள் மட்டத்தில் கூட்டமொன்று நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிலாவத் துறை, நெடுங்கேணி வைத்தியசாலைகளின் பௌதீக, மனித வளங்களை அபிவிருத்தி செய்த பின்னர் அவற்றையும் தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதென அமைச்சர் மேலும் தெரிவித்தார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—124

## மண்ணின் நுண்ணங்கிகளும் சூழலைப் பாதுகாப்பதில் அவற்றின் பங்கும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள்
எம்மினிய உறவுகளே!

"நஞ்சற்றதேசம்" என்பது எமது அரசாங்கத்தின் கொள்கையாக வரையறுக்கப்பட்டிருக்கின்றது. இந்த கருத்துப் பொதிக்குள் பல விடயங்கள் ஆழமாக உள்ளார்ந்து இருப்பதனை அவதானிக்கலாம். அரசாங்கத்தின் இத்தகைய கொள்கையினால் பலவிதமான நன்மைகள் மக்களுக்கு கிடைக்க வழியுண்டு. அதுவும் நஞ்சற்றதேசம் என்னும் கருத்துக்குள் எமது தேசத்தை. சூழலை இன்னும் அத்தியாவசியப் பொருட்களான உணவு, நீர் என அனைத்தும் நஞ்சற்றதாக கிடைக்க வேண்டும் என்பது மிக முக்கியமானது. விவசாய உள்ளீடுகளில் அசேதன இரசாயனப்பொருட்களுக்கு என்று முக்கியத்துவம் கொடுத்தோமோ அன்றிலிருந்து எமது தேசம் நஞ்சினை உணவாக்க முனைந்து விட்டது எனலாம். பசுமைப் புரட்சியின் மகத்துவங்களை மட்டுமே நாம் பேசிக்கொண்டிருந்தோமே தவிர அதனை கவனமாக பயன்படுத்தாததினால் எமது தேசத்தை மாசாக்கிய அசேதன இரசாயனங்களுக்கு நாம் அடிமையாகி விட்டோமே. பீடைநாசினி மற்றும் அசேதனப் பசளை இல்லையென்றால் எமக்கு விவசாயமே இல்லை என்றாகி விட்டதுவே.

அதிலுள்ள நன்மை தரும் நுண்ணங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். இவ்வாறான நுண்ணங்கிகளின் ஆதிக்கத்தை அதிகரிக்க அவை வாழுகின்ற மண்ணில் அவற்றிற்கான சேதன சேர்வைகளின் கிடைத்தன்மையை அதிகரிக்க வேண்டும்.

விளைநிலத்திற்கு தேவையான மட்கு அதிகமாக இருந்தால் பயிரின் வளர்ச்சியும் மேம்படும். மண்ணிற்ளைகளை வாரியிறைத்து விட்டால் போதும் எனஎண்ணக்கூடாது. காற்றின்றிய சுவாசத்தை ஊக்குவித்தால் காற்றுச் சுவாசம் மூலம் இனப்பெருக்கும் நன்மைதரும் நுண்ணங்கிகள் மண்ணினுள் அழிவுற்று விடும். கிட்டத்தட்ட நீர் கூடி சேறு போன்றதொரு நிலைமை ஏற்படும் போது. வேர்களுக்குத் தேவையான சுவாசம் கிடைக்காமையினால் வேர் மயிர்கள் அழுகத்தாள் பசளையாக விதைத்த தாவரம் பூக்கத் தொடங்கி விடும். ஐம்பது சதவீதம் பூத்திருக்கும் நிலையில் அந்ததாவரத்தை மடக்கி பிரட்டி மண்ணினுள் சேர்த்து உழுது விடுவர். ஓரிரு கிழமைகளுள் சணல் உக்கத் தொடங்கிவிடும். அப்போது நாற்றுப் போட்ட பயிர்களை நடவு செய்வர்.

அவரைக் குடும்பபயிராக இருந்தால் அதுவளியிலுள்ள தழைச்




ணைப் பயன்படுத்தும் போது அதனுள் தாழ்த்து விட்டால் இலைகள் மண்ணினுள் உக்கி வளரும். பயிருக்கு சிறந்த உரமாகி விடும்.

இவ்வகைத் தாவரங்களில் இயல்பாகவே பூஞ்சண எதிர்ப்பு, பக்றீரியா எதிர்ப்பு சக்தி இருப்பதனால் நாற்றுக்களின் வேரினூடாக ஏற்படும் அநேகமான நோய்கள் கட்டுப்படுத்தப் படுகின்றன. இவற்றைமண்ணினுள் சேர்ப்பதனால் விவசாயிகளுக்கு நன்மை தரக் கூடிய பயிருக்கு வலிமை சேர்க்கும் நுண்ணங்கிகளின் எண்ணிக்கையை குறைவடைய விடாது பாதுகாக்க முடியும். அதே நேரத்தில் அவற்றின்

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 140

அனைத்திற்கும் நாமேகாரணம். எமது புத்திக்கு இவையனைத்தும் அப்போது தெரியவில்லை. காலம் போகப்போக ஒவ்வொன்றாக பிரச்சினைகள் ஆரம்பிக்கத் தொடங்கிவிட்டன. தற்போது எந்த உணவெடுத்தாலும் நஞ்சுகலந்ததாக இருப்பதாக ஒருபிரமை. அசேதன பசளைகளை தவிர்த்தேனும் பயிர்ச்செய்கை செய்ய முனைவோர் பலரிருந்தும் சேதன முறையில் செய்யப்படும் பயிர்ச் செய்கையிலிருந்து பெறப்படும் பயிர்களின் மரக்கறிகள் மற்றும் பழங்களை பிரித்தறியும் தன்மையில்லாததனால் சேதனமுறை மூலமாக செய்யப்படும் பயிர்களின் விலைகள் அதிகரிக்கப்பட வேண்டும். தவறின் சேதனமுறை விவசாயத்திலிருந்து மக்கள் வெளிச்செல்ல ஆரம்பித்து விடுவர்.

நஞ்சற்றதேசத்தினை கட்டியெழுப்புவதாயின் அசேதன இரசாயனப்பசளைக்கு மாற்று வழிகண்டறியப்படல் வேண்டும். எமது நாட்டுக்கே உரித்தான மாற்றுவழிகளாக அவை இருக்க வேண்டுமே தவிர எமக்கு ஒவ்வாத முறைகளை இங்கு அறிமுகப்படுத்துவது நீண்டகாலப் போக்கில் அது எதிர்பார்த்த நன்மைகளைத் தராது. மாறாக எமது இயற்கையை நாம் அவதானமாக கவனித்தால் எமக்கான விடை இங்கே கிடைக்கும்.

மண்ணின் வளத்தை மேம்படுத்தும் செயல்களில் இனிவரும் பசுமைப்புரட்சியை நெறிப்படுத்த வேண்டிய கட்டாயத்தினுள் நாம் அனைவரும் உள்வாங்கப்பட்டிருக்கின்றோம். இதனை முன் கூட்டியே அனுமானித்திருந்தால் பயிர்ச்செய்கையால் படும் இவ்வளவு அவலமும் ஏற்பட்டிருக்காது. விளைநிலத்தில் உள்ள மண்ணின் உயிர்ப்புத் தன்மையை ஏற்படுத்தக் குத் தேவையானயளவு சேதனப் பொருட்களை பசளையாகவோ அல்லது ஆதாரப் பொருட்களாக இடும் போது நன்மை தருகின்ற நுண்ணங்கிகள் இவற்றில் பல்கிப் பெருக ஏதுவாகஅமையும். அத்துடன், மண்ணினுள் வளமான ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் மண்ணினுள்ள வாயுப்பரிமாற்றத் திற்கும் நன்மை தரும். நுண்ணங்கிகளின் இயல்பான பெருக்கத்திற்கும் சேதனப் பசளைகள் பெரிதும் உதவுகின்றன.

எமது பிரதேசத்திலுள்ள மண்ணின் தன்மைக்கேற்ப சேதனப் பொருட்களை இடுவதன் அளவை நாம் நிர்ணயிக்கலாம். களிமண் தரையாக இருப்பின் சேர்க்கப்படும் சேதனப் பசளைகள் மண்ணை இறுக்கமல்லாது வேர் இலகுவாக வளர்ந்து வியாபிக்கவும் அகன்று வளரவும் உதவும். அதுபோல மணற்பாங்கான மண்ணாயின் அதிலுள்ள ஊட்டச் சத்து மிகமிகக் குறைவாக இருப்பதனால் சேதனப் பொருட்களின் சேர்க்கை மண்ணை வளமாக வியாபித்திருக்க வைத்திருக்க பெரிதும் பயன்படும். மண்ணின் வெப்பநிலை, ஈரப்பதன் மற்றும் காரஅமிலத் தன்மை என்பன இங்கே கருத்தில் கொள்ளப்பட வேண்டும். களிமண் தரையில் சேதனப் பசளைகளை அதிகளவில் இடக்கூடாது. அதுவும் உக்காத சேதனப் பொருட்களை இடக்கூடாது. களிமண்ணினது நீர்பிடித்து வைத்திருக்கும் தன்மை அதிக மாக இருப்பதனால் அதிகளவில் உக்காத சேதனப் பொருளை இடும்போது காற்றின்றிய சுவாசம் நிகழக் கூடியவாய்ப்புக்கள் அதிகமாகும். இது இறுதியில் விளைவிக்கும் பயிரின் வேர்த்தொகுதிக்கு எதுவிதமான நன்மையுஞ் செய்யாது மாறாக தீங்கினை விளைவிப்பதாகவே அமையும்.

நன்றாக உக்காத சே[illegible]

தொடங்கி பின் வேரையே அழுக வைத்து விடும். வழக்கமாக நாம் குளிப்பதற்கு பயன்படுத்தும் நீரை வாய்க்கால் மூலம் தொடர்ந்து பாய விடும் இடங்களில் நீர் தேங்கியிருக்கும் நிலைவரும் போது மண்ணினால் அகத்துறிஞ்ச முடியாத நிலையில் காற்றின்றிய சுவாசத்திற்குள் அப்பகுதி உள்வாங்கப்படும். இது இறுதியில் அதிலுள்ள பயிர்களின் இறப்புக்கு காரணமாகி விடும். குளிக்கும் கிணற்றுப் பகுதியில் நீர் தொடர்ச்சியாகசெல்லும் போது இவ்வாறான நிகழ்வுக்கான ஊக்குவிப்பாக அது அமைந்து விடும்.

அசேதனப் பசளைகளுக்கான மாற்றீடாக பசுந்தாள் பசளைகளும் பசுந்தாள் இலைப் பசளைகளும் பயன்படுகின்றன. எங்களூர் விவசாயிகளுக்கு இவற்றின் முக்கியத்துவம் தெரியாத நிலையில் வெறுமனே அசேதனப் பசளைகளை மட்டுமே நம்பியிருந்த நிலையிலிருந்து மீளவேண்டிய காலம் கனிந்திருக்கிறது. பசுந்தாள் பசளைகளின் சேர்க்கை மண்ணுக்கு அதன் தன்மையை மேம்படுத்த உதவும். சூழல் மாசடைவதையும் குறைக்கும்.

எந்த மண்ணில் விவசாயம் செய்கிறோமோ அந்தமண்ணில் சாதாரணமாக பயிர் செய்வதற்கு முன்கூட்டியே பசுந்தாள் பசளை தாவரங்களை பயிர்செய்யும் முறை பல இடங்களில் கடைப்பிடிக்கப்படுகின்றது. கிட்டத்தட்ட ஒருமாதங்களுக்கு முன்னரேயே உழுது விட்ட வயற்பரப்பில் முதல் மழையுடன் இதன் விதைகளை விதைப்பர். அதனுடன் சேர்த்து அம்மண்ணில் நட வேண்டிய பயிரில் அது மிளகாயா, தக்காளியா, கத்தரியா, புகையிலையா எதுவாகிலும் அதன் நாற்று மேடையையும் அமைக்கப்படும். நாற்று நடுவதற்கான [illegible] போது இங்கே வயற் பரப்பில் பசுந்[illegible]

சத்தை இழுத்து வேரிலுள்ள முடிச்சுகளை உருவாக்கும் ரைசோபியம் பக்றீரியாவுடன் சேர்ந்து மண்ணினுள் நிலை நாட்டும். இவ்வகையான தாவர மூலமான தழைச்சத்தின் உற்பத்திமண் வளத்தை மேம்படுத்த பெரிதும் உதவும். இதுஒரு இயற்கை பொறிமுறை. விவசாயிக்கும், சூழலுக்கும் ஏன் எமக்கும் நன்மை தருகின்ற பயிர்ச் செய்கை முறை. இதனை வீட்டுத் தோட்டத்திலும் நாம் முழுமையாகக் கடைப்பிடிக்கலாம். அவரைக் குடும்பத்திலுள்ள பயிர்களுக்கு வளியிலுள்ள நைதரசனை - தழைச் சத்தை வேர் முடிச்சுக்களாக மண்ணில் பதிக்கும் திறன் உண்டு. சணல்தவிர, உழுந்து, பயறு போன்ற பயிர்களை க்கூட இத் தேவைக்குப் பயன்படுத்தலாம்.

பசுந்தாள் இலைப் பசளைகள் என்பவை தரிசுக்காணிகளில், உயர் வேலிகளில், பாதையோரத்தில் வளர்ந்திருக்கும் மரங்கள் ஆகியவற்றின் இலைகளை கொய்து அல்லது கத்தரித்து வயலுக்கு இடுதலாகும். மாறாக பசுந்தாள் பசளைகள் பயிர் செய்யும் நிலத்தில் விளைவித்து அதனுள்ளே இடுதலாகும். இது மண்ணில் உதித்தவை அரைவயதில் சருகாக மண்ணினுள்ளேயே புதைக்கப் படுவதை ஞாபக மூட்டுகிறதல்லவா. பசுந்தாள் இலைப் பசளைகளைப் பயன்படுத்துவதில் எங்களூர் விவசாயிகள் கில்லாடிகள். ஆனாலும் ஒருசிலரே இதனைக் கடைப்பிடிப்பதனை அவதானிக்க முடிகிறது.

பசுந்தாள் இலைப் பசளைகளாக உயர்வேலிகளில் வளர்க்கப்படும் பூவரசு, கிளிறிசிடியா அல்லது சீமைக்கிளுவை போன்றவையும், தரிசுக் காணிகளில் வயற்பரப்பில் தானாகவே வளர்ந்திருக்கும் எருக்கலை மற்றும் பன்னை போன்றவற்றின் இலைகளை வெட்டிவிட்டு வாடமண்

எண்ணிக்கையை விரைந்து பெருக்கி விடவும் வழி பிறக்கும். இதனால் பயிர்களில் நோயை உருவாக்கும் நுண்ணங்கிகளின் எண்ணிக்கையை, வலிமையை நலிவடையச் செய்துவிடலாம். பசுந்தாள் இலைகளை மண்ணினுள் இடும் போது மண் உயிர்ப்புத்தன்மை பெறுகின்றது. அதேநேரத்தில் இரசாயனங்களின் செறிவினை மண்ணில் மாற்றியமைக்கும் செயலையும் இலகுவில் செய்துவிடும். இன்னொரு வகையில் பயிருக்கு கிடைக்கக் கூடிய சத்துக்களாக மாற்றியமைப்பதனால் அவை பயிரினால் இலகுவாகஅகத்துறிஞ்சப்பட பயிர் செழித்து வளர்ந்துவிடும். மண்ணினதுதன்மை மற்றும் வளம் குறைந்து விடாது பயிர்ச்செய்கை செய்வது சிறந்ததாகும். மண்ணினுள் பயிர்களுக்கு நோயை உருவாக்கும் நுண்ணங்கிகளை பல்கிப் பெருக இடமளித்துவிட்டால் பின்னர்பயிர்ச்செய்கையில் அதுவே பெருந் தலையிடியாகிவிடும்.

மண் வளத்தைபெருக்கும் அதே நேரத்தில் அதிலிருந்து அதன் வளம் கெடாது உச்சப் பயன்பாட்டைப் பெற நாம் என்றும் முயற்சிக்க வேண்டும். இதற்கு மண்ணினுள் உள்ள நன்மை தரும் நுண்ணங்கிகள் பற்றிய தேடலும் அவை பற்றிய ஆய்வும் எமக்கு இவை பற்றிய பயன்பாட்டைஅதிகரிக்க செய்ய வழி செய்யும். விவசாய செய்கையில் விவசாய பெருமக்களுக்கு தலையிடியாக இருக்கும் பீடை களையும் நோய்களையும் கட்டுப்படுத்த நன்மை தரும் நுண்ணங்கிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க ஆவன செய்து மண்ணை வளமானதாக உயிர்ப்புள்ளதாக பேணுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப் பழை துர்க்காதேவி தேவஸ் தானத்தின் அனுசரணை யுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் ஒன்பதாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கி ழமை மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் இடம்பெறும். இதில் பாட்டு-ரஜீந்திரன் சுரசாகித்தியன், வயலின்-ப.சியாமகிருஷ்ணன், மிரு தங்கம்-எஸ்.கமலதாஸ், முகர்சிங்-எஸ்.பாலாஜி ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ள னர். (இ-3)

# தெய்வீக சிறப்பு நிகழ்வின் 9ஆம் நாள் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபை நடத்தும் தெய்வீக சிறப்பு நிகழ்வின் ஒன்பதாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 7.45 மணிவரை நல் லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவ லர் மணி மண்டபத்தில் இடம்பெறும். சைவப்புலவர் சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் "சங்க இலக் கியங்களில் முருக வழிபாடு" எனும் தலைப்பில் இந்து தர்மாசிரியார் சைவநெறிச் சன்மார்க்கர் த.மனோச் குமார் சொற்பொழிவாற்று வார். (இ-3)

# அருள்நெறி விழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலு வல்கள் திணைக்களம் நல் லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னி ட்டு நடத்தும் யாழ். மாவட்ட அறநெறிப்பாடசாலை மாண வர்களின் கலை நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பிற்ப கல் 3 மணிமுதல் மாலை 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண் டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர் ஜின் தலைமையில் இடம்பெ றும். இதில் விருந்தினராக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யின் அபிவிருத்தி உத்தியோ கத்தர் குமரேசசர்மா கலந்து கொள்வார். இந்நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செய லர் பிரிவிற்குட்பட்ட மாவை பொதுச் சேவைக் கழக அற நெறிப் பாடசாலை மாணவர் களின் பண்ணிசை, வில்லிசை, பேச்சு, காதாப்பிரசங்கம், வீரகத்தி விநாயகர் அற நெறிப்பாடசாலை மாணவர் களின் நடனம், பேச்சு என் பன இடம்பெறவுள்ளதுடன் கிளானை ஞானவைரவர் அறநெறிப்பாடசாலை மாண வர்களின் பேச்சு என்பனவும் இடம்பெறும். (இ-3)

# யாழ். புத்தகத் திருவிழா

நல்லூர் கந்தசுவாமி ஆல யத்தின் வருடாந்த மஹோற்ச வத்தை முன்னிட்டும் இந்திய சுதந்திர தினத்தின் 70 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட் டும் யாழ். இந்தியத் துணைத் தூதரகம் யாழ். மாநகரசபை யினருடன் இணைந்து வழங் கும் யாழ். புத்தகத் திருவிழா எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு யாழ். மாநகரசபை சுகாதாரப் பணிமனையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ் விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இப் புத்தகத் திருவிழா 12.08.2017 முதல் 21.08. 2017 வரை முற்பகல் 10 மணியிலிருந்து இரவு 10 மணி வரை இடம்பெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## நூல் வெளியீடும் விமர்சன அரங்கும்

வட்டுக் கோட்டை அரங்க மரபு நூல் வெளியீட்டு விழா வும் விமர்சன அரங்கும் இன்று சனிக்கிழமை பிற் பகல் 3.30 மணிக்கு திரு மறைக்காடு கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் பேராசிரியர் அ.சண்முக தாஸ் தலைமையில் இடம் பெறும். (8-10-102)

## 'புதுசு' நூல் தொகுப்பு அறிமுகம்

புதுசுநூல்தொகுப்புஅறிமுக விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணி க்கு நல்லூர் சங்கிலியன் தோப்பில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டப கேட்போர் கூடத்தில்எழுத்தாளர்சி.ரமேஷ் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில்கருத்துரைகளை எழுத்தாளர்களான அ.யேசு ராசா , தி.செல்வமனோகரன் ஆகியோர் வழங்குவர்.(இ-3)

# கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும்

கோப்பாய் தேசோதய சபையின் ஏற்பாட்டில் கோப் பாய் நவ மங்கையர் நிவாச முதியோர்களுக்கான இல வச கண் பரிசோதனை மற் றும் இலவச கண்ணாடி வழங்கல் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு நவமங் கையர் நிவாச இல்லத்தில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கான நிதி அனுசரணையை யாழ்ப் பாண துஷா கண்ணாடியகம் வழங்கியுள்ளது.(இ-10-134)

# சுன்னாகம் லயன்ஸ் கழக புதிய நிர்வாக பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் லயன்ஸ் கழ கத்தின் புதிய நிர்வாக பதவி யேற்பு நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தெல்லிப் பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு அருகில்உள்ள தெல்லிப்பழை லயன்ஸ் கழக மண்டபத்தில் இடம்பெறும்.

லயன்ஸ் கழகத் தலை வர் லயன் நா. தயாரூபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு பிரதம விரு ந்தினராக லயன்ஸ் கழகம் மாவட்ட 306 (B) இன் 2 ஆவது உதவி மாவட்ட ஆளு நர் தொழிலதிபர் லயன் பி. மகேந்திரன் லயன் சங்கீதா தம்பதிகளும் சிறப்பு விருந் தினராக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பெண் நோயியல் மகப்பேற்று வைத் திய நிபுணர் வைத்திய கலா நிதி ந.சரவணபவவும் கல ந்து கொள்வர்.

கழகத்தின் புதிய தலை வராக லயன் ஆர். சிவநா யகமும் செயலாளராக லயன் சி.ஹரிகரனும் பொருளாள ராக லயன் த.தேவராஜாவும் அங்கத்துவ பணிப்பாளராக லயன் செ.மகாதேவவாவும் நிகழ்ச்சித் திட்ட பணிப்பாள ராக லயன் ந.சண்முகவே லும் பதவியேற்பர். (இ)

## கந்தபுராண எழுச்சி விழாவில் இன்று சொற்பொழிவும் நாட்டிய நிகழ்வும்

நலலூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ காலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சி விழாவின் 9 ஆம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும்.

நல்லை திருஞான சம்பந்த ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் இடம்பெறும். பிரதம சைவ மகாசபை வைத்திய கலாநிதி க.நந்தகுமார் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் சைவப்புலவர் ச.முகுந்தனின் கந்தபுராணம் தொடர்பான ஆன்மீக சொற்பொழிவும் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவியர் வழங்கும் நாட்டிய நிகழ்வு என்பனவும் இடம்பெறும்.(இ-3)

# பிரதமரை வாழ்த்திய எதிரணியினர்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் நாடாளுமன்ற வாழ்க்கைக்கு அகவை 40 என்பதால், அவரை வாழ்த் தும் விசேட நிகழ்வு, நாடா ளுமன்றத்தில் நேற்று நடை பெற்றது.

இந்நிலையில், ஒன்றி ணைந்த எதிரணியின் சில உறுப்பினர்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து ள்ளனர்.

நாடாளுமன்றத்தில், நேற்று ஏற்பாடு செய்யப்பட்டி ருந்த விசேட நிகழ்வுக்கு, பிரதமர் ரணில் விக்கிரம சிங்க வருகை தந்திருந்த போது, எதிரணியின் உறுப் பினர்கள் தமது வாழ்த்துக் களை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பிரதமரை வாழ்த்தும் முகமாக, சுமார் 4000க்கும் மேற்பட்ட ஆதர வாளர்கள், நாடாளுமன்ற வளாகத்தில் ஒன்று திரண் டிருந்ததனர். (இ-7)

# சைட்டம் எதிர்ப்பாளர்கள் அரசாங்க நிறுவனங்களின் நுழைய முடியாது

(கொழும்பு)

சைட்டம் எதிர்ப்பு போரா ட்டக்காரர்கள் பொது செயற் பாடுகளுக்கு இடையூறாக செயற்பட முடியாது என கொழும்பு கோட்டை நீதி மன்றம் நேற்று உத்தர விட்டுள்ளது.

இதன்படி, அரசாங்க நிறு வனங்களின் கட்டடங்க ளுக்குள் நுழைதல் மற்றும் பொது மக்களுக்கு இடை யூறாக செயற்பட முடி யாது என அந்த உத்தரவில் வலியுறுத்தப்பட்டுள் ளது. (இ-7)




## நலமளிக்கும் நல்லூரானே

ஆடிவரு மயிலேறும் ஆணழகா முருகா
நம் அவலங்கள் அடியொடு மண்ணினிலே மறைய
கோடிமுறையுனைப் பணிந்தோம் கோமகனே மருகா
கொண்டவள்ளி தெய்வானையுடனுறையும் மணவாளா
பாடியுன் பாதம் பணிந்தோம் பாலகனே வேலவனே
பக்தர்களின் குறை தீர்க்கும் பாங்கான குமரனே
நாடி வருவோர்க்கு நலமளிக்கும் நல்லூரானே
நல்லதொரு தீர்வைத் தந்தெமைக் காத்திடய்யா

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

## கந்தன் கருணை



கணபதிக்கு இளையவனே
கந்த பெருமானே - என்றும்
காத்திருந்து கந்தசஷ்டியும்
கார்த்திகை விரதமும் பூண்டு

வேண்டும் வரம் பெற்றிடுவோம்
வேதனைகள் போக்கிடுவார்
நல்ல வழி காட்டிடும்- கந்தன்
நாவில் என்றும் உறைந்திருவான்

சக்தியின் செல்லப் பிள்ளை
சங்கரனுக்கு இனிமையானவன்
வேண்டும் வரம் பெறுவதற்கு
கந்தன் கருணை வேண்டுமன்றோ

பா.கலாதேவி
சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்

## உள்ளம் குளிருதே உன் திருக்காட்சி



எங்கும் குரலோசை கேட்கிறதே-அது
எழில் நல்லூரான் பத்தரது பஜனை ஓசை
சங்கைநாதம் ஒலிக்கின்றதே- அது
சண்முகன் புறப்பட எழும்-ஓசை
மங்கல வாத்தியம் அழைக்கிறதே- அது
மால்மருகோன், வீதிஉலா வரும் ஓசை
பொங்கும் உள்ளம் குளிர்கின்றதே- அது
பொலிவுடன் அருள்தரும் நல்லூர் கந்தன்
வரும் திருக்காட்சியே!

பொ.புனிதன்
வரியப்புலம்.

## எங்கள் குறை தீர்த்திடய்யா



அம்மையோடப்பனுமாய்
அமர்ந்தருள் அள்ளித்தரும்
வள்ளல் பெருமானே!
வண்ண மயில் வாகனனே!
நல்லையம் பதியமர்ந்து
தொல்லை தீர்த்த தாண்டவனே!
இல்லையோ எமக்கிம் மண்
இருந்தாலிரங்காயோ
தொலைந்ததைத் தேடுகின்றோம்
தோன்றல்லையோ உந்தனுக்கு
தொல்லை என்றிருந்தாயோ
தோகைமயில் வாகனனே
உளமுருகி வேண்டிநிற்க
உனையன்றி யாருண்டு
எங்கள் குறை தீர்த்திடையா
எமையாளும் குருபரனே

கலாபூஷணம் இ.சச்சிதானந்தம்

## நல்லைக்கந்த சந்தப் "பா"



வாடி வாழ்ந்திடும் வானத் தேவரை
வாழ வைத்தவர், வாட்டம் போக்கவே
ஓடி யாடிய சூர வீரனை
ஒடித்து வீழ்த்தியே யுயர வைத்தனை
தேடியே யுனைத் தெளிந்து காணுவர்
தெவிட்டி பாதவோ ரின்பம் பூணுவர்
நாடியே நரம் பணைத்து முன்வசம்
நாடி வந்தனம் நல்லைக் கந்தய்யா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர் நவபாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாண்டுகளுக்கு முன்னர் டில்லிக்கு நான் ஒரு அந்நியனாகத்தான் வந்தேன்

# நீங்கள் எப்போதும் தந்தையாகவும் வழிகாட்டியாகவும் இருந்திருக்கிறீர்கள்

## பிரணாப் முகர்ஜிக்கு மோடி உருக்கமான கடிதம்

(டில்லி)

பிரணாப் முகர்ஜி, ஜனாதிபதி பதவிக்காலத்தை நிறைவு செய்து விடைபெற்ற தருணத்தில், அவருக்கு பிரதமர் மோடி உருக்கமான ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதம் என் இதயம் தொட்டதால், உங்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்கிறேன் என்று சொல்லி, அந்தக் கடிதத்தை பிரணாப் முகர்ஜி தனது 'டுவிட்டர்' பக்கத்தில்வெளியிட்டுள்ளார். அதில்பிரதமர்மோடி தெரி வித்திருப்பதாவது.

3 ஆண்டுகளுக்கு முன்னர் டில்லிக்கு நான் ஒரு அந்நியனாகத்தான் வந்தேன். என் முன்னால் இருந்த பணி மிகப்பெரியது.

சவாலானது. இந்த காலகட்டத்தில், நீங்கள் எப்போதும் எனக்கு தந்தையாகவும், வழிகாட்டியாகவும் இருந்துள்ளீர்கள். உங்கள் விவேகம், வழிகாட்டுதல், தனிப்பட்ட அரவணைப்பு, எனக்கு மிகப்பெரிய நம்பிக்கையையும், பலத்தையும் அளித்திருக்கிறது.

நீங்கள் மிகவும் இதமாகவும், பாசமாகவும், என்னை கவனித்துக்கொண்டீர்கள். தொடர் பொதுக்கூட்டங்கள், பிரசார பயணங்களை முடித்து விட்டு வரும்போது என்னை நீங்கள் தொலைபேசியில் அழைத்து உங்கள் உடல்



நலத்தைக் கவனித்துக்கொள்கிறீர்கள் என நம்புகிறேன் என்று கூறுவதே, என்னை புதிய ஆற்றலால் நிரப்பும்.

நமது அரசியல் பயணங்கள் வெவ்வேறு அரசியல் கட்சிகள் மூலம் வடிவமைக்கப்பட்டவை. நமது கொள்கைகள், சில நேரங்களில் மாறுபட்டவை. நமது அனுபவங்களும்வெவ்வேறானவை. ஆனால் உங்கள் அறிவாற்றலும், விவேகமும்தான் நாம் இருவரும் இணைந்து பணியாற்றச்செய்தன.

இந்திய மக்களுக்கு நீங்கள் மிகப்பெரிய ஆதார சுருதியாக விளங்குகிறீர்கள். இந்தியா உங்களை எண்ணி எப்போதும் பெருமிதம் கொள்ளும். நீங்கள் எளிமையான, விதிவிலக்கான தலைவர். உங்கள் மரபு எங்களுக்கு தொடர்ந்து வழிகாட்டும் என்றுள்ளது. (3-8)

# வெப்ப அலைகள் அதிகரிப்பால் இந்தியாவில் உயிர்வாழ்வதுசிரமம்

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(டில்லி)

2100-ம் ஆண்டில் வெப்ப அலைகள் அதிகரிப்பால் இந்தியாவில் உயிர்வாழ்வது சிரமம் என ஆய்வில் தெரிய வந்துள்ளதாக 'அறிவியல் முன்னேற்றங்கள் என்ற ஆய்வு இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புவி வெப்பமயமாதல், பருவநிலை மாற்றங்கள் போன்ற காரணங்களால் இந்தியா உள்ளிட்ட தெற்கு ஆசிய நாடுகள் சமீபத்திய ஆண்டுகளில் பெரும் வெப்ப அலைகளால் பாதிக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் ஒடிசா, ஆந்திரா, குஜராத் ஆகிய மாநிலங்கள் சமீபத்திய ஆண்டுகளில் வெப்ப அலைகளால் பாதிக்கப்பட்டன.

2015ஆம் ஆண்டு இந்தியா - பாகிஸ்தான் நாடுகளில் ஏற்பட்ட பயங்கர வெப்ப அலைகளுக்கு 3,500-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்த நிலை தொடர்ந்தால் 2100ஆம் ஆண்டில் இந்தியாவில் உயிர்வாழ்வது கடினம் என ஆய்வில் தெரிய வந்துள்ளதாக 'அறிவியல் முன்னேற்றங்கள் என்ற ஆய்வு இதழில் கூறப்பட்டுள்ளது.

பூமியில் நிலவும் வெப்ப நிலையை ஈரப்பதம் சேர்ந்தது மற்றும் ஈரப்பதம் சேராதது என விஞ்ஞானிகள் பிரிக்கின்றனர். இதில் காற்றில் இருக்கும் ஈரப்பதத்தை ஆவியாக்கிய பிறகு கிடைக்கும் குறைந்தபட்ச வெப்பநிலை, ஈரப்பதம் சேர்ந்த வெப்ப நிலையாக அறியப்படுகிறது.

இந்த வெப்பநிலை 2100-ம் ஆண்டளவில் இந்தியாவில் 35 டிகிரி செல்சியசாக அதிகரிக்கும் என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். அப்போது அதிக வெப்பம் மற்றும் காற்றின் ஈரப்பதத்தால் மனித உடல் தகுதி இழந்து நோய்களும், மரண எண்ணிக்கையும், அறிதல் திறன் குறைபாடுகளும் அதிகரிக்கும். நல்ல உடல்நலத்துடன் இருப்பவர்கள் கூட மரணத்துக்கு தப்ப முடியாது என அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியா முழுவதும் இதன் தாக்கம் இருந்தாலும், அடர்த்தியான மக்கள் தொகை நிறைந்த கங்கை நதிப்படுகை, சிந்து சமவெளிப்பகுதிகளில் இதனால் மிகுந்த பாதிப்பு ஏற்படும் என கண்டறியப்பட்டுள்ளது. (3-8)


# 20 நாட்களைக் கடந்து தீர்வின்றித் தொடரும் போராட்டம்

(டில்லி)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழக விவசாயிகள் முன்னெடுத்து வரும் தொடர் போராட்டம், நேற்று வெள்ளிக்கிழமையுடன் 20 நாட்களை எட்டியுள்ளது.

காவிரி மேலாண்மை சபை அமைத்தல் மற்றும் விவசாய கடன் தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, டில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் இத் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பல்வேறு நூதன முறைகளை கையாண்டு பேராட்டத்தில் ஈடுபடும் தமிழக விவசாயிகளுடன், நேற்று முன்தினம் புதுச்சேரி மாவட்ட விவசாயிகள் சிலரும் இணைந்து கொண்டனர்.



நேற்று முன்தினம், தம்மை கால்நடைகளைப் போல பாவித்து போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள், மத்திய அரசு தம்மை கால் நடைகளாக அலையவிட்டு விட்டதென குறிப்பிட்டனர்.

அத்தோடு, இதற்கு முன்னர் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் மண்டை ஓடுகளை கைகளில் ஏந்தியும், எலும்புகளை மாலையாக அணிந்தும் விவசாயிகள் தமது போராட்டத்தை தொடர்ந்தனர். (3-8)

# சிரிய கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுத உதவி செய்யவில்லை

## மறுக்கிறது அமெரிக்கா

(டமஸ்கஸ்)

சிரியாவில் சண்டையிட்டு வரும் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுத உதவி செய்கிறது என்று வெளியிட்டுள்ள துருக்கி பத்திரிகை செய்திக்கு அமெரிக்கா மறுப்பு தெரிவித்துள்ளது.

சிரியாவில் பஷர் அல் ஆசாத் தலைமையிலான ஆட்சி நடைபெற்று வருகிறது.

பஷர் அல் ஆசாத் ஆட்சியில் இருந்து விலக வேண்டும் என்று போராட்டம் வெடித்தது.



போராடியவர்கள் கிளர்ச்சியாளராக மாறி அரச இராணுவத்திற்கு எதிராக சண்டையிட்டு வருகின்றனர். சுமார் 7 வருடங்களாக இச் சண்டை நடைபெற்று வருகிறது என்றாலும் உள்நாட்டு போர் முடிவிற்கு வரவில்லை.

ஜனாதிபதிக்கு ஆதரவாக ரஷ்யப் படைகள் சண்டையிட்டு வருகின்றன.

இந்நிலையில் சிரியாவில் சண்டையிட்டு வரும் குர்திஷ் வை.பி.சி. போராட்டக்காரர்களுக்கு அமெரிக்கா டேங்க் மற்றும் ஆயுதங்கள் நிரம்பிய நூற்றுக்கணக்கான டிரக்குகளை அனுப்பியது என்று துருக்கி பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. இச்செய்தியை துருக்கியில் உள்ள அமெரிக்க தூதரகம் மறுத்துள்ளது.

இதுகுறித்து தூதரகம் சமூக இணைய தளத்தில் வெளி யிட்டுள்ள செய்தியில் சிரியாவில் சண்டையிட்டு வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் உட்பட எந்த குழுவிற்கும் நாங்கள் டேங்குகள் அனுப்பவில்லை என்று தெரிவித்துள்ளது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியாவின் ஏவுகணை சோதனையிலிருந்து 10 நிமிட இடைவெளியில் தப்பிய ஏர் பிரான்ஸ் விமானம்

(பாரிஸ்)

உலக நாடுகளின்எதிர்ப்பை கண்டுகொள்ளாமல்தொடர்ந்து ஏவுகணை சோத னையில் கவனம் செலுத்தி வருகிறது வடகொரியா.

இந்நிலையில் வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியபோது அந்த வழியாக பயணித்த ஏர் பிரான்ஸ் பயணிகள் விமானம் ஒன்று விபத்தில் இருந்து தப்பியுள்ளது.

330 பயணிகளுடன் ஏர் பிரான்ஸ் விமானம் டோக்கியோவில் இருந்து பாரிசுக்கு வடகொரியாவின் ICBM பாதை வழியாக பயணித்துள்ளது.

அப்போது, கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஹுவாசாங் 14 என்ற ஏவுகணையை வட கொரியா சோதித்துள்ளது.


கிட்டத்தட்ட 100 கிலோ மீற்றர் இடைவெளியில் விமானமும், ஏவுகணையும் மோதுவதிலிருந்து தப்பித்துள்ளன.

ஏவுகணை விழுந்த கடல் பகுதியை ஏர் பிரான்ஸ் விமானம் 10 நிமிடம் கழித்து கடந்து சென்றுள்ளது.

ஒரு வேளை 10 நிமிடத்திற்கு முன்பு அது கடந்திருந்தால் நிச்சயம் ஏவுகணையால் தாக்கப்பட்டிருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தையடுத்து தனது விமானங்கள் செல்லும் பகுதியை ஏர் பிரான்ஸ் நிறுவனம் மாற்றியமைத்து அறிவித்துள்ளது.

வட கொரியா ஏவுகணை சோதனை நடத்தும் பகுதியில் பல்வேறு நாட்டின்விமானங்கள் பயணிப்பதால் அதனை நிறுத்திக் கொள்ளுமாறு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் எச்சரித்தும் அதனை வடகொரியா ஒரு போதும் கண்டுகொள்ளாமல் தனது சோதனையில் உறுதியாக உள்ளது. (3-8)



# தமிழகம் பாலைவனமாக மாறிவிடாமல் பாதுகாக்கும் முயற்சியில் வைகோ



(பூந்தமல்லி)

பூந்தமல்லியை அடுத்த செம்பரம்பாக்கத்தில் பூந்தமல்லி - பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி உள்ள அரசுக்கு சொந்தமான இடத்தில் வளர்ந்து உள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றும் பணி ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் டி.ஆர்.ஆர்.செங்குட்டு வன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, கலந்து கொண்டு சீமைக்கருவேல மரங்களை வெட்டி அகற்றும்பணியை தொடங்கிவைத்தார். தொண்டர்களுடன் சேர்ந்து மரங்களை அறுக்கும் எந்திரம் மற்றும் அரிவாள், பொக்லைன் எந்திரம் மூலம் சீமைக்கருவேல மரங்களை அவர் அகற்றினார்.

பின்னர் நிருபர்களிடம் வைகோ தெரிவித்ததாவது. பெரும் அபாயக் கட்டத்தில் தமிழகம் உள்ளது. அண்டை மாநிலங்களான கர்நாடக மாநிலம் காவிரி நதிநீர் பிரச்சினையிலும், கேரள மாநிலத்தில் இருந்து தமிழகத்துக்கு இதுவரை வந்து கொண்டிருந்த தண்ணீரை தடுப்பதற்கு கேரள மாநிலமும், ஆண்டு ஆண்டுகாலமாக நாம் பயன்படுத்தி வந்த பாலாற்று நீரை தடுப்பதில் ஆந்திர மாநிலமும் வஞ்சகம் செய்கின்றன. இதில் காவிரி நதிநீர் பிரச்சினையில் நரேந்திர மோடி அரசு பச்சை துரோகம் செய்கிறது. பசுஞ்சோலையாக இருந்த தமிழகம், பாலைவனமாக மாறப்போகிறது. இதை தடுப்பது எப்படி?. காவிரியில் தண்ணீரை நான் எதிர்பார்க்கவில்லை. மேகதாது அணை கட்டி முடித்த பிறகு மேட்டூருக்கு தண்ணீர் வராது.

ஆயிரம் அடிக்கு கீழ் தோண்டினா லும் தண்ணீர் வராது. ஆற்று மணல் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டது.

சீமைக்கருவேல மரம் தவறாக புரிந்து கொள்ளப்பட்ட காரணத்தால்மெக்சிகோ, தென் அமெரிக்கா, கரீபியன் தீவுகளில் இருந்து விதைகள் கொண்டு வரப்பட்டு தூவப்பட்டன. 1960களில் அதிகமாக தூவப்பட்டன.

வேலிக்கருவேலமரத்தை வெட்டி விற்றால் விறகுக்கு பயன்படும் என்று தெரிவித்தார்கள். ஒரு காலத்தில் வெட்டி விற்றனர். தற்போது யாரும் இதனை வெட்டி பிழைப்பது இல்லை.

எந்த செடிகள் கருகினாலும் சீமைக்கருவேல மரம் கருகாது. பச்சை, பசேல் என்றுதான் இருக்கும். காரணம் நிலத்தடி நீரை அப்படியே உறிஞ்சி கொள்கிறது. காற்றிலே உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சிக்கொள்கிறது.

சீமைக்கருவேல மரங்கள் தமிழகம் முழுவதும் மொத்தமாக அடர்ந்து விட்டன.

தமிழகம் பாலைவனமாக மாறிவிடாமல் தடுக்கவே நாங்கள் இந்த பணியில் ஈடுபட்டுள்ளோம். சீமைக் கருவேல மரத்தை அகற்றுவதற்கு அரசுக்கு முழு அக்கறை கிடையாது. இப் பணியை தீவிரப்படுத்துவதற்கு தீரன் சின்னமலை நினைவு நாளான இந்நாளை தேர்ந்தெடுத்து மீண்டும் பணியை தொடங்கியுள்ளேன்.

அவர் வாள் ஏந்தி வெள்ளையனை விரட்டினார். நாங்கள் அரிவாள் ஏந்தி சீமைக்கருவேல மரத்தை வெட்டுவதற்கு புறப்பட்டுள்ளோம் என்று தெரிவித்தார்.

அவருடன் ம.தி.மு.க. துணைப்பொதுச்செயலாளர் மல்லை சத்யா உட்பட நிர்வாகிகள் இருந்தனர். (3-8)

# டுபாயில் தீ விபத்து

(டுபாய்)

டுபாயில் உள்ள உயரமான கட்டடங்களில் ஒன்றான டார்ச் டவரில் நேற்று அதிகாலை பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

டுபாயில் உள்ள மெரினா பகுதியில் சுமார் 1,105 அடி உயரம் கொண்ட, உலகில் மிகவும் உயரமான கட்டடங்களில் ஒன்று டார்ச்டவர். இங்கு 79 மாடிகள் உள்ளன. இந்த டவரில் நேற்று அதிகாலை ஒரு மணிக்கு திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

கட்டடத்தின் 9-ஆவது மாடியில் பற்றிய தீ, தொடர்ந்து எரிந்து அடுத்தடுத்து பரவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவலறிந்து தீயணைப்பு படையினர் அங்கு விரைந்து சென்றனர். அடுக்குமாடியில் குடியிருப்பவர்கள் மற்றும் வணிக வளாகங்களில் தங்கியிருப்பவர்களை உடனடியாக வெளியேற்றினர்.

தீ விபத்தில் ஏற்பட்ட சேதம் குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை என முதல் கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீ விபத்தால் அந்த பகுதியில் மின்சாரம் தடை செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

79 மாடிகள் கொண்ட டார்ச் டவர் கடந்த 2011-ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது. ஏற்கனவே, பெப்ரவரி 2015-ஆம் ஆண்டில் தீ விபத்து ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (3-8)

# சிரியாவில் புதிய பாதுகாப்பு வலயம்

(தமஸ்கஸ்)

சிரியாவின் ஹோம்ஸ் நகர வடக்கில் மக்கள் பாதுகாப்பாக வெளியேறும் வகையில் நெருக்கடிநிலை குறைந்த வலயம் ஒன்றை உருவாக்க ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு மற்றும் சிரிய எதிர்த்தரப்புக்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்ய தொலைக்காட்சி ஊடகம் ஒன்றில், நேற்று முன்தினம் வியாழக்கிழமை ரஷ்ய வெளியுறவு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் இகோர் கொனாஷ்கோவ் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது, குறித்த பகுதியில் நேற்று முன்தினம் முதல் போர்நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த பாதுகாப்பு வலயமானது ஒரு இலட்சத்து 47 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட 84 குடியேற்றங்களை உள்ளடக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (3-8)



ஊழல் வழக்கில் நவாஸ் ஷெரீப் பதவியிழந்ததை அடுத்து பிரதமர் ஷாகித் காகன் அப்பாஸி தலைமையிலான புதிய அமைச்சரவை நேற்று பதவியேற்றுக்கொண்டது.

# ஈரான் மீதான பொருளாதாரத் தடை சர்வதேச ஒழுங்கு முறைகளுக்கு முரணானது

## ஈரான் குற்றச்சாட்டு

(தேரான்)

ஈரான் மீது பொருளாதார தடைவிதிக்கும் சட்ட மூலத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி ஒப்புதல் அளித்தமையானது, மனித உரிமைகள் கொள்கைகள் மற்றும் சர்வதேச ஒழுங்குமுறைகளுக்கு முரணானதாகும் என ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இது சுதந்திரத்தை கோரிநிற்கும் உலக மக்கள் அனைவரையும் அவமானப்படுத்தும் செயலாக அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈரான்மீது அமெரிக்கா சுமத்தியுள்ள புதிய பொருளாதார தடைகளுக்கு கடும் கண்டனம்வெளியிட்ட அவர், 2015ஆம் ஆண்டு செய்துகொண்ட அணு சக்தி ஒப்பந் தத்தை மீறும் வகையிலான அமெரிக்காவின் செயற் பாட்டை தாம் சகித்துக் கொள்ளபோவதில்லை என்றும் எச் சரிக்கை விடுத்துள்ளார்.



ரஷ்யா, வடகொரியா, ஈரான் ஆகிய நாடுகள் மீது அமெரிக்கா புதிய பொருளாதார தடைகளை விதிக்க தீர்மானித்து, இது தொடர்பான சட்டமூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. இச்சட்ட மூலத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் கையெழுத்திட்டதை தொடர்ந்து அது நடைமுறைக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “வைத்தியர் சங்கத்துக்கு எதிராக ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை”

## எஸ்.பி.திஸாநாயக்க கேள்வி



(கொழும்பு)

சைட்டம் மாணவர்களுக்கு மருத்துவ பயிற்சி இல்லையென குற்றம் சாட்டும் வைத்தியசபை, மாணவர்களுக்கு அரச வைத்தியசாலைகளில் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கும்போது எதிர்ப்பு தெரிவித்த வைத்தியர் சங்கத்துக்கு எதிராக ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்க கேள்வியெழுப்பினார்.

சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவரினால் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்து கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பினார். (இ-7)

## துப்பாக்கிச்சூடு; வர்த்தகர் கைது

(கொழும்பு)

தன்னிடமிருந்த துப்பாக்கியினால் குழுவொன்றின் மீது துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்ட வர்த்தகர் ஒருவரை, சீதுவை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து வாகன உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்து, இங்கு அவற்றைப் பொருத்தி விற்பனை செய்யும் நிலையம் ஒன்றின் உரிமையாளரான ஹர்ஷ பிரபாத் த சில்வா என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வர்த்தகரின் வாகனங்களை பொருத்தும் நிலையம் மினுவாங்கொடை பிரதேசத்தில் அமைந்துள்ளது. விற்பனை நிலையம் சீதுவை - லியனகேமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ளது.

2012ஆம் ஆண்டின் பின்னர், சீதுவை - லியனகேமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள வாகன விற்பனை நிலையத்தில் வாகனங்களை கொள்வனவு செய்த நபர்கள் அந்த வாகனங்கள் இதுவரை பதிவு செய்து கொடுக்கப்படாமை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வருகை தருவதாக, விற்பனை நிலைய உரிமையாளருக்கு அறிவித்துவிட்டு வந்துள்ளனர்.

இதன்போது, உரிமையாளருடன் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, கோபமடைந்த வாகன விற்பனை நிலைய உரிமையாளர் தன்னிடமிருந்த துப்பாக்கியினால் அவர்களை சுட முயன்றுள்ளார்.

அதனை பறிப்பதற்கு ஒருவர் முயன்றபோது, துப்பாக்கி இயங்கியதாக சம்பவத்தில் பாதிக்கப்பட்டோர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, இது தொடர்பில் விசாரணைகளை செய்த பொலிஸார், குறித்த வர்த்தகரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் விற்பனை செய்துள்ள பல வாகனங்கள், பதிவு செய்யப்படாமல் விற்பனை செய்துள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (இ-7)

## ஐ.நா.சபை-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து



ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இலங்கைக்கிடையிலான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை வெற்றி கொள்ளும் வேலைத்திட்ட ஒப்பந்தத்திலேயே இலங்கை கைச்சாத்திட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான நீண்டகால அபிவிருத்தி இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

கொழும்பு அடிப்படை கற்கை நிறுவகத்தில் குறித்த ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி ஊனா மெக்விலி உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மகிந்தவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவர சதித் திட்டம் - சஜித்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும்ஆட்சிக்குக்கொண்டு வரும் சதிநடவடிக்கைகளை முறியடிப்பதற்காகவே எரிபொருள் விநியோகம் அத்தியாவசிய சேவையாக மாற்றப்பட்டுள்ளதாக அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாம் படையினரை அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே பயன்படுத்துகிறோம். ஆனால், நாம் அவர்களைக் கூலித் தொழிலாளிகள்போல் பயன்படுத்துகிறோம் என்று பசில் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர்களின் ஆட்சியில் படையினர் எவ்வளவு கேவலமாக நடத்தப்பட்டார்கள் என்பதை அவர் மறந்துவிட்டார். ஆனால், நாம் அப்படி நடத்தவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வரும் சதி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

அவற்றுள் ஒன்றுதான் பெற்றோலியத் தொழிற்சங்கங்கள் நடத்திய போராட்டம். அவர்கள் எரிபொருள் விநியோகத்தைத் தடைசெய்தனர். அதை முறியடித்து எரிபொருள் விநியோகத்தை நாம் அத்தியாவசிய சேவையாக மாற்றியுள்ளோம். இவ்வாறான அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரமே நாம் படையினரைப் பயன்படுத்துகிறோம்.

மக்களுக்குச் சேவைகளை வழங்குவதற்காக மாத்திரமே படையினர் களத்தில் இறக்கிவிடப்படுகின்றனர் என்பதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

அதுமாத்திரமன்றி, மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவரும் சதி நடவடிக்கைகளை முறியடிப்பதற்காகவே எரிபொருள் விநியோகம் அத்தியாவசிய சேவையாக மாற்றப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (இ-7)

## “எதிர்வீட்டு பிரச்சினையில் நாம் எவ்வாறு தலையிடுவது”-பைஸர்

அமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்பில் தேசிய அரசாங்கத்தில் இருந்து கொண்டு கருத்து தெரிவிக்க முடியாது. எமது கட்சியின் ஊழல் மோசடி குற்றச்சாட்டுகள் குறித்து நாம் விவாதிக்க முடியும். எதிர்வீட்டு பிரச்சினையில் நாம் எவ்வாறு தலையிடுவது என அமைச்சர் பைஸர் முஸ்தபா கேள்வி எழுப்பினார். இந்த அரசாங்கத்தில் மாத்திரமல்ல சகல அரசாங்கத்திலும் கள்வர்கள் இருந்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### காரணங்களைச் சொல்லத்தான் வேண்டுமா?

என் மூலம் திருமணப் பேச்சு ஒன்று நடந்தபோது எனக்கு ஒரு புதுவிதமான அனுபவம் ஏற்பட்டது. பேச்சு நடந்து கொண்டிருந்தபோதே நாகரிகமாகக் கழன்று கொண்ட பையனின் தந்தை, பெண்ணையோ, பெண் வீட்டா ரையோ ஏன் பிடிக்கவில்லை என்பதற்காக விளக்கத் தைச் சொல்லவில்லை. வெளிப்படையாகச் சொன்னால் அல்லவா விபரம் தெரியும் என்று எண்ணிய நான் காரணம் என்ன என்பதை அறிந்து கொள்ள விரும்பினேன்.

என்னைவிடப் பெண் வீட்டார் காரணத்தை தெரிந்து கொள்வதில் மிக ஆர்வமாக இருந்தார்கள்.இதன் தொடர்பாக என்னைத் துளைக்கவும் ஆரம்பித்து விட்டார்கள்.

பையனின் தந்தை கடைசிவரை காரணம் சொல்ல மறுத்து விட்டார். ஒரு வழியாக அந்தப் பெண்ணுக்கு வேறு ஓர் இடத்தில் திருமணம் ஆன பிறகுதான் திரு வாய் மலர்ந்தருளிச் சில காரணங்களைச் சொன்னார். (நமக்கு இங்கு அவை அநாவசியம்) அந்தக் காரணங்கள் மட்டும் அப்போது வெளியிடப்பட்டிருந்தால் பெண் வீட்டார் சும்மா இருக்கப் போவதில்லை. அவற்றிற்குப் பெரிய பெரிய விளக்கங்களையும் வியாக் கியானங்களையும் மறுப்புக்களையும் அள்ளி வீசியிருப்பார்கள். பெரிய சண்டையாகி தர்ம சங்கடமாகவும் போயிருக்கும்.அது மட்டுமல்ல அந்தப் பெண்ணின் திரு மணமும் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

நம்முடைய செயல்கள், முடிவுகள் ஒவ்வொன்றிற்கும் காரணம் சொல்ல ஆரம்பித்து விளக்கமும் அளிக்க ஆரம்பித்தால் அதன் மூலம் பல பிரச்சினைகள் பூதாகரமாக ஆக்கப்பட்டு விடுகின்றன, விபரீதங்கள் விளைகின்றன.

இது போன்ற சந்தர்ப்பங்களில் சில காரணங்களுக்காக நான் ஒதுங்கிக் கொள்கிறேன், சொல்ல முடியாத காரணங்களினால் இதை நான் கைவிடுகிறேன் என்று சுருக்கமாக முடித்துக் கொள்வதே நல்லது என்று படுகிறது.

இன்னும்கூட நாகரிகமாக ஒதுங்கிக் கொள்ள நினைக்கிறவர்கள், எனக்குக் காரணமே சொல்லத் தெரியவில்லை. ஏனோ பிடிக்கலை என்னமோ எனக்குச் சரியாப் படலை ஏனோ நான் பிரியப்படலை என்றெல்லாம் பட்டும் படாதமாதிரி ஒதுங்கிவிடலாம்.

அல்லது இன்னும் ஒரு கட்டம் மேலே போய் உண்மையான காரணம் வேறாக இருக்க எல்லோரும் ஏற்றுக் கொள்ளும்படியாக புதுக்காரணம் ஒன்றைச் சொல்லியும் (உதாரணமாக, ஓர் இராஜினாமாக் கடிதத்தில் விலகலுக்கான காரணம்) தப்பித்துக் கொள்ளலாம். தவறில்லை. ஒவ்வொன்றையும் புளி போட்டு விளக்கிக் கொண்டிருக்க அதன் மூலம் புதுப் புதுப் பிரச்சினைகள் உருவாகுமானால் சொல்லாமல் இருப்பதே உத்தமம்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண்களுக்கு அநீதி- சுதர்சனி



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தின் ஊடாக பெண்களுக்கு அநீதி இழைக்கப்படும் என அமைச்சர் சுதர்சனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் திருத்தச் சட்டத்தினால் பெண்களின் பிரதிநிதித்துவம் 25 வீதத்திலிருந்து 16 ஆக வீழ்ச்சியடையக் கூடும் என அவர் தெரிவித்தார்.

தொகுதிவாரி அடிப்படையில் 70 வீதமும், விருப்பத் தெரிவு முறையில் 30 வீதமும் காணப்பட்ட முறையில் பெண்களின் பிரதிநிதித்துவம் 25 வீதமாக காணப்பட்டது.

எனினும், தற்பொழுது திருத்தி அமைக்கப்பட உள்ள சட்டத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 16 ஆக வீழ்ச்சியடையும் சாத்தியம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

புதிய முறையினால் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் குறைவடையும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)




கேலிச்சித்திரம்

# அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தின் மூலம் 300 மில்லியன் அமெரிக்க டொலர் நேரடி முதலீடு

## மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் நம்பிக்கை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதையடுத்து நேரடியாக வெளிநாட்டு முதலீடாக 100 மில்லியன் அமெரிக்க டொலர் நாட்டிற்கு கிடைப்பதாகவும் அதுமட்டுமல்லாது நாட்டிற்கு மேலும் நேரடி முதலீடாக 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கும் எனவும் மத்திய வங்கியின் ஆளுனர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்தார்.

2017 ஆம் ஆண்டின் ஐந்தாவது நிதிக் கொள்கை தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தின் மூலம் 40 கோடி அமெரிக்க டொலர்கள் நாட்டிற்கு கிடைக்கவுள்ளது. நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கம் இவ்வாண்டில் 670 கோடி அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்கும்.

வரட்சியினால் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தாலும் எதிர்வரும் நவம்பர் மாதம் அளவில் பணவீக்கம் மேலும் குறைவடையும்.

ரூபாவின் பெறுமதி டொலருக்கு அமைவாக போட்டித் தன்மையுடன் அதிகரிப்பது அவசியமாகும். ஏற்றுமதியை அதிகரிப்பது பற்றி கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். உற்பத்தி, முதலீடுகள் என்பனவற்றை அதிகரித்து புதிய தொழில்வாய்ப்புக்களும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.



நாட்டின் பொருளாதாரம் முறையான விதத்தில் ஸ்திரத்தன்மையை அடைந்து வருகின்ற நிலையில், நாட்டின் பொருளாதாரக் கொள்கை பற்றி சர்வதேச நாணய நிதியமும் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தின் முதலாவது காலாண்டில் தேசிய பொருளாதாரம் 2.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. இயற்கை அழுத்தங்களுக்கு மத்தியிலும் நாட்டின் ஏற்றுமதி வருமானம் 6.8 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. பணவீக்கம் 6.1 சதவீதத்தில் இருந்து 4.8 சதவீதம் வரை வீழ்ச்சி கண்டுள்ளது.

சுற்றுலாத் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டுவதாகவும் இவ்வருடத்தில் இதுவரை பத்து இலட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அமெரிக்க இராணுவ குழு இராணுவத் தளபதி சந்திப்பு



(கொழும்பு)

இலங்கை வந்துள்ள அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள இராணுவ தூதுக்குழுவினர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்கவை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவத் தலைமையகத்தில் இந்த சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் இராணுவத் தளபதி, கடந்த ஐந்து வருட காலமாக ஐக்கிய அமெரிக்காவுடனான அமைதிகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்ட விதம் தொடர்பாக விளக்கமளித்துள்ளார்.

இதன்போது, இராணுவபதவி நிலை அதிகாரிகள், ஐக்கிய அமெரிக்காவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆலோசகர் யூனா பெனான்டஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது, (இ-7)

# நல்லாட்சிக்காகப் பாடுபட்டவர்கள் கதிகலங்கிப்போயுள்ளனர்

## விமல் வீரவன்ச சுட்டிக்காட்டு

## அமைச்சர் ரவி மீது கடும் விசனம்

(கொழும்பு)

பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் வெளிவிவகார அமைச்சர் வெளியிட்டுள்ள கருத்துகள் குழந்தைத்தனமானவை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச விமர்சித்துள்ளார்.

2015 ஜனவரி 8ஆம் திகதி நல்லாட்சி மலர்ந்து விட்டதாக மார்தட்டியவர்களுக்கு அப்படி எதுவும் நடக்கவில்லை என்று நாம் சுட்டிக்காட்டினோம். எமது கருத்தை [illegible] மக்களையும் அவர்கள் தவறாக வழிநடத்தினர்.

எனினும், இன்று உண்மை அம்பலமாகியுள்ளது. இதனால், நல்லாட்சிக்காக பாடுபட்டதாக கூறுபவர்கள் கதிகலங்கி போயுள்ளனர் என்றும் விமல் வீரவன்ச தெரி வித்துள்ளார்.

மகிந்த அரசுதான் நாட்டில் பாரிய கொள்ளைகளில் ஈடுபட்டது. அதற்கு இடமளிக்கக்கூடாது என வீர வசனம் பேசி ஆட்சிக்கு வந்தவர்கள் தற்போது செய்வது என்ன? பாரிய திருட்டுகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

இந்த நிலையில், ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்த வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க, தான் வசிக்கும் வீடு அலோசியஸின் பேர்பெச்சுவல்ட்ரசரீஸ் நிறுவனத்தின் நிதியால் வாங்கப்பட்டது என்பது தனக்குத் தெரியாது என்று கூறியிருந்தார். அப்படி தெரிந்திருந்தால் அங்கு சென்றிருக்கமாட்டார் எனவும் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தான் வாங்கிய வீடு பற்றி ரவியின் மனைவி அவருக்குக் கூறவில்லையா? இரவிலாவது இருவரும் சந்தித்துக்கொள்வது இல்லையா? எனவே, மக்களை முட்டாளாக்கும் வகையில் குழந்தைத் தனமாக வே ரவி கருணாநாயக்க கருத்து வெளியிட்டுள்ளார்.



இப்படிப்பட்ட ஒருவர் எப்படி இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெளிவிவகார அமைச்சர் பதவியை வகிக்க முடியும். இதனால் நாட்டுக்கே பாதிப்பு ஏற்படும் என்றும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமா ஓயா திட்டத்தால் 50 வீடுகள் அபாய நிலையில்



உமா ஓயா திட்டத்தின் பாதிப்பு காரணமாக பண்டாரவெல திக்அராவ பிரதேசத்தின் 50 வீடுகள் மிகுந்த அவதான நிலைக்குள்ளாகியிருப்பதாக தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த சில தினங்களில் திக்அராவ, அலுத்கம போன்ற பிரதேசங்களில் நடத்திய பரிசோதனைகளின் போதே இவ்வாறு கண்டறியப்பட்டுள்ளதாக தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. எனவே குறித்த வீடுகளில் உள்ளவர்கள் அவ்விடத்திலிருந்து அகன்று செல்லுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த பிரதேசத்தில் 300 க்கும் அதிகமான வீடுகளில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த வீடுகள் தொடர்பில் மேலதிக பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், நோர்வே நாட்டிலிருந்து இலங்கை வந்திருக்கும் விசேட குழுவும் உமா ஓயா திட்டத்தினால் தொடர்ந்து எழும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## எதிர்காலத்தில் இளஞ்சந்ததியினர் எதிர்நோக்கவுள்ள

# ஆங்கிலமொழி தொடர்பான சவாலும் அதனை சமாளிப்பதற்கான வழிமுறைகளும்

தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான தீவிர வளர்ச்சி காரணமாக போட்டித் தன்மை நிறைந்த உலகில் இளஞ்சந்ததியினர் கல்வி தொடர்பில் எதிர்நோக்கும் சவால்களில் பிரதானமான ஒன்றாக ஆங்கில மொழிக் கல்வி உள்ளமை கண்கூடு. உதாரணமாக சென்ற க.பொ.த. சா.த பரீட்சையில் ஓர் மாணவன் எட்டுபாடங்களில் "ஏ" சித்தியும், ஆங்கிலப்பாடத்தில் மட்டும் சாதாரண சித்தியும் பெற்றுள்ளார்.

எல்லாப் பாடங்களிலும் 'ஏ'சித்தி எடுக்கக்கூடிய வாய்ப்பினைத் தவறவிட்டமைக்கான காரணம் ஆங்கிலப் பாடத்தினை உரிய முறையில் கற்பதற்கான வாய்ப்புக் கிடைக்காமையே ஆகும்.

ஆங்கில மொழித் தேர்ச்சி தனிமனித, சமூக மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கு இன்றியமையாதது என்பது யதார்த்தம். இதற்கு காரணங்கள் பல. இது தொடர்பாக தமிழ், ஆங்கில பத்திரிகைகளில் கட்டுரைகள் வெளியிட்டுள்ளேன்.

1956ஆம் ஆண்டின் பின்னர் ஆங்கில மொழி கற்றல் மற்றும் கற்பித்தலில் ஏற்படுத்தப்பட்ட தேய்வு இன்று மோசமடைந்துள்ளமை தொடர்பில் யாரையும் குறை காண முடியாது. ஏனெனில் பலகாரணங்கள் இருக்கலாம். ஆனால் நிலைமை மோசமடைகின்றமையினை சுட்டிக்காட்டாமலும் இருக்கமுடியாது.

ஆங்கில மொழி ஆற்றல் இன்மையினால்அரச தொழில் புரியும் பலர் மனதிற்குள் புழுங்குவது, கலங்குவது பற்றி யாரறிவர். அவர்கள் தங்களது இயல்பான திறமைகளை பயன்படுத்த, வெளிப்படுத்த முடியாமல் உள்ளமை வெளிப்படை உண்மை.

இந்த நிலைமை தொடர மனச்சாட்சியுள்ள எவரும் அனுமதிக்கக்கூடாது. பல்வேறு காரணங்களால் போட்டித்தன்மையானதாக மாறியுள்ள உலகில் ஆங்கிலமொழியின் பயன்பாடு மிகவும் இன்றியமையாதது.

இன்று க.பொ.த. சா.தர மாணவன் கூட தன்னைப் பற்றி அல்லது தனது பாடசாலை பற்றி பத்து வாக்கியங்கள் ஆங்கிலமொழியில் பேச முடியாதவர்களாக உள்ளனர். இதற்குக் காரணம் 3,4,5ஆம் வகுப்புகளில் உரிய முறையில் ஆங்கிலக்கல்வி புகட்டாமையே ஆகும்.

ஆனால் ஒன்றை மட்டும் குறிப்பிடவேண்டும், இந்த நிலை தொடருமிடத்து அதனால் பாதிக்கப்படப்போவது வருங்கால சந்ததியினர் என்பதை யாரும் மறுக்க முடியாது. பெற்றோர் பலரும் ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் காட்டும் அக்கறையினை ஆங்கில மொழி கற்பிப்பதிலும் செயற்படுத்தினால் வரவேற்பிற்குரியதாகும்.

ஆங்கிலம் உலக மொழியாகவும் நாட்டின் பிரதம இணைப்பு மொழியாகவும் உள்ளமையால் அம்மொழியினை நன்றாக பேச எழுத இயலுமான ஒருவன் உந்து சக்தியைப் பெற்றுக்கொள்ள இயலுவதுடன் தொழில் வாய்ப்பு மற்றும் உயர் கல்வி பெறுதல், பல்வேறு காரணங்களிற்காக வெளிநாடு செல்லவும், வாழவும் வேண்டியிருப்பதால் ஆங்கிலமொழியின் தேர்ச்சி இன்றியமையாததாக உள்ளமையுடன் ஆங்கில மொழி பல அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் புலமைசார் கருவியாக உபயோகத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தற்போதைய யதார்த்த நிலை

ஆரம்பப் பாடசாலைகளில் தரம் மூன்று தொடக்கம் ஐந்து வரை உரிய முறையில் ஆங்கிலக்கல்வி கற்பிக்கப்படாமையினால் தரம் ஆறிலிருந்து அதற்கு மேல் ஆங்கிலக்கல்வி கற்பதில் மாணவர்கள் பின்னடைகின்றனர். அதற்கான காரணங்களாக ஆங்கிலச்சொல்லின் எழுத்துக்கூட்டல் (Spelling); கையெழுத்து (Hand writing) உரிய கருத்தினை புரிந்து கொள்ளல், உரிய உச்சரிப்பினை (Pronunciation) ஏற்படுத்தும் வகையில் உதவும் உறுப்புக்களான நாக்கு, உதடுகள், பற்கள், அண்ணம் ஆகியவற்றிற்கு இளம் பராயத்திலே போதிய பயிற்சி இன்மையாகும்.

வடமாகாணத்தில் உள்ள ஓர் பிரபல பாடசாலையில் தரம் மூன்று தொடக்கம் ஐந்து வரை பயிலும் மாணவர்கள் சரியான முறையில் ஏ,பி,சி,டி எழுதத்தெரியாதவர்களாக உள்ளமையினை நேரில் அவதானித்து ஆராய்ந்தபோது காரணம் போதிய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இன்மையே ஆகும்.

மாணவர்களின் எதிர்காலம் தொடர்பில் ஆக்கபூர்வமாக சிந்தித்தால் எனது முன்மொழிவின் தாற்பரியம் இலகுவாக விளங்கும். முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம். எந்த ஒரு மொழியினையும் சிறுபராயத்திலிருந்தே செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய திறன்களுடன் கற்றல் வேண்டும். பிள்ளைகள் முதலில் செவிமடுத்தல் மூலமே அம்மொழியினை அறிந்து பின்னரே பேசவும், வாசிக்கவும், எழுதவும் பயில்கின்றனர்.

எனவே காலம் கடந்தாலும் வருங்கால சந்ததியினரின் முன்னேற்றம் கருதி செயற்படும்படி சம்பந்தப்பட்டவர்களை பணிவுடன் வேண்டுவதுடன் இன்று பலர் ஆங்கில மொழித் தேர்ச்சியின்மையால் தங்களின் இயல்பான திறமைகளை வெளிப்படுத்த முடியாமல் திணறுகின்றனர் என்பதற்கு தங்களின் மனச்சாட்சியே சான்று.

### திட்டமிட்டுச் செயற்பட்டால் மனிதவளத் தேவையைப் பூர்த்தி செய்யலாம்.

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் ஆங்கில மொழி கற்பிப்பதற்கான மனித வளத் தேவை உள்ளமை அனைவரும் தெளிவாக புரிந்து கொள்ளக்கூடிய ஒன்று. ஒன்றுமில்லாமல் இருப்பதை விடவும் சிறிதளவாவது இருப்பின் நன்மையடைய முடியும் என்ற பழமொழிக்கு இணங்க புத்திசாதுர்யமாகத் திட்டமிட்டு செயற்படுவதன் மூலம் இயன்றளவு நன்மையினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எமது சமூகத்தில் துடிப்பான, திறமையுள்ள, ஆற்றலுள்ள, புத்திக்கூர்மையான எல்லாவற்றிற்கும் மேலாக ஆர்வமுள்ள பல இளைஞர்கள், யுவதிகள் பல்கலைக்கழக அல்லது ஆசிரியர் கல்லூரி அனுமதி பெறமுடியாமல் உள்ளனர் என்பது கண்கூடு.

எனவே விசேட பரீட்சையினை நடத்தி தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு குறுகிய கால முழுமையான பயிற்சி அளித்தபின் உரிய தெரிவுப் பரீட்சையில் சித்தி எய்தும் பட்சத்தில் ஆங்கில ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளில் சேவையில் அமர்த்த முயற்சிக்கலாம். இதன் மூலம் இரண்டு வகையான நன்மைகள் கிட்டும்.

1. எல்லோருக்கும் தெரிந்த காரணங்களுக்காக மாணவர் சிறுவயது தொடக்கமே ஆங்கில மொழியைக் கற்பது அவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதுடன் ஆர்வத்தினையும் ஏற்படுத்த முடியும்.

2. இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கமுடியும். (இந்த விடயத்தில் எழக்கூடிய பிரச்சினை எவ்வாறு தேவையான நிதியினைப் பெற்றுக் கொள்வதென்பதாகும்). ஒரு பாடசாலையின் இரு கண்களென கருதப்படுகின்ற பழைய மாணவர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் மனது வைத்துச் செயற்பட்டால் தேவையான நிதியினைப் பெற்றுக் கொள்வது சுலபமாக அமைந்துவிடும். (அத்துடன் புலம் பெயர்ந்து வாழ்கின்றவர்களின் உதவியையும் கோரலாம்)

மேற்கூறிய முன்மொழிவுகளின் பொருட்டு குறிப்பிட்ட சங்க உறுப்பினர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சி மூலம் தெளிவுபடுத்தப்படல் வேண்டும்.

### எதிர்பார்க்கப்படும் பிரச்சினைகள்

1. 2018ஆம்ஆண்டு தொடக்கம் உரிய ஆங்கில மொழித் தேர்ச்சி இல்லையேல் பல்கலைக்கழகத்தில் சித்தி பெற முடியாதென்ற நிலை ஏற்படலாம் என அறியக்கிடைக்கின்றது.

2. தேசிய கல்வியற் கல்லூரி அனுமதிக்கு ஆங்கில மொழித்தேர்ச்சி அவசியமாக்கப்பட்டுள்ளது.

3. அநேகமாக எல்லா வகையான அரச பதவிகள் மற்றும் பதவி உயர்விற்கு ஆங்கில மொழித்தேர்ச்சி கட்டாயமாக்கப்படுவதுடன் தேசிய ரீதியில் நடத்தப்படும் நேர்முக பரீட்சைகளிலும் தேறுவதற்கு இளம் சந்ததியினருக்கு ஆங்கிலமொழி அத்தியாவசியமானதாக இருக்குமாகையினால்உரியநடவடிக்கை இன்றேல் பாதிக்கப்படுவது யாரென்று புரிந்து கொள்ள முடியும்.

4. வேறுபட்ட மொழிகளைப் பேசுகின்ற மக்கள் பொது மொழியான ஆங்கிலம் தெரியாவிட்டால் அவர்களுக்கிடையில் புரிந்துணர்வினை எதிர்பார்க்க முடியாது.

### முன்மொழிவு

ஆங்கிலக் கல்வியினை மூன்று தொடக்கம் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு தூண்டும் அல்லது வழிகாட்டும் நோக்குடன் ஆங்கிலமொழியின் முக்கியத்துவம் சிலநுட்பங்களும் என்ற தலைப்பில் பாடசாலைகளில் உரையாற்றுகைகளை நிகழ்த்துவதாகும்.

இவ்விடயத்தில் இது வரை இருபதுக்கு மேற்பட்ட பாடசாலைகள் மற்றும் மாகாணத்தின் இரு தேசிய கல்வியியற் கல்லூரிகளில் நிகழ்த்தப் பெற்ற உரையாற்றுகைகள் பயனுறுதியாக அமைந்துள்ளமை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிபர்கள் எழுத்து மூலம் அறியத்தந்துள்ளனர்.

மாணவர்களின் எதிர்காலம் தொடர்பில் ஆக்கபூர்வமாக சிந்தித்தால் எனது முன்மொழிவின் தாற்பரியம் இலகுவாக விளங்கும். முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம்.

மேலும் இம்முன்மொழிவு தொடர்பாக கற்றறிந்த சான்றோரின் கருத்துக்கள் வரவேற்கப்படுவதுடன் அக்கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களின் கண்களைத் திறப்பதுடன் பெற்றோர்களும் ஆழமாகச் சிந்திப்பது வருங்காலச் சந்ததியினருக்கு வரப் பிரசாதமாக அமையட்டும்.

### தீர்வு:-

இதற்கான பரிகாரமாக செய்யக்கூடியது யாதெனில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள் உரிய கருத்தரங்கு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் தூண்டப்படுதல்வேண்டும். இவ்விடயம் தொடர்பில் பகிரங்க விவாதத்திற்கு யாராவது முன்வருவீர்களா?

"ஆற்றல் மிக்கபிள்ளைகள் பலர் உள்ளனர், ஆனால் அவர்கள் தங்களின் ஆற்றலை மேம்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் தேவையாக உள்ளன." "ஆர்வம்உடையோரே ஆர்வத்தினைத் தூண்டமுடியும்" (யாரோ ஒருஅறிஞர்)

மேற்படி விடயம் தொடர்பாக, வருங்கால சந்ததியின் மற்றும் நாட்டின் நலன் கருதி திட்டங்கள் வகுத்துச் செயற்படுவது பயனுறுதியாக அமையும். சம்பந்தப்பட்டவர்கள் சிந்திப்பார்களா? செயற்படுத்துவார்களா?

மேடைப்பேச்சின்போது ஆங்கில மொழி கற்பது முக்கியமானது என்று கூறுபவர்கள் இவ்விடயம் தொடர்பாக தங்களால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தொடர்பில் பகிரங்கப்படுத்தினால் வரவேற்பிற்குரியதாகும்.

அம்பலவாணர் துரைசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த
# பிக்போஸ்




## இன்றைய பிக்போஸ் மீம்ஸ்




ஒரு வீடு. சுற்றி 32 கமராக்கள். பதினாறு பிரபலங்கள். நூறு நாட்கள் வெளியுலக தொடர்புகள் எதுவும் இன்றி சமையலில் இருந்து மலசலகூட சுத்திகரிப்பு வரை அவர்களே செய்யவேண்டும். ஆடல், பாடல்.விளையாட்டு, காதல், விபரீதம், சண்டை, சச்சரவு, புறம் பேசுதல், குழிபறித்தல், துரோகம் இப்படி சுவாரஸ்யமாகச் செல்லும் பிக்போஸ் நேரடி நிகழ்விற்கு எதிர்ப்புக்கள் இருந்தாலும் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கின்றது என்பதை மறுத்துவிட முடியாது. தமிழ் தொலைக்காட்சி நிகழ்வுகளிலேயே அதிக மக்கள் பார்த்த . அதிகமாகப் பேசப்பட்ட ஒரே நிகழ்ச்சி என்ற பெருமைக்குரியதும் இந்த பிக்போஸ் நிகழ்ச்சியே!

ஒருவருடைய அந்தரங்கத்தை எட்டிப்பார்ப்பது தவறானது என்றும் உடனடியாக இந்த நிகழ்வை நிறுத்த வேண்டும் என்றும் தமிழகத்தில் பலத்த எதிர்ப்பு ஏற்பட்ட போதிலும் நிகழ்வை வாரா வாரம் தொகுத்து வரும் நடிகர் கமல் ஹாசன் ஒருவருடைய அனுமதியுடன் அந்தரங்கத்தைப் பார்ப்பது தவறல்ல. இது வெறும் பொழுதுபோக்கு நிகழ்வல்ல. வாழ்க்கைக்கான பாடம். ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தான் எடைபோட்டுக் கொள்ள. திருத்திக்கொள்ள, மாற்றிக்கொள்ளும் ஒரு களம் என வாதிடுகிறார். வீட்டுக்காரர்கள் செய்யும் தவறுகளை தனக்கேயுரிய பாணியில் தட்டிக் கேட்பதுடன் அதைத் திருத்தவும் செய்கிறார். சபாஷ் கமல். அத்துடன் நடிகர் கமல் இந்நிகழ்வுகளினிடையே அரசியல் வசனங்களைப் பேசி தமிழ்நாட்டையே கதி கலங்க வைத்துள்ளார். சரியோ தவறோ மக்கள் மத்தியில் பிரபல்யமான இந்நிகழ்வு மனிதர்களுக்கு நல்ல தொரு பாடமாக அமைந் தால் சரி.



BiggBoss நிகழ்ச்சி குறித்து தொடர்ந்து தங்களது கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள் ஸ்ரீபிரியா மற்றும் நடன இயக்குநர் சதீஷ். இறுதியாக ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சியில் அவர்கள் மனநிலை இல்லாதவர்கள் போல் நடித்து பார்ப்போரையும் குழப்பியுள்ளனர் என்பது வேறு கதை. தற்போது ஸ்ரீபிரியா தன்னுடைய டுவிட்டரில் காயத்ரி தயவுசெய்து வீட்டுக்கு போங்க, மீண்டும் அவர் H என்ற தவறான வார்த்தையை பயன்படுத்துகிறார் என டுவிட் செய்திருக்கிறார்.



BiggBoss நிகழ்ச்சிக்கு வர வேண்டும் என்று ஜெயம் ரவியை தொலைக்காட்சி அழைத்திருக்கிறதாம். இதற்கு ஒப்புக்கொண்ட அவரிடம் சிறிது நடனம் ஆட வேண்டும் என்றும் கேட்டுள்ளனர். அதற்கும் சரி என்று கூறிய ஜெயம் ரவியிடம் மற்றொரு வேண்டுகோளை வைத்துள்ளனர். அதைக் கேட்ட ஜெயம் ரவி அப்படியே பதறிப்போனாராம். அது என்னவென்றால் ஜெயம் ரவியை BiggBoss வீட்டில் 10 நாட்கள் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். ஆனால் கடைசியில் நான் நிகழ்ச்சிக்கே வரவில்லை என்று கூறிவிட்டாராம் ஜெயம் ரவி.



தமிழ் பிக்போஸ் நிகழ்ச்சியில் சுவாரஸ்யங்களுக்கு என்றும் பஞ்சம் இல்லை என்றுதான் கூறவேண்டும். தமிழ் பிக்பாஸ் போட்டியில் ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு போட்டியாளரும் இரண்டு நபரை போட்டியிலிருந்து வெளியேற்ற தகுந்த காரணங்கள் கூறவேண்டும். அந்த நபர்களில் தங்களுக்கு பிடித்த நபருக்கு மக்கள் வாக்களித்து அவரை பிக்போஸ் வீட்டில் இருக்க வாய்ப்பு கொடுக்கலாம். இந்த நிகழ்ச்சி தினமும் இரவு 9 மணிக்கு விஜய் டிவி.யில் ஒளிபரப்பாகிக் கொண்டிருகின்றது. இந்த நிலையில் ஒளிபரப்பான நிகழ்ச்சியால் சில ஓவியா ரசிகர்கள் மனவருத்தத்தில் உள்ளனர். திடீரென்று ஓவியாவுக்கு என்ன ஆனது. அவர் இப்படி கிடையாதே என்றும் சமூக வலைத்தளங்களில் புலம்பி வருகின்றனர்.

இந்த நிலையில் புதிதாக வந்த நிகழ்வில், ஓவியாவிடம், ஆரவ் தான் செய்தது தவறு என்று மன்னிப்பு கேட்கிறார், அதோடு வையாபுரி நான் உனக்காக நான் எங்கு வேண்டுமானாலும் பேசுவேன், உன் மேல் நியாயம் இருக்கு, தைரியமாக இரு, நீ கவலைப்படாதே என்று கூறுகிறார். இதனால் அதிர்ச்சியில் நடிகை ஓவியா பார்க்கிறார்.



பிக்போஸ் நிகழ்ச்சி தான் தற்போது தமிழர்களின் பெரிய பொழுதுபோக்காக மாறியுள்ளது. இதில் ஓவியாவுக்கு தான் மிகப்பெரிய ரசிகர்கள் பட்டாளம் உருவாகியுள்ளது. ஆனால் கடந்த சில நாட்களாக ஆரவ் மீது கொண்ட காதலால் மிகவும் இறங்கிப்போய் அதிகம் தொந்தரவு செய்தார். சினேகன் ஆறுதல் கூறி ஆரவ்வுடன் பேச வைத்த பின்னர் ஆரவ் தன்னை காதலிக்கவில்லை என்பதை உறுதி செய்த பின்பு இனி என் வாழ்க்கையில் வராதே யாருக்கும் இரண்டாம் வாய்ப்பு தரமாட்டேன் என கோபமாக கூறிவிட்டு சென்று விட்டார்.



ஜல்லிக்கட்டு போராட்டத்தில் லட்சக்கணக்கான இளைஞர்கள் திரண்டனர். ஆனால் இதில் ஒருசிலர் அதன் பெருமைகளை எடுத்துக்கொண்டனர்.அப்படி ஒருவர் தான் ஜூலியானா. வீரத்தமிழச்சி என்ற அடைமொழியோடு பிரபலமானவர் பிரபலங்களோடு பிக்போஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.ஆரம்பத்தில் அவருக்காக ஆதரவு தந்த மக்கள் அவரின் மோசமான குணத்தால் அதிகம் வெறுக்கத் தொடங்கி விட்டனர். சமீபத்தில் இவர் இசை அல்பத்தில் நடித்திருந்த விஷயம் வெளியே வந்துவைரலானது. இந்த அல்பத்தில் நடிகர், இயக்குநர் தற்போது பேட்டியளித்திருந்தனர். அவர் கூறுகையில், ஜூலி எங்கள் அல்பத்தில் நடித்திருந்ததால் பலரும் எங்களையும் தவறாக பேசுகின்றனர். தொலைக்காட்சியில் எல்லோரையும் தான் காட்டுகின்றனர். ஆனால்ஜூலி நல்ல வாய்ப்பை தன்னுடைய மோசமான குணத்தால்கெடுத்துக்கொண்டார். தனக்கு முக்கியத்துவம் வரவேண்டும் என்பதற்காக இப்படி செய்துள்ளார். இனி இவர் போராட்டத்தில் கலந்து கொண்டாலும் மக்கள் யாரும் இவரை நம்ப மாட்டார்கள் என்றனர்.



ரசிகர்களை தாண்டி பிரபலங்களிலும் BiggBoss நிகழ்ச்சிக்கு ஆதரவாக நிறைய பேர் இருக்கின்றனர். இந்த நிகழ்ச்சி ஆரம்பத்தில் இருந்து ஸ்ரீபிரியா, காமெடி நடிகர் சதீஷ், நடன இயக்குநர் சதீஷ் ஆகியோர் தொடர்ந்து தங்களது கருத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.இந்த நிலையில் நடன இயக்குநர் சதீஷ் டுவிட்டரில் ஓவியாவை தவிர்த்து மற்றவர்களை திட்டிக் கொண்டு வந்தார். இதனை பார்த்த சிம்பு, யாரையும் தவறாக பேச வேண்டாம், நமக்கு யாரை பிடிக்கிறதோ அவர்களுக்கு ஆதரவு தெரிவிப்போம். கண்டிப்பாக தவறுகளை அனைவரும் புரிந்து கொள்வார்கள் என்று டுவிட் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த இரண்டு வருடங்களைக் கொண்டு செல்ல உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வெற்றி முக்கியம்

## ஐ.தே.க.பொதுச் செயலர் கூறுகிறார்



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடத்தப்படும். இதன் படி ஒக்டோபர் மாத இறுதிக்குள் கிராம மட்டத்தில் கட்சி கிளை சங்கங்கள் நிறுவும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றால் மாத்திரமே தேசிய அரசாங்கத்தின் அடுத்த இரண்டு வருடபயணத்தைவெற்றிகரமாக கொண்டு செல்ல முடியும். தேசிய அரசாங்கத்தின் பயணம் எமது கைகளிலேயே உள்ளது என ஐக்கிய தேசியக்கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

தொகுதி மட்டத்தில் உள்ள பிரச்சினைகளையும் குறைபாடுகளையும் தீர்ப்பதற்கு ஒரு மாத அவகாசம் தருகின்றோம். அவகாசத்தின் பின்னர் உரிய முறையில் செயற்படாத தொகுதிகளுக்கு சிறிகொத்தா உயர்பீடம் தலையிட்டு தொகுதி நடவடிக்கைகளை பொறுப்பேற்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடளாவிய ரீதியிலுள்ள 160 தேர்தல் தொகுதி அமைப்பாளர்களும் கட்சியின் செயற்பாட்டாளர்களும் நேற்று முன்தினம் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இந்த கூட்டம் பிட்டகோட்டேயில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையக மான சிறிகொத்தாவில் நடைபெற்றது.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ, கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசிம், அமைச்சர்களான அகிலவிராஜ் காரியவசம், கயந்த கருணாதிலக ஆகியோர் முன்னிலை வகித்து கூட்டத்தை நடத்தினர். இந்த கூட்டத்தில் வெளி விவகார அமைச்சர் ரவி கரு ணாநாயக்க சமுகமளிக்கவில்லை.

இதன்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கிராம மட்டச் செயற்பாடுகள் குறித்தும் பரவலாகப் பேசப்பட்டது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்போது கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் தொடர்பில் பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா விரிவான விளக்கத்தை தொகுதி அமைப்பாளர்களுக்கு வழங்கினார். கிராமத்தில் பிரபலமா னவர்களையும் கிராமத்தின் மீது பற்றுக்கொண்டவர்களையும் தெரிவு செய்ய வேண்டும் என்ற விளக்கத்தை வழங்கினார். அத்துடன வேட்பாளர்கள் தெரிவின் போது புள்ளியிடல் செயற்பாடுகள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதன்போதுதொகுதி அமைப்பாளர்களின் கூட்டத்தில் அடுத்த கட்ட செயற்பாடுகள் குறித்து கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசிம் நீண்ட விளக்கத்தையும் எச்சரிக்கையையும் விடுத்தார்.(இ-7)

# அரசாங்கத்தை எச்சரிக்கும் லொத்தர்முகவர்கள் சங்கம்

டிக்கெட் ஒன்றுக்கு தங்களுக்கு வழங்க வேண்டிய 50 சத தரகுப்பணம் (கமிஷன்) தரப்படாவிட்டால் மேலதிக அறிவித்தல்கள் எதுவுமின்றி நாடு தழுவிய தொழிற்சங்கப் போராட்ட மொன்றில் ஈடுபடப்போவதாக இலங்கை லொத்தர் முகவர்கள் சங்கம் நிதி அமைச்சுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் பீ.எஸ்.எஸ்.மதரசிங்க தெரிவித்ததாவது:-

"டிக்கெட் ஒன்றுக்கு எங்களுக்கு 50 சதம் கமிஷனாக வழங்கப்படுமென 2015இல் உறுதியளிக்கப்பட்ட போதும் இதுவரை அது கிடைக்கவில்லை. இது தொடர்பில் நாங்கள் இவ்வருடம் ஜனவரி மாதம் நிதி அமைச்சின் செயலாளரை சந்தித்துப் பேசிய போது அவர் இதை நிறைவேற்றுவதாக வாக்குறுதியளித்தார். எனினும், அவரது வாக்குறுதியும் நிறைவேற்றப்பட வில்லை.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் நாங்கள் இந்த வியாபாரத்தை செய்து வருகிறோம். எங்களது விற்பனைக்கூடங்களை அகற்றப் போவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மிரட்டிக் கொண்டிருக்கின்றது. கடந்த இரண்டு வருடங்களில் எத்தனையோ புது டிக்கெட்டுகளை லொத்தர் சபை அறிமுகம் செய்துள்ளது.

அவற்றால் முன்னைவிட பல மடங்கு வருமானம் அவர்களுக்குக் கிடைத்த போதிலும் எங்களுக்கு வழங்க வேண்டிய அற்ப சொற்ப கமிஷனை வழங்க மனம் வரவில்லை.

எனவே, எங்களது கோரிக்கை நிறைவேறாவிட்டால் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவோம் என்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் தேசிய லொத்தர் சபையின் தலைவி திருமதி ஷைமிலா பெர்னாண்டோவுடன் தொடர்பு கொண்டபோது, லொத்தர் முகவர்களின் வேலை நிறுத்தம் பற்றி இதுவரை தங்களுக்கு தகவல் வரவில்லை எனவும், அவர்களுக்கு 50 சத கமிஷன் வழங்குவதாக ஒருபோதும் தாங்கள் வாக்குறுதி கொடுக்கவில்லை எனவும் தெரிவித்தார். (இ-7)

# வரி சட்டமூல வரைவின் சில பந்திகள் அரசியலமைப்பிற்கு ஏதுவாக இல்லை

## உயர் நீதிமன்றம் அறிவிப்பு– சபாநாயகர் தகவல்

திருத்தம் செய்யப்பட்ட புதிய தேசிய வருமான வரி சட்டமூல வரைவின் சில பந்திகள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஏதுவானதாக இல்லை என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

சபாநாயகர் நேற்று காலை உயர் நீதிமன்றத்தின் முடிவு குறித்து அறிவித்துள்ளார்.

இதனால், இந்த சட்ட மூலத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் விசேட பெரும்பான்மை மூலம் நிறைவேற்ற வேண்டும் எனவும் அப்படியில்லை எனில் பந்திகளை திருத்த வேண்டும் எனவும் உயர் நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளதாக சபாநாயகர் கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார்.(இ-7)

# இரகசிய முகாமில் நடந்தது என்ன?

(நேற்றைய தொடர்ச்சி)...

இந்த விடயம் சர்வதேச அளவில் அவதானிப்புக்கு உள்ளாகியுள்ள நிலையில், சிறப்பு புலனாய்வுப் பிரிவின் பொறுப்பாளராக கடமையாற்றியிருந்த லெப்டினன் கொமாண்டர் சம்பத் முனசிங்க, கன்சைட் நிலத்தடி இரகசிய வதை முகாமின் பொறுப்பாளராக அப்போது இருந்த லெப்டினன் கொமாண்டர் தரத்தினை உடைய தற்போது கொமாண்டராக பதவி உயர்த்தப்பட்டுள்ள சுமித் ரணசிங்க, கடற்படை சிப் பாய் லக்ஷ்மன் உதயகுமார, நலின் பிரசன்ன விக்ரமசூரிய, தம்மிக தர்மதாஸ , கித்சிரி மற்றும் சிறப்பு புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகவும் கடற்படை ஊடகப் பேச்சாளராகவும் அப்போது பதவி வகித்த கொமாண்டர் டி.கே.பி. தசநாயக்க ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் சம்பத் முனசிங்க பிணையில் உள்ள நிலையில் ஏனையோர் தொடர்ந்து விளக்கமறியலில் இருந்து வருகின்றனர். விசாரணைகள் ஆரம்பமான போது சந்தேக நபர்கள் மன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்த நிலையில் 7 ஆவது சந்தேக நப ரான டி.கே.பி. தசநாயக்க மட்டும் மன்றில் ஆஜராகி இருக்கவில்லை. அவர் வெலிசறை கடற்படை வைத்தியசாலையில் சிறைக்காவலர்களின் பாதுகாப்பின் கீழ் சிகிச்சைப் பெறுவதாக இதன் போது சிறை அதிகாரிகளால் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அசித் சிறிவர்தனவின் கீழ் சட்டத்தரணிகள் குழு மன்றில் முன்னிலையாகியிருந்த நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவின் சார்பில் பிரதான விசாரணை அதிகாரி யாழ். மாணவி வித்தியா கொலை வழக்கில் சாட்சியம் வழங்க சென்றிருந்த நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முனசிங்க, உப பொலிஸ் பரிசோதகர் உபாலி, உப பொலிஸ் பரிசோதகர் பீ.எச். உபாலி, ஆகியோர் மன்றில் மேலதிக விசாரணை அறிக்கையுடன் ஆஜராகினர்.

பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன மன்றில் பிரசன்னமானார். இதன்போது மன்றில் சிறப்பு அறிக்கையை சமர்ப்பித்த குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முனசிங்க மன்றில் கருத்துக்களை முன்வைத்தார்.

" கனம் நீதவான் அவர்களே, கடந்த தவணையின் போது 2ஆம், 3 ஆம் சந்தேக நபர்களுக்கு எதிராக கப்பம் கோரியமை தொடர்பில் சாட்சிகள் உள்ளதா என வினவப்பட்டது. இதுவரையிலான விசாரணையில் அவ்வாறான சாட்சிகள் இல்லை. எனினும் அவர்களுக்கு எதிரான விசாரணைகள் தொடர்கின்றன.

பந்துகுமார என்பவர் தன்னிடம் கப்பம் கோரியதாக ஊடகவியலாளர் சந்திப்பில் பாதிக்கப்பட்ட [illegible] ஒருவர் தெரிவித்த [illegible] தொடர்பில் நாம் அவரிடம் வாக்கு மூலம் பெற்றோம். இதன் போது பந்து குமாரவின் பெயரை தான் தவறுதலாக தெரிவித்ததாக அவர் தெரிவித்தார்.

3, 4 ஆம் சந்தேக நபர்களுக்கு எதிரான எதிர்கால விசாரணைகள் தொடர்பில் கடந்த தவணை கேள்வி எழுப்பப்பட்டது. அவர்களுக்கு எதிராக மட்டுமன்றி அனைத்து சந்தேக நபர்களுக்கு எதிராகவும் விசாரணைகள் தொடர்கின்றன.

இதுவரை வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைய இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த தவணை விசாரணையின் பின்னர் நாம் பதிவு செய்த முக்கிய வாக்கு மூலம் ஒன்றூடாக சில விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கடற்படையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிகாரியான ரியர் அட்மிரல் ரீ.ஜே.எல். சின்னையாவிடம் நாம் வாக்கு மூலம் பெற்றோம். இதன் போது அவர் முக்கிய சில தகவல்களை வெளிப்படுத்தியுள்ளார்.

குறிப்பாக சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்படுவதாக கூறப்படும் திருமலையில் உள்ள கன்சைட் முகாமின் 1,2 ஆம் இலக்க சிறைக் கூடங்களில் என்ன நடக்கிறது என்பது முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட, டி.கே.பி. தஸநாயக்க, லெப்டினன் கொமாண்டர் ரணசிங்க, லெப்டினன் கொமாண்டர் பண்டார ஆகியோரே [illegible] தெரியாது என அவர் வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதே நேரம் கைது செய்ய தேடப்பட்டு வரும் லெப்டினன் கொமாண்டர் ஹெட்டி ஆரச்சியை கைது செய்ய நாம் பல விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம். தற்போது அவரது நண்பர்கள், உறவினர்கள் மீது எமது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. யாரேனும் அவருக்கு அடைக்கலம் கொடுத்துள்ளனரா என ஆராய்ந்து வருகின்றோம்.

இந்த விடயத்தில் இன்னும் யாரெல்லாம் கைது செய்யப்பட போகிறார்கள் என்பதை பிரதான விசாரணை அதிகாரியான பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வாவுக்கே தெரியும். எனவே அவர் மன்றில் ஆஜராகி அது தொடர்பில் அடுத்த தவணை அறிவிப்பார்" என பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்சித் முனசிங்க தெரிவித்தார்.

இதனையடுத்து சந்தேக நபர்களின் சட்டத்தரணி அசித் சிறிவர்தனவும் மற்றொருவரும் மன்றில் கருத்துக்களை முன்வைத்தனர். குற்றப் புலனாய்வுப் பிரிவு பக்கச் சார்பாக நடந்துகொள்வதாகவும் உபுல் பண்டார. பந்து குமார உபுல் சமிந்த,காமினி. மெண்டிஸ், வெலகெதர உள்ளிட்ட சிலர் இக்கடத்தலுடனும் கப்பம் கோரிய சம்பவம் தொடர்பிலும் தொடர்புபட்டு இருந்தும் அவர்களை குற்றப் புலனாய்வுப் பிரிவு கைது செய்யவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் குற்றப் புலனாயவுப் பிரிவு பக்கச் சார்பானது என்பதை அதன் பொறுப்பதிகாரி ரஞ்சித் முனசிங்க மறுத்தார்.

சாட்சிகளின் அடிப்படையிலேயே கைதுகள் இடம் பெற்றுள்ளதாகவும், விசாரணை நிறைவடையாத நிலையில் மேலும் நபர்கள் இருப்பின் கைது செய்யப் படுவர் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

விரிவான விசாரணைகளை செய்து சந்தேக நபர்கள் யாராக இருப்பினும் அவர்களைக் கைது செய்யுமாறு நீதவான் லங்க ஜயரத்னவிடம் அவர் சுட்டிக்காட்டினார்.

விரிவான விசாரணைகளை செய்து சந்தேக நபர்கள் யாராக இருப்பினும் அவர்களைக் கைது செய்யுமாறு நீதவான் லங்க ஜயரத்ன குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு ஆலோசனை வழங்கினார்.

இதனையடுத்து மன்றில் கருத்துக்களை முன்வைத்த சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன, சந்தேக நபர்கள் தற்போது ஒவ்வொருவரின் பெயராக கூறுவதாகவும், அவர்கள் உண்மையில் குற்றத்துடன் தொடர்புபட்டிருப்பின் அதிகாரம் இருந்த போது அவர்களுக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என கேள்வி எழுப்பினார். தற்போது சந்தேக நபர்கள் சிக்கு ண்டுள்ள நிலையில் மூக்கு வரை நீர் மட்டம்வந்ததும்வேறு வழியின்றி ஒவ்வொருவரின் பெயரைக் கூறிவருவதாகவும் எவராக இருந் தாலும் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வாதிட்டார்.

இதனையடுத்து குறித்த வழக்கை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்தி வைத்து அதுவரை தசநாயக்க உள்ளிட்ட 6 பேரின் விளக்கமறியலை நீடித்தார். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு–கேது பெயர்ச்சி பலன்கள்

## (27.07.2017 முதல் 13.02.2019 வரை)

## ஒன்பதில் ராகு வருகிறது பொன், பொருள் குவியப் போகிறது!






விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை வரை

(பெயரின் முதல் எழுத்துக்கள்: தோ, ந, நி, நே, நோ, ய, யி, யு உள்ளவர்களுக்கும்)

சிகரம் போல் உயர்ந்து சிறப்பான முறையில் வாழவேண்டும் என்று விரும்பும் விருச்சிக இராசி நேயர்களே!

ஜூலை மாதம் 27ஆம் திகதி பெயர்ச்சியாகும் இராகு- கேதுக்கள் உங்கள் இராசிக்கு நல்ல பலன்களை அள்ளி வழங்கப் போகிறது. 9ஆம் இடத்தில் இராகுவும், 3 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள்.

இராகுவைப் போல கொடுப்பானுமில்லை என்பதற்கேற்ப கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுக்கும் குணம் பெற்ற இராகு, ஒன்பதாமிடத்தில் அமரும் பொழுது நீங்கள் வள்ளலாக மாறலாம். வருமானம் பெருகிய வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள். எல்லாம் இராகு கையில் தான் இருக்கின்றது.

முன்னேற்றம் தரும் மூன்றாமிடத்தில் கேது சஞ்சரிப்பதும் யோகம்தான். அப்படிப்பட்ட நற்பலன்களைத் தரும் இராகு- கேதுக்கள் பெயர்ச்சியானவுடன் ஒரு மாத காலத்திற்குள் யோகபலம் பெற்ற நாளில் நாகசாந்திப் பரிகாரங்களைச் செய்வது வெற்றியை வழங்கும். சுற்றமும், நட்பும் போற்ற வாழலாம்.

அடுத்து வருகிற குருப்பெயர்ச்சி, 12 இல் வருகிறதே என்று பயப்பட வேண்டாம். செப்டெம்பர் 2 ஆம் திகதிக்கு மேல் குருப் பெயர்ச்சியானதும், சுப விரயங்கள் அதிகரிக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். பூர்வீக சொத்துகள் சம்பந்தமாக பஞ்சாயத்துகளில் புதிய திருப்பங்கள் ஏற்படும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளையும், கல்விக் கனவுகளையும் நிறைவேற்ற முயல்வீர்கள்.

அடுத்து வரும் சனிப்பெயர்ச்சி அற்புதமான பெயர்ச்சியாகும். உங்கள் இராசியில் சஞ்சரித்து வரும் சனி பகவான், டிசெம்பர் 19 ஆம் திகதி முதல் 2 ஆம் இடத்திற்கு செல்கிறார். இதன் விளைவாக குடும்ப ஒற்றுமை கூடும்.

இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும். முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். முக்கியப் புள்ளிகளில் ஒருவராக மாறி நாட்டுப் பணியிலும், வீட்டு பணியிலும் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ஒளிமயமான வாழ்வு தரும் ஒன்பதாமிடத்து இராகு!**

கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான் இப்பொழுது உன்னத வாழ்வு தரும் 9 ஆம் இடத்திற்கு அடியெடுத்து வைக்கின்றார்.

**ஒன்பதில் இராகு வந்தால் உன்னத வாழ்க்கை சேரும்!**

**பொன் பொருள் குவிவதோடு புகழையும் குவித்து வைப்பார்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது இந்த இராகு-கேது பெயர்ச்சியினால் பொன்னும், பொருளும் போற்றுகிற செல்வாக்கும் இன்னும் பெருகி வளம் கிடைக்கப் போகின்றது. மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி கிடைக்கப் போகின்றது. புண்ணிய காரியங்களுக்கு பொருளுதவி செய்யப்போகிறீர்கள். எண்ணிய எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

எந்தத் தொழிலைச் செய்பவராக இருந்தாலும் அதில் ஏற்றம் கிடைக்கும். வந்த வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வது நல்லது. வாழ்க்கைப் பாதையில் சந்திப்பவர்களெல்லாம் சந்தோஷத்தை வழங்கப் போகிறார்கள். ஆக்கபூர்வமாகச் சிந்தித்து செயற்படுவீர்கள். அதிசயச் சம்பவங்கள் ஏராளம் நடைபெறும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சிக்கு வித்திடும் அனைத்து யோகங்களும் வந்து சேரும் நேரமிது. தேகநலன் சீராக ஆனைமுகப் பெருமானையும், அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். பரிகாரங்களும், வழிபாடுகளும் அதிக பலன் வழங்கும்.

9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் இராகு தந்தை வழி உறவைப் புனிதப்படுத்துவார். பெற்றோர் வழியில் இருந்த பிரச்சினைகள் அகலும். உற்றார், உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர். தொழிலுக்காக அரசு வழியில் உதவிகளை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு அது கைகூடும். தொழில் நிலையத்தை இடமாற்றம் செய்ய வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இடமாற்றம் செய்யும் அமைப்பும், அதன் மூலம் எதிர்பார்த்த இலாபமும் வந்து சேரும். கடன் சுமை குறையும்.

உத்தியோகத்தர்களுக்கு தளராத முயற்சியும், தன்னம்பிக்கையும் நிலையான உயர்விற்கு வழிவகுத்துக் கொடுக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை சிலர் ஏற்றுக் கொள்ளும் யோகமும் உண்டு. கலைத் துறை, எழுத்துத்துறை, பத்திரிகைத் துறையில் உள்ளவர்கள் கௌரவிக்கப் படுவர். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிகப் பொறுப்புகள் வந்து சேரும். எதிர்பாராத விதத்தில் ஒருசிலருக்கு பதவிகள் கிடைக்கலாம்.

உடன்பிறப்புகளின் இல்லங்களில் நடைபெறும் விழாக்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். மூத்த சகோதர, சகோதரிகளால் அனுகூலம் கிடைக் கும். பூர்வீக சொத்துகளை விற்று விட்டுப் புதிய சொத்துகள் வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் கணிசமான பணவரவு ஏற்படும். எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். சுயஜாதகத்தில் இராகு 9இல் இருப்பவர்களுக்கு இப்பொழுது உன்னதமான நேரமாகும். அவர்கள் இராகு கேதுக்களை முறையாக வழிபடுவதன் மூலம் வெற்றிப்படியில் ஏற வழி பிறக்கும்.

**முன்னேற்றம் தரும் மூன்றாமிடத்து கேது!**

உங்கள் வாழ்வின் உயர்விற்கு காரணமே கேது பகவான் தான். கேதுவை ஞானகாரகன் என்பார்கள். அந்த ஞானத் தன்மை உங்களிடம் இருப்பதால்தான் உங்கள் எண்ணங்கள் பலிதமாகின்றன. சொல்லும் சொற்களை வெல்லும் சொற்களாக மாற்றுவது கேது பகவான்.

அவர் உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் சஞ்சரித்து வழி வகை செய்து கொடுக்கப் போகிறார். 3 ஆம் இடம் என்பது வீரம், வெற்றி, தைரியம், சகாயம் ஆகியவற்றை குறிக்கும் இடம் என்பதால், போட்டிகளில் வெற்றி கிடைக்கும். புகழ் கூடும். ஆற்றல் பளிச்சிடும். சொந்த பந்தங்களுடன் நல்லிணக்கம் உருவாகும். பணியாளர்கள் தொல்லை அகலும். செய்ய நினைத்த காரியங்களை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களுக்கு யோகம் வந்து சேரலாம்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

விருச்சிக இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த இராகு-கேது பெயர்ச்சி நல்ல முன்னேற்றத்தை கொடுக்கப் போகின்றது. குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். பொறுப்புகள் அதிகரிக்கும். புதிய வாய்ப்புகள் வந்து சேரும். வருமானம் திருப்தி தரும். வாங்கல்-கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். கணவன்-மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். பெண் குழந்தைகளின் சீர்வரிசை சாமான் களை வாங்கிச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

ஜென்மச் சனி விலகும் வரை ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவது நல்லது. உத்தியோகத்தில் ஊதிய உயர்வு உண்டு. ஒளிமயமான எதிர்காலம் அமைய இராகு கேதுக்களுக்கு சர்ப்ப சாந்தி செய்வது நல்லது. செவ்வாய்க்கிழமை முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றம் தரும்.

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

ஒன்பதாமிடத்து இராகுவால் தொழில் வளர்ச்சி கூடவும், வருமானம் திருப்திகரமாக இருக்கவும், மூன்றாமிடத்து கேதுவால் முன்னேற்றத்தின் முதல் படிக்குச் செல்லவும் விநாயகரையும், அனுமனையும் சனிக்கிழமை தோறும் வழிபட்டு வாருங்கள். இராகு-கேதுக்களுக்குரிய பரிகாரங்களைச் செய்வதன் மூலமும் நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள இயலும். பௌர்ணமியன்று மலை வலம் வருவதன் மூலம் மகத்துவம் காணலாம்.

**பாதசாரப்படி இராகு தரும் பலன்கள்!**

**புதன் சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (27.7.2017 முதல் 3.4.2018 வரை)**

இக்காலத்தில் நல்ல சம்பவங்கள் நிறைய நடைபெறும். புதன் உங்கள் இராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். லாபாதிபதியாக விளங்கும் புதன் காலில் இராகு சஞ்சரிப்பதால் இலாபம் திருப்திகரமாக இருக்கும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். வெளிநாட்டு முயற்சி வெற்றி தரும்.

**சனி சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (4.4.2016 முதல் 11.12.2018 வரை)**



இக்காலத்தில் சகோதர ஒற்றுமை பலப்படும். பழைய வாகனங்களை கொடுத்துவிட்டு புதிய வாகனம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் தொழில் செய்யலாமா என்று சிந்திப்பர். வீடு மாற்றம் அல்லது வீடு வாங்கும் யோகம் உண்டு.

**குரு சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (12.12.2018 முதல் 12.2.2019 வரை)**

இக்காலம் ஒரு பொற்காலமாகும். தன பஞ்சமாதிபதியான குரு சாரத்தில் இராகு வரும்பொழுது மிகுந்த முன்னேற்றம் ஏற்படும். புதியதொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். பிள்ளைகளின் சுபகாரியங்களை முடிக்க முன்வருவீர்கள். குடும்பத்தில் மங்கல ஓசையும், மழலையின் ஓசையும் கேட்கும் நேரமிது.

**பாதசாரப்படி கேது தரும் பலன்கள்!**

**செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (27.7.2017 முதல் 29.11.2017 வரை)**

இக்காலத்தில் உங்கள் இராசிநாதன் சாரத்தில் கேது உலாவருவது நன்மை தான். உடல் ஆரோக்கியம் சீராகும். உற்சாகம் உள்ளத்தில் குடிகொள்ளும். உடன் இருப்பவர்களால் உதவி கிடைக்கும். உத்தியோக முயற்சிகளில் வெற்றி உண்டு. வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள்.

**சந்திரன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (30.11.2017 முதல் 7.8.2018 வரை)**

இக்காலத்தில் பயணங்களால் பலன் கிடைக்கும். ஒருசிலருக்கு வெளிநாட்டு யோகம் உண்டு. உத்தியோகம் சம்பந்தமாக வெளிநாட்டில் வேலை பார்க்க விண்ணப்பித்திருந்தவர்களுக்கு அது கைகூடும். தாய் வழி உறவுகளிடையே மனஸ்தாபங்கள் மாறும். பூர்வீக சொத்துக்களை விற்று விட்டுப் புதிய சொத்துக்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தந்தைவழி உடன்பிறப்புகளின் பகை மாறும். இதுபோன்ற காலங்களில் பௌர்ணமி விரதமிருந்து மலைவலம் வருவது நல்லது.

**சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (8.8.2018 முதல் 12.2.2019 வரை)**

இக்காலம் தொழில் விருத்தி ஏற்படும் காலமாகும். புதிய பதவியும், பட்டங்களும் கிடைக்கும். அரசாங்கத்தால் கௌரவிக்கப்படுவீர்கள். புகழ், கீர்த்தி அதிகரிக்கும். போட்டிகளில் வெற்றி கிடைக்கும். வி.ஐ.பிக்கள் வீடு வந்து உதவி செய்வர். வெற்றிச் செய்திகளை அதிகம் கேட்கும் நேரமிது. இக்காலத்தில் முறையாக சூரிய வழிபாட்டை மேற்கொண்டால் தக்க விதத்தில் முன்னேற்றங்கள் ஏற்படும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## காணாமல் போனது யார்?

(03.08.2017 இன் தொடர்ச்சி)

தங்களில் ஒருவரை ஆறு விழுங்கிவிட்டது என்று அனைவரும் அதிர்ச்சிய டைந்தனர்.

அதனால், குரு மீண்டும் எண்ணிப் பார்க்குமாறு மற்றொரு சீடனிடம் கூறினார். அவனும் தன்னை விட்டு விட்டு மற்றவர்களை மட்டும் எண்ணி விட்டு, "குருவே, மோசம் போனோம். அபிஷ்டு எண்ணியது சரியே! நம்மில் ஒருவரைக் காணோம். ஐவர் தான் உள்ளோம் என்று அலறினான்.

இப்படியே மற்ற சீடர்களும், குருவும் தங்களைச் சேர்க்காமலேயே எண்ணி ஐவர்தான் என்று முடிவு செய்தனர். தங்களில் ஒருவரை இழந்துவிட்ட சோகத்தில் அழுதுகொண்டிருந்தனர்.

குருவுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. தன் சீடர்களில் ஒருவரை அபகரித்துக் கொண்ட ஆற்றின் மீது கடுங் கோபம் கொண்டார். அதனைப் பலவாறு பழித்துக் கூறி சாபமிட்டார். குருவும் சீடர்களும் துயரம் தாங்காமல் அழுது புலம்ப ஆரம்பித்துவிட்டனர். ஆற்றோடு போனவன் தங்களில் யார் என்று அறிந்து கொள்ளாமலேயே துக்கம் கொண்டாட ஆரம்பித்து விட்டனர். அந்த நேரத்தில் வழிப் போக்கன் ஒருவன் குருவும், சீடர்களும் இருந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவர்கள் துயரத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு அனுதாபம் கொண்டான். காரணம் என்ன என்று அவர்களிடம் விசாரித்தான். சீடர்கள் நடந்ததைக் கூறி மேலும் அழுதனர். வழிப் போக்கன் அவர்களை எண்ணிப் பார்த்தான். அவர்களின் மடமையை எண்ணி மனதிற்குள் சிரித்துக் கொண்டான்.

"அன்பர்களே! நடந்தது நடந்ததாக இருக்கட்டும். போனவர்களை மீட்கும் மந்திர சக்தி என்னிடம் உண்டு. உங்களில் ஆறு விழுங்கிய நபரை மீட்டுத் தருகிறேன். அதற்கு என்ன சன்மானம் கொடுப்பீர்கள்?" என்று வழிப்போக்கன் கேட்டான். "ஐயா, எங்களில் காணாமல் போனவரைத் தாங்கள் மீட்டுக் கொடுத்தால் எங்களிடம் உள்ள பணம் முழுவதையும் தந்து விடுகிறோம். தங்களுக்கு நாங்கள் என்றும் நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்போம்" என்று, குரு நெகிழ்ந்து கூறினார். வழிப்போக்கன் தன் கையில் ஒரு குறுந்தடி வைத்திருந்தான். அதனை எடுத்தவாறு, "இந்தக் கோலில்தான் மந்திர சக்தி இருக்கிறது. நீங்கள் வரிசையாக நில்லுங்கள். நான் இந்தத் தடியால் முதலில்



நிற்பவர் முதுகில் தட்டுவேன். அவர் 'ஒன்று' என்று கூறி விட்டுத் தன் பெயரைக் கூற வேண்டும்" என்று கூறினான்.

வழிப்போக்கன் கூறியவாறே, குரு வரிசையில் முதலிலும் அதனையடுத்து சீடர்களும் வரிசையாக நின்றனர். முதலில் குருவின் முதுகில் கம்பால் தட்டினான். அவர், "ஒன்று. என் பெயர் பரமார்த்த குரு" என்று கூறினார்.

அடுத்தவனைத் தட்டியதும் 'இரண்டு' என்று கூறித் தன் பெயரையும் சொன்னான். இவ்வாறே மற்றவர்களும் முதுகில் தட்டியதும் தங்கள் பெயருடன் எண்ணிக்கையையும் கூறினர். கடைசியாக நின்றவன் "ஆறு, என் பெயர் மூடம்" என்ற கூறியதும் அவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தாங்கவில்லை. காணாமல் போனவன் கிடைத்து விட்டான், இப்போது ஆறு பேர் உள்ளோம் என்று கூறி ஆனந்தக் கூத்தாடினர்.

தங்களில் ஒருவனை மீட்டுத் தந்த வழிபோக்கனின் அதிசய ஆற்றலை எண்ணி வியந்தனர். அவனைப் போற்றிப் புகழ்ந்து, தங்களிடமிருந்த பணம் முழுவதையும் தந்தனர்.

அதிர்ஷ்டத்தை நினைத்துக் கடவுளுக்கு நன்றி கூறினான் போக்கன். (முற்றும்)



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

08.2017
05

- 1100 - இங்கிலாந்து மன்னனாக முதலாம் ஹென்றி முடி சூடினான்.
- 1305-இங்கிலாந்துக்கு எதிராகக் கிளர்ச்சிக்குத் தலைமை வகித்த வில்லியம் வொலஸ் கிளாஸ்கோ அருகில் கைது செய்யப்பட்டு லண்டனுக்குக் கொண்டு செல்லப்பட்டான்.
- 1583 - சேர் ஹம்பிறி கில்பேர்ட் வட அமெரிக்காவில் இங்கிலாந்துக்கான முதலாவது குடியேற்ற நாட்டை (தற்போதைய) சென் ஜோன்ஸ், நியூபவுண்லாந்தில் அமைத்தார்.
- 1689 - 1,500 இரக்கேசுக்கள் கியூபெக்கின் லாச்சின் நகரைத் தாக்கினர்.
- 1806 - இலங்கையில் முகமதியர்களுக்கான திருமணச் சட்ட விதிகள் அரசியல் நிர்ணய சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டன.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர் கூட்டமைப்பினர் லூசியானாவில் மிசிசிப்பி ஆறு வழியே அமெரிக்கப் படைகளை விரட்டினர்.
- 1870 - புருசியர்களுக்கும் பிரெஞ்சுப் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற போரில் புருசியா வெற்றி பெற்றது.
- 1884-விடுதலைச் சிலைக்கான அடிக்கல் நியூயோர்க் துறைமுகத்தில் பெட்லோ தீவில் நாட்டப்பட்டது.
- 1914-ஐக்கிய அமெரிக்காவும் பனாமாவும் கூட்டாக பனாமாக் கால்வாய் ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டன.
- 1940-இரண்டாம் உலகப் போர் லாத்வியா சோவியத் ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர் ட்ரொய்னா என்ற இடத்தில் போர் இடம்பெற்ற போது காலை 11:00 மணிக்கு எட்னா மலை வெடித்தது. இதன் புகை மண்டலம் பல மைல் உயரத்துக்குக் கிளம்பியது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்:ஆவுஸ்திரேலியா, நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் கௌரா நகரில் 545 ஜப்பானிய போர்க் கைதிகள் சிறையை உடைத்துத் தப்பிச் செல்ல எத்தனித்தனர்.
- 2006 - வறுமைக்கு எதிரான அமைப்பின் (Action Fiam) என்ற அரச சார்பற்ற அமைப்பின் 15 பணியாளர்கள் மூதூரில் (ஆகஸ்ட் 4 நள்ளிரவில்) இலங்கை இராணுவம் எனச் சந்தேகிக்கப்படுபவர்களால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

பிறப்புக்கள்

- 1898 - கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை, வயலின் இசைக்கலைஞர் (இ. 1970)
- 1915 - ஹரிகிருஷ்ணகோனார், மேற்கு வங்க அரசியல்வாதி (இ. 1974)
- 1926 - சோ. அழகர்சாமி, தமிழக அரசியல்வாதி (இ. 2009)
- 1931 - பாப்பா உமாநாத், இந்திய இடதுசாரி அரசியல்வாதி (இ. 2010)
- 1968-நளாயினி தாமரைச்செல்வன், ஈழத்து எழுத்தாளர்
- 1974- கஜோல், இந்திய நடிகை
- 1987 - ஜெனிலியா, இந்திய நடிகை

இறப்புகள்

- 1971 - கே. ஆர். ராமசாமி, தமிழ் நாடக, திரைப்பட நடிகர், பாடகர்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 140 | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 300 | 300 | 400 | 300 |
| தக்காளி | 160 | 160 | 120 | 140 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 150 | 180 | 80 | 120 | 120 | 120 |
| கரட் | 140 | 200 | 200 | 200 | 200 | 200 |
| பூசணி | 60 | 100 | 110 | 80 | 80 | 100 |
| புடோல் | 80 | 100 | 50 | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 60 | 100 | 140 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 160 | 180 | 150 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 90 | 100 | 160 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 300 | 200 | 100 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 50 | 80 | 160 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 150 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 140 | 100 | 120 | 160 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 100 | 50 | 100 | 80 | 100 |
| பீற்றூட் | 50 | 60 | 150 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 160 | 180 | 150 | 140 | 160 | 80 |
| முருங்கைக்காய் | 180 | 50 | 120 | 100 | 100 | 120 |
| போஞ்சி | 200 | 200 | 100 | 160 | 200 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 100 | 80 | 80 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 60 | 20 | 50 | 80 | 120 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 60 | 65 | 40-60 | 60 |
| இராசவள்ளி | 200 | 200 | — | — | 300 | — |
| வெங்காயப்பூ | 200 | 200 | 150 | — | 160 | 150 |
| முள்ளங்கி | 60 | 100 | 30 | 80 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 60 | — | — | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலங்களை கட்டுவதற்கு பதில் சுவர்களை அமைத்து விடுவதால் பல மனிதர்கள் தனித்து விடப்படுகின்றார்கள். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இருப்பதைப் புனரமைப்பதும் புதிதாக நிர்மாணிப்பதும்

இந்து ஆலயங்களின் அமைப்பு விக்கிரக பிரதிஷ்டை, திருக்குடமுழுக்கு, பூசை ஒழுங்குகள் என்பன அனைத்தும் ஆகம விதிப்படியே மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட ஆலயங்களில் குறைபாடுகள் இருப்பின் அவற்றால் கேடு விளையும் என்பது வேதவிற்பன்னர்களின் கருத்து.

ஆக, இந்து ஆலயங்கள் ஆகம முறைப்படி இயக்கப்பட வேண்டும். ஆகம விதிமுறைக்கு உட்படாத கோயில்களும் உள.

இவற்றை ஆலயங்கள் என்று கூறுவதை விட மடாலயங்கள் என்று கூறுவது பொருத்துடையது.

எது எவ்வாறாயினும் ஆலயங்களில் ஆகம விதிக்குறைபாடுகள் இருப்பின் அவற்றைச் செம்மைப்படுத்துவதற்கு இரண்டு வழிகள் உண்டு.

அதிலொன்று பிழைகளைத் திருத்தி; குறைகளை நிவர்த்தி செய்து; குற்றம் களைந்து கொள்வது.

இரண்டாவது பிழைகள் கொண்ட கட்டுமானத்தை அப்படியே இல்லாமல் செய்து புதிதாக நிர்மாணிப்பது.

இந்த இரண்டு முறைகளில் எது பொருத்தமானது என்ற கேள்வி உங்களிடம் ஏற்பட்டால், சிறிய குறைகள் குற்றங்கள் இருப்பின் குற்றம் களைந்து குறைகளை நீக்கி புனர்நிர்மாணம் செய்வது பொருத்துடையது.

மாறாக ஏகப்பட்ட பிழைகள் குற்றங்கள் எங்கு பார்த்தாலும் தவறுகள் என்ற நிலைமை இருப்பின்,

இருக்கின்ற பழைய கட்டுமானத்தை இடித்து புதிதாக கோயிலைக் கட்டுவது உத்தமமானதும் பயன்தரக்கூடியதுமாகும்.

இதை நாம் கூறும்போது அது சரி இப்போது திடீரென ஆகம விதி, கோயில் புனர்நிர்மாணம், புதிதாகக் கோயில் கட்டுதல் என்ற விடயங்களெல்லாம் எதற்கானது என்று நீங்கள் கேட்பது நமக்குப் புரிகிறது.

நீங்கள் கேட்பது நியாயமானது. நாம் இந்துக் கோயில்கள் பற்றிக் கூற வந்தது எங்கள் அரசியல் தலைமை தொடர்பில் சில கருத்துக்களை முன்வைப்பதற்கு என்பதே உண்மை.

அதாவது தமிழ் அரசியல் தலைமையில் நிறைய பழுதுகள் ஏற்றப்பட்டு விட்டன. இப்படியே நிலைமை நகருமாக இருந்தால், நாமே நமக்குப் பகை என்பதாக எல்லாம் முடிந்து விடும்.

எனவே நம் அரசியல் தலைமையில் ஏற்பட்டுள்ள பழுதுகள், குறைபாடுகள் நிவர்த்திக்கக் கூடியவையா? நம் தமிழ் தலைமையை குற்றம் களைந்து புனிதமாக்க முடியுமா?

அல்லது இதைத் திருத்துவது உக்கி உளுத்த வீட்டைத் திருத்துவதற்கு ஒப்பானது.

எனவே வீட்டைத் திருத்துவதைவிட, புதிதாக ஒன்றைக் கட்டுவதே நல்லது என இரண்டு தீர்மானங்களில் ஏதாவது ஒன்றை எடுக்க வேண்டிய சூழ்நிலையில் தமிழ் மக்கள் உள்ளனர்.

இதில் எந்தத் தீர்மானம் ஏற்புடையதும் பொருத்துடையதும் என்பதை தமிழ் மக்களே முடிவு செய்ய வேண்டும்.

இந்த முடிவில் திருத்தலாம் என்றால் கட்சிகளில் இருந்து சிலரை நீக்கி சிலரை உள்ளீர்க்க வேண்டும்.

இல்லை புதிதுதான் என்றால் அது பற்றி தீர ஆராய்ந்து புனிதத்துவத்துடன் அந்தப் பணி பூர்த்தி செய்யப்படுதல் அவசியம்.

இந்த இரண்டில் எது என்பதை தமிழ் மக்கள் முடிவு செய்ய வேண்டும்.

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில்
# சைவ இளைஞர் மாநாட்டுக்கான ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்று

சைவ இளைஞர் மாநாட்டுக்கான முன்னாயத்த ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலய வீதியிலுள்ள நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

சைவத்தமிழ் மறுமலர்ச்சியில் இளைஞரின் பங்கும் பணியும் என்ற தொனிப் பொருளில் எதிர்வரும் 11, 12, 13ஆம் திகதிகளில் சைவ இளைஞர் மாநாடு யாழ். இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

குறித்த மாநாடு தொடர்பான இறுதித் தீர்மானங்களை எடுப்பதற்கான ஒருங்கிணைப்புக் கூட்டம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், தென் கயிலை ஆதீன குருமகா சந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளார் இணைத் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலும் இருந்து மாநாட்டுக்கான மாவட்ட இணைப்பாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே இந்த கூட்டத்தில் இளைஞர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், சைவத் தமிழ் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குமாறு மாநாட்டு ஏற்பாட்டாளர்களான அகில இலங்கை சைவ மகா சபையினர் அறிவித்துள்ளனர். (மு-9)

## மோ.சைக்கிள்-துவிச்சக்கரவண்டி நேருக்கு நேர் மோதி விபத்து

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கரவண்டியும் நேருக்குநேர் மோதியதில் இருவரும் காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம்நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.45 மணியளவில் அரியாலை மாம்பழம் சந்தியில் இடம் பெற்றுள்ளது.

கைதடி நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் மாம்பழம் சந்தி ஒழுங்கையிலிருந்து வந்த துவிச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதியதிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த யாழ். இந்துக் கல்லூரி வீதியைச் சேர்ந்த நாகேந்திரன் வாதுசன் (வயது 22) என்பவரும் துவிச்சக்கரவண்டியில் பயணித்த அரியாலை கச்சேரியைச் சேர்ந்த சின்னத்தம்பி மகேந்திரன் (வயது-57) என்பவருமே காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (8-3-30)

## வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.புனித மரியன்னை பேராலய வருடாந்த திருவிழா நாளை 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை நற்கருணைப் பெருவிழாவும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் மற்றும் காலை 6.30 மணிக்கு ஓய்வு நிலை ஆயர் இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலியும் இடம்பெறவுள்ளது.(இ-10-107)

## ஆக்கத்திறன் கண்காட்சியும் சந்தையும்

(யாழ்ப்பாணம்)

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் திக்கம் பாலர் பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சியும் சந்தையும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு திக்கம் கலாசார மண்டபத்தில் க.சுதேஸ் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி சுரேஸ் சுதாஜினிதேவி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-3)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**கணப்பொருத்தம் என்றால் என்ன?**

கணப்பொருத்தம் என்பது மணமக்களின் குணங்களையும் சுக வாழ்வையும் ஒற்றுமையையும் குறிக்கும்.

**நட்சத்திர கணங்கள்**

நட்சத்திர கணங்கள் மனுஷ கணம், தேவ கணம், ராஜய கணம் எனப் பிரிக்கப்படுகின்றது.

**தேவ கணம் நட்சத்திரங்கள்**

அச்சுவினி, ரோகிணி, திருவாதிரை, பூரம், உத்தரம், பூராடம், உத்தராடம், பூரட்டாதி, உத்தரட்டாதி

**ராஜஸ கணம் நட்சத்திரங்கள்**

கார்த்திகை, ஆயிலியம், மகம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம். (தொடரும்)

கர்ப்பிணிப் பெண்களுக்கு முதல் மூன்று மாதங்களுக்குள் ருபெல்லா (ஜேர்மன் சின்னமுத்து) நோய் ஏற்படின் அது குழந்தையின் பார்வையப் பறித்துவிடும். ருபெல்லா ஊசியை தவறாது ஏற்றுவதன் மூலம் இதனைத் தவிர்க்க முடியும்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

பிள்ளை பெறாத என்னை பெற்ற தாயாக வரிப்பதாக வாக்களித்து நீயும் என் நெஞ்சை நெகிழ்த்திவிட்டாய். இதைவிட இன்னொரு சொர்க்கம் எனக்கு வேறு என்னவேண்டும்? இப்பிறவியில் நான் அடைய முடியாத பேற்றினைப் பெற்றேன். அந்த ஆனந்தத்தில் கண்ணீர் அமுத தாரையாகப் பொழிகின்றதேயன்ற வேறொன்றும் இல்லை. இனி நீதான் என் பிள்ளை. நான்தான் உன் அன்னை. இந்தக் கணம் முதல் உன்னை என் கண்ணின் மணியாகக் கருதி வளர்ப்பேன். அதுமட்டுமில்லை இன்றுதான் எனக்கு நீ பிறந்தாய் என எண்ணி உனக்கு ஸ்ரீநிவாசன் எனப்பெயரிட்டு அழைப்பேன். என்னை விட்டு நீ ஒருபோதும் பிரிந்து போய்விடக்கூடாது என்று கண்களில் நிறைந்த நீருடன் வேண்டிக்கொண்டாள்.

புதுப்பெயர் பெற்ற ஸ்ரீநிவாசன் பொலிவுடன் புன்னகை புரிந்தான். (தொடரும்)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ இந்நாட்டு இயக்கங்களை விட உண்மையாகவே சிறப்பு மிக்க நோக்கங்களையும் குறிப்புக்களையும் கொண்ட இயக்கங்கள் வேறு எந்த நாட்டிலும் இல்லை என்பதை என்றென்றும் நினைவில் வையுங்கள். இவ்வுலகில் கிட்டத்தட்ட ஒவ்வொரு நட்டிலும் ஜாதிகளை யான் கண்டுள்ளேன். ஆனால் இங்கு போல வேறெங்கும் அவற்றை வகுத்த முறையும் நோக்கமும் அவ்வளவு மேம்பட்டனவாக அமைந்ததில்லை. இவ்வாறு ஜாதி விலக்குதற்கரிய ஒன்றாகுமாயின் பணத்தைப் பொறுத்து அமையும் ஜாதியை விட தூய்மையையும் பண்பாட்டையும் தன்னலமறுப்பையும் பற்றிவரும் ஜாதியை மேலாகக் கொள்வேன். ஆதலின் தூற்றாதீர்கள்.

❖ உங்கள் வாயை மூடிக்கொண்டு நெஞ்சங்களைத் திறந்துவிடுங்கள். உங்களில் ஒவ்வொருவரும் பாரம் முழுதும் உங்கள் தலைமீதே இருப்பதாக எண்ணிக்கொண்டு இந்த நாடும் உலகம் முழுவதும் உய்வடைவதற்காக முயலுங்கள். வேதாந்த ஒளியையும் வாழ்க்கையையும் வீடுதோறும் எடுத்துச்சென்று ஒவ்வோர் ஆன்மாவிலும் மறைந்து கிடக்கும் தெய்வத்தன்மையை எழுப்புங்கள். அவ்வாறு செய்தால் உங்கள் வெற்றி எந்த அளவினதாயினும் ஓர் அரும் பெரும் காரியத்திற்காக நீங்கள் வாழ்ந்தும் உழைத்தும் வந்து இறந்த திருப்தி உங்களைச் சாரும். இக்காரியத்தின் வெற்றியில் தான் அதை எவ்வாறு விளைத்தாலும் சரியே- இதில்தான் இங்குள்ள மக்களின் உய்வும் இனி வருபவர்கள் உய்வும் ஆதாரமாக நிலைத்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குமரன் லஜிதன் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி இன்று




அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் அமரர் திருக்குமரன், லஜிதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரன் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளது.

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், மல்லாகம் நீதிமன்ற பதில் நீதிபதி ந.தம்பிமுத்து. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் ம.மணிசேகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். மதிப்புறு விருந்தினர்களாக வலி வடக்கின் முன்னாள் உப தவிசாளர் ச.சஜீவன். பூநகரி மத்திய கல்லூரி ஆசிரியர் த.வாகீஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் உபசெயலாளர் சி.தயாளபாலன், அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்தின் முன் னாள் உப தவிசாளர் ச.சஜீவன், பூநகரி மத்திய கல்லூரி ஆசிரியர் த.வாகீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் உப செயலாளர் சி.தயாளபாலன், அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர் சு.சுதன், முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி ஆசிரியர் ம.கோகிலதாஸ் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். முன்னதாக இடம் பெறும் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

## பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் கழக வீரர்களுக்கிடையிலான கபடிச்சுற்றுப் போட்டி

### இறுதிக்குள் நுழைந்தது பெரியம்மான் சலஞ்யேர்ஸ்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் கழக வீரர்களுக்கு இடையிலான கபடிப் போட்டி (02. 08. 2017) புதன் நடைபெற்ற போட்டியில் பெரியம்மான் சலஞ்யேர்ஸ் அபாரமான வெற்றியை பதிவு செய்தது. தன்னை எதிர்த்து விளையாடிய சொக்கன் அணியை திறமையான ஆட்டத்தால் திணற வைத்தது. போட்டியில் பலமான அணியாக காணப்பட்ட சொக்கன் அணியை எதிர்கொண்ட பெரியம்மான் அணி துணிச்சலாக போட்டியை எதிர்கொண்டது. ஆரம்பம் முதலே போட்டி விறுவிறுப்பாக காணப்பட்டது. அனுபவ வீரர்களை கொண்ட சொக்கன் அணி ஆரம்பத்தில் தடுமாற்றம் அடைந்து புள்ளிகளை இழந்தது. பின்னர் வேகம் கொண்டு ஆட்டத்தை தொடர்ந்த சொக்கன் அணி இடைவேளையின் போது 26:21 என முன்னிலையில் காணப்பட்டது.

மீண்டும் இடைவேளையின் பின்னர் ஆரம்பமான போட்டியில் ஆதிக்கம் செலுத்திய சொக்கன் அணி 31:26என்ற நிலையில் காணப்பட்டது. அதன் பின் தடுமாறிய சொக்கன் அணி விவேகமாக விளையாடிய பெரியம்மான் அணியிடம் புள்ளிகளை மெல்ல மெல்ல இழந்தது.

இறுதிகட்டம் வரை இரு அணிகளுமே வெல்லும் வாய்ப்பு மாறி மாறி வந்து போனது. இறுதியாக வெற்றி பெறும் வாய்ப்பை சொக்கன் அணி தவறவிட போட்டி 54:48 என இறுதியில் பெரியம்மான் அணி வெற்றி பெற்று தொடரில் இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரர் ஆக விதுசன் (தம்பா) தெரிவு செய்யப்பட அவருக்கான விருதினை கழக உறுப்பினரும் ராஜா சுவைச்சோலை உரிமையாளரின் மகன் வழங்கி கௌரவித்தார்.

வெற்றி பெற்ற அணிக்கான பணப்பரிசை கழக மூத்த உறுப்பினர் தனஞ்யன் அண்ணா வழங்கி கௌரவித்தார். வெற்றிக்கிண்ணத்தை ராஜா சுவைச்சோலை உரிமையாளர் வழங்கி கௌரவித்தார். (க)

## கொன்சல்வேஸ் வெற்றிக் கிண்ணம் சென்.ஆன்ஸ் அணி வசமானது




ஜெக மீட்பர் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் 'கொன்சல்வேஸ்' வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் வலைப்பாடு சென்.ஆன்ஸ் அணி கிண்ணம் வென்றது.

ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம் பெற்று வருகின்றன. நடைபெற்ற இறுதியாட்டத்தில் வலைப்பாடு சென்.ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதற்பாதியின் முடிவு வரை இரு அணிகளும் எந்தக் கோலையும் பதிவு செய்ய வில்லை. இரண்டாம் பாதியும் கோல்கள் இல்லாமல் நகர்ந்தது. ஆட்டம் முடிவதற்கு 3 நிமிடங்கள் இருக்கையில் வலைப்பாடு சென். ஆன்ஸ் அணியின் வீரர் லீனஸ் முதல் கோலைப் பதிவு செய்தார். முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் சென். ஆன்ஸ் அணி வெற்றிபெற்றது.

சிறந்த வீரராக வலைப்பாடு சென்.ஆன்ஸ் அணியின் லீனஸ், சிறந்த கோல் காப்பாளராக அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் அணியின் ஆகாஸ் ஆகியோர் தெரிவானார்கள். (க)

## கிங் ஓப் சொக்கனை வீழ்த்தி வாரியேர்ஸ் 2 ஆவது வெற்றி



பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் கழக வீரர்களுக்கு இடையிலான கபடிப் போட்டியில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 7.30 மணிக்கு நடைபெற்ற போட்டியில் அப்பாக்குட்டி வாரியேர்ஸ் இரண்டாவது வெற்றியை பதிவு செய்தது தன்னை எதிர்த்து விளையாடிய கிங் ஓப் சொக்கன் அணியை திறமையான ஆட்டத்தால் திணற வைத்தது.

இறுதியில் 54:36 அப்பாக்குட்டி அணி வெற்றி பெற்று தொடரில் முன்னிலை பெற்று இறுதி போட்டிக்கான வாய்ப்பை தக்க வைத்தது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக சங்கஜன்தெரிவு செய்யப்பட அவருக்கா[n] விருதினை பிரகாஸ் எலக்ரோனிக் உரிமையாளர் பிரகாஸ் அண்ணா வழங்கி கௌரவித்தார்.

வெற்றி பெற்ற அணிகான பணப்பரிசையும் வெற்றிக் கிண்ணத்தையும் வழங்கி கௌரவித்தார். (க)

## கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுத் தொடர்

### இறுதிப் போட்டியில் பலாலி விண்மீன்





அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்தமாக கற்கோவளம் உதயதாரகை வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்டசுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் அரையிறுதிப்போட்டியில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்டது பலாலி விண்மீன். முதல பாதியாட்டத்திலேயே விண்மீன் வீரர்களால் உதைக்கப்பட்ட பந்துகள் அதிரடியாக எதிரணியி னரின் கோல் கம்பங்களை நோக்கி சீறிப் பாய்ந்தது. விண்மீன் வீரர் காண்டீபனால் முதலாவது கோல் போடப்பட விண்மீன் வீரர் நிஷாந்தனால் அடுத்தடுத்து இரண்டு கோல்கள் போடப் பட முதல்பாதியாட்டம் 3:0 என்ற கோல்கணக்கில் முடிவிற்கு வந்தது. பொம்மர்ஸ் அணியின் முன்கள வீரர்கள் கோல் போட மேற்கொண்ட முயற்சிகள் விண்மீன் பின்கள வீரர்களால் முறையடிக்கப் பட்டன. பிற்பாதியாட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் போடாமையால் 3:0 என்ற கோல் கணக்கில் பொம்மர்ஸ் அணியை வீழ்த்தி இறு திப்போட்டிக்குள் நுழைந்தது பலாலி விண்மீன். ஆட்ட நாயக்னாக பலாலி விண் மீன் அணியின் பின்கள வீரர் ரதன் தெரிவு செய்யப்பட்டு பதக்கம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் புலிகள்...

குடாநாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்த இராணுவத்தை களமிறக்கியிருப்பது குறித்து கருத்து வெளியிட்ட அவர், வடக்கிலும், தெற்கிலும் ஒரே மாதிரியான சட்டமே அமுல்படுத்தப்படும் என்று கூறினார்.

இராணுவத் தளபதி மஹேஷ் சேனாநாயக்க மல்வத்துப்பீட மற்றும் அஸ்கிரிப்பீட மகாநாயகர்களை சந்திப்பதற்காக நேற்றைய தினம் காலை கண்டிக்கு விஜயம் செய்தார்.

இராணுவத்தின் முக்கிய சில அதிகாரிகளுடனும், தனது பாரியாருடனும் கண்டிக்குச் சென்ற இராணுவத் தளபதி, மகாநாயக்கர்களை சந்தித்து கலந்துரையாடி ஆசிபெற்றுக் கொண்டார்.

இதன்பின்னர் அங்கிருந்து திரும்பிய இராணுவத் தளபதி ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களை அடுத்து அங்கு விரைந்த பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, விடுதலைப் புலிகள் முழுமையாக அழிக்கப்பட்டதாக கூறினாலும் அதன் விதைகள் உயிருடனே இருப்பதாகவும், இந்த மோதல்களைப் போன்றே புலிகளின் ஆரம்பகால சூழ்நிலை இருந்ததாகவும் கூறியிருந்தார்.

இந்த கூற்று தொடர்பில் ஊடகவியலாளர்கள் இராணுவத் தளபதியிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த ஜெனரல் மஹேஷ் சேனாநாயக்க, தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு என்று கூறுவதற்கு நான் விரும்புவதில்லை. கடும்போக்குவாத குழு அல்லது இளைஞர் குழு தங்களது சமூகத் தேவைக்காக சில பிழைகளை செய்வதற்கு உ[illegible]ப்படலாம். அதன் அர்த்தம் விடுதலைப் புலிகள் எனப்படாது. விடுதலைப் புலிகள் இயக்கம் இல்லை என்று நான் கூறவரவில்லை. ஆனால் அதன் அர்த்தம் முழுமையாக எல்.ரி.ரி.ஈ அல்ல. எவ்வாறாயினும் இப்படிப்பட்ட அமைப்புக்களை எதிர்கொள்ள முப்படைகளும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் தயாராகவே இருக்கின்றோம். பொலிஸ்மா அதிபர் கூறுவதில் சில உண்மை இருக்கலாம். ஏனென்றால் பொலிஸாரின் நடவடிக்கைகளை செய்வதில் தடங்கல் ஏற்படுகிறது. அந்த சந்தர்ப்பத்தில் இராணுவம் தலையீடு செய்து கடமையை நிறைவேற்ற வேண்டும். அது யாராலும் கூறும்வரை இருக்கக்கூடாது. இதுகுறித்து நான் பொலிஸ்மா அதிபரை சந்தித்து பேச்சுநடத்தினேன். மது அருந்தும் இடத்தில் வாள் ஒன்றை வைத்துக்கொண்டு மது அருந்தமுடியும் என்றால் வ[illegible]க்கும் சரி. கிழக்கும் சரி அதற்கெதிராக ச[illegible] நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மது அருந்துவதற்கு வேறொரு சட்டமும், மது அருந்தும்போது வாளை வைத்திருப்பதற்கு இன்னுமொரு சட்டமும் வித்தியாசமாகும். வாளை வைத்துக்கொண்டு வேறொரு வேலைக்குச் சென்றால் அதற்கு வேறொரு சட்டம். எனவே சட்டத்தை இந்த நாட்டில் சரியாக அமுல்படுத்தினால் மக்கள் ஒழுக்கத்தை கடைப்பிடித்தால் இந்த நிலை குறித்து என்னிடம் கேள்வி எழுப்பமாட்டீர்கள் என்றார்.

இதேவேளை, வடக்கில் இராணுவ முகாம்கள் மற்றும் மக்கள் காணிகள் விடுவிப்பு குறித்து தெற்கில் உள்ளவர்கள் குழப்பமடைய வேண்டாம் என்று இராணுவத் தளபதி இதன்போது கேட்டுக்கொண்டார்.

படைகள் குறைக்கப்படவில்லை. பொருட்களும் குறைக்கப்படவில்லை. அதேபோல பலமும் குறையவில்லை. காணிகள் அல்ல பிரச்சினை. எங்கே இருப்பதுதான் பிரச்சினை. 100 ஏக்கரில் இருப்பது தேவையல்ல. ஒரு ஏக்கரில் இருந்துகொண்டு அந்த நூறையும் பார்ப்பதற்கான முறை இந்த நாட்டில் உள்ளது. அதிக மேம்பாடுகள் இராணுவத்தில் செய்யப்பட்டுள்ளன. பொருட்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. ஒழுங்கமைப்புக் குழுவும் எமக்கு உள்ளது. மீண்டுமொரு 30 வருடப் போர் இந்நாட்டில் ஏற்படாது என்பது தான் தெற்கிற்கு நான் வழங்கும் செய்தியாகும். அப்படியான சூழ்நிலை மீண்டும் உருவாகாதபடியே இராணுவத்தை நான் வழிநடத்துகிறேன் என்று தெரிவித்தார் இராணுவத் தளபதி மஹேஷ் சேனநாயக்க. (மு-11)

## பொலிஸாருக்கு...

டன் தொடர்புடைய இரண்டு பொலிஸாரையும் எதிர்வரும் 15ஆம் திகதி விளக்கமறியலில் வைக்குமாறும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த யோகராசா தினேசின் தாய் மற்றும் சகோதரியிடமும் நேற்றைய தினம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வல்லிபுரம் ஆலயத்துக்குச் செல்லும் வீதியின் 6ஆம கட்டைப் பகுதியில் கடந்த ஜூலை 9ஆம் திகதி மாலை 4 மணியளவில் மணல் ஏற்றி சென்ற துன்னாலையைச் சேர்ந்த 24 வயதுடைய யோகராசா தினேஸ் என்ற இளைஞர் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டில் உயிரிழந்திருந்தார்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து இரண்டு பொலிஸார் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இவர்கள் நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த இளைஞர் சட்டவிரோதமாக மணல் ஏற்றி சென்ற நிலையில் பொலிஸார் இடைமறித்த போதும் வாகனத்தை நிறுத்தாத காரணத்தால் தாம் துப்பாக்கி சூடு நடத்தியதாக பொலிஸார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-11,60)

## புலிகளின் யோசனை...

விக்கும் பிரேரணைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், 1977 இல் அரசியலுக்குள் பிரவேசித்த ரணில் விக்கிரமசிங்க, நுண்ணறிவும், துணிவும், பொறுமையும், நிதானமும் கொண்டவராக அரசியல் தலைவருக்கு இருக்கவேண்டிய குணாம்சங்களை கொண்டவராகத் திகழ்கிறார். நேர்மையாகச் செயற்படக்கூடிய அரசியல்வாதியாவார். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பத்தில் அதை தெளிவாக காணக்கூடியதாக இருந்தது. நெருக்கடியான சூழ்நிலைகளிலும் கொள்கைப்பற்றுடனும், தன்னம்பிக்கையுடனும் கட்சியை வழிநடத்தி இறுதியில் வெற்றியின் வழிக்கு இட்டுச்சென்றார்.

குறிப்பாக விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால அரசு கோரிக்கையை அவர் ஏற்றிருந்தால் 2005இல் ஜனாதிபதியாகியிருப்பார். எனினும், நாட்டின் நலனை முன்னிறுத்தி அதை அவர் நிராகரித்தார். உலகநாடுகளிலிருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. எனினும், மக்கள் நலனை முன்னிறுத்தி அவர் செயற்பட்டார்.

கடந்த அரசில் நான் அமைச்சராக இருந்தேன். யுத்த வெற்றியை அடிப்படைவாத முறையில் கொண்டாடினர். இனங்களுக்கிடையில் குரோதத்தை தூண்டினார்கள். பிரஜைகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அந்த அரசில் அமைச்சராக இருந்ததையிட்டு கவலை அடைகின்றேன்.

அவற்றுக்கெல்லாம் எதிராக எதிர்க்கட்சியில் இருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குரலெழுப்பி இன ஒற்றுமையை மையப்படுத்தி செயற்பட்டார். அவருக்கு எமது கட்சி மற்றும் மக்கள் சார்பில் வாழ்த்துக்களும் பாராட்டுகளும் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார். (மு-11)

## சிறுப்பிட்டி இளைஞர்...

தாக குற்றஞ்சாட்டப்பட்டது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் அச்சுவேலி பொலிஸாரால் 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த இராணுவ முகாமில் கடமையாற்றிய 16 இராணுவ வீரர்களுக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு கொலைக் குற்றம் சாட்டப்பட்டு பின்னர் 16 இராணுவத்தினரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

சுமார் 18 வருடங்களின் பின்னர் சட்டமா அதிபரினால் இவ்விடயம் தொடர்பாக பரிசீலிக்கப்பட்ட பின் குறித்த இராணுவத்தினர் மேல் கொலை குற்றம் சாட்டப்பட்டு கடந்த வருடத்தில் இருந்து யாழ் நீதவான் நீதிமன்றில் மீண்டும் குறித்த வழக்கு விசாரணை தொடரப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்பட்ட 16 இராணுவத்தினரில் இருவர் இறந்த நிலையில் ஏனைய 14 இராணுவத்தினரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு நடத்தப்பட்டது.

இந்நிலையில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்படும் இராணுவ வீரர்களுக்கு பிணை வழங்கக்கோரி யாழ்.மேல் நீதிமன்றில் பிணை மனு விண்ணப்பிக்கப்பட்டு அதில் 5 இராணுவத்தினருக்கு யாழ் மேல் நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டது. ஏனையோர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கமைவாக அவர்களில் 11 இராணுவத்தினர் குறித்த வழக்கு நடவடிக்கையில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர். ஏனைய 5 இராணுவத்தினரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் சார்பாக யாழ்.மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்படிருந்தும் பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டமையால் மேன் முறையீட்டு நீதிமன்றில் விண்ணப்பம் செய்திருந்தனர்.

அந்த வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றின் கட்டளைக்கமைவாக யாழ்.நீதவான் நீதிமன்றினால் நேற்றைய தினம் குறித்த 5 இராணுவத்தினரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மேற்குறித்த கொலை குற்றம் சாட்டப்பட்ட 16 இராணுவத்தினரில் 11 இராணுவத்தினர் வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் 5 இராணுவத்தினர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-9)

# அரசியல் கைதிகளின் பெயர் வெளியீடு அரசியல் உள்நோக்கம் கொண்டது

## அருட்பணி மா.சக்திவேல் அடிகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் விபரங்கள் முழுமையானவை அல்ல என தெரிவித்துள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு, குறித்த விபரங்கள் அரசியல் உள்நோக்கத்துடன் வெளியிடப்பட்டுள்ளமையை கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் தலைவர் அருட்பணி. மா.சக்திவேல் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 82 பேரின் பெயர் விபரங்கள் அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்விபரம் ஊடகங்களிலும் வெளியாகியுள்ளது. இவ்விபரங்கள் முழுமையானதல்ல என்பதோடு அரசியல் உள்நோக்கம் கொண்டு வெளியிடப்பட்டுள்ளது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கருதுவதோடு இதனை வன்மையாக கண்டிக்கின்றது.

குறித்த பெயர்ப்பட்டியலில் உள்ள எத்தனை பேர் மீது இன்னமும் வழக்கு தொடரப்படாமல் இருக்கின்றது. நீதிமன்ற வழக்கு விசாரணைகளுக்கு சென்று வருவோர் எத்தனை பேர்? தண்டனை மீள் பரிசீலனைக்காக விண்ணப்பித்துள்ளோர் எத்தனை பேர்? தண்டனைக் கைதிகள் எத்தனை பேர்? என்ற பெயர் விபரங்கள் அடங்கியிருப்பின் அது முழுமையானதாக அமைந்திருக்கும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-9)

## இசை பேழை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சாமிபுத்தனின் இலந்தை வன பாடல்கள் இசைப்பேழை வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 08.30 மணிக்கு வேலணை இலந்தை வனம் ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

அமரர் கார்த்திகன் வேலாயுதநாதன் நினைவாக வெளியிடப்படும் இசைப்பேழை வெளியீட்டு விழா கோ.பரமானந்தன் தலைமையில் நடைபெறும். (ந)

## லலித்-குகன்...

குறித்த வழக்கின் விசாரணையை எதிர்வரும் டிசம்பர் மாதம் 8ஆம் திகதிக்கு யாழ் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் திருமதி காயத்திரி சைலயன் ஒத்திவைத்துள்ளார்.

சமூக செயற்பாட்டாளர்களான லலித் மற்றும் குகன் ஆகியோர் கடந்த 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் திகதி அன்று யாழ் பாதுகாப்பு வலயத்தில் காணாமல் போயிருந்தனர். பின்னர் கோப்பாய் பொலிஸ் பிரிவில் அவர்கள் பயணித்திருந்த மோட்டார் சைக்கிள் கைப்பற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில் முன்னாள் அமைச்சரவை பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெலவால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் மேற்குறித்த விடயம் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியிருந்தனர். அதற்கு அவர், குறித்த இருவரும் காணாமல் போகவில்லை, இருக்கிறார்கள் என பதிலளித்திருந்தார்

இதனையடுத்து இச் சம்பவம் தொடர்பாக மேற்குறித்த 2 அரசியல் செயற்பாட்டாளர்கள் காணாமல் போனமை தொடர்பாக யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் குறித்த அமைச்சரது பதிலை அடிப்படையாக கொண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த லலித் குகன் காணாமல் ஆக்கப்பட்டு 6 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள தென்றும். இதுவரை நம்பிக்கையில்லாத நிலையில்தான் விசாரணை நடந்தவண்ணம் உள்ளது. நல்லாட்சியில் உரிய தீர்வினை எதிர்பார்த்துள்ளோம் என குறித்த வழக்குக்கு வருகை தந்த லலித் குகனுடைய உறவினர்கள் தெரிவித்திருந்தனர். (மு-9)

## ஜனாதிபதியும்...

சிரேஷ்ட அரசியல்வாதியான ரணில் விக்கிரமசிங்க நான்காவது தடவையாகவும் பிரதமராக பதவி வகிப்பதுடன், 40 வருடங்களாக தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகின்றார்.

பிரதியமைச்சராக, அமைச்சராக, பிரதமராக இருந்து மக்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சேவையாற்றியுள்ளார். எதிர்க்கட்சித் தலைவராகவும் அவர் செயற்பட்டுள்ளார்.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பொதுவேட்பாளராக நியமிக்கும் முடிவை எடுத்து நாட்டுக்காக விட்டுக்கொடுப்பை செய்திருந்தார்.

அதேவேளை, தேசிய இனப்பிரச்சினைகது தீர்வுகாணப்படவேண்டும். நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதற்கு 30 வருடகால ஆயுதப்போராட்டமும் ஒரு காரணியாக இருந்தது.

தேசிய இனப்பிரச்சினையும், தேசிய பொருளாதாரமும் ஒன்றோடொன்று தொடர்புபட்டது. ஆகவே, பயனுள்ள தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

இலங்கைக்கு உலகின் நல்லெண்ணமும் கிடைத்துள்ளது. அது அதிகரிக்கப்பட வேண்டும். எனவே உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளை அதிகரித்து குறிக்கோள்களை அடைவதற்காக பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பிரதமரும், ஜனாதிபதியும் இணைந்து செயற்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் தமிழ் மக்களினதும் குறிப்பாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் சார்பில் பிரதமருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார். (மு-11)

## கொக்குவில்...

க்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் நேரடி வழிகாட்டலின் கீழ் 6 பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

கொக்குவில் பகுதியில் விசாரணை ஒன்றுக்காக சென்ற இரண்டு பொலிஸ் அதிகாரிகள் மீது கடந்த 30ஆம் திகதி வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த தாக்குதலில் படுகாயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது கொழும்பு மற்றும் மன்னார் வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். (மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 1 kg 450 மட்டும் கூடுதல் கொள்வனவுக்கு 430 மட்டும்.

**U.S.A பாம்**
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை
077 868 9500 (003)



## சமையற்காரர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல (விடுதி) றெஸ்ரோரண்டுக்கு சமையற்காரர் உடன் தேவை. உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு:
**0212225876, 0776016310**

"வெற்றி நிச்சயம்"
இறுதி நேரத்தில் வந்துவிட்டது

## கொழும்பு எக்ஸ்பிறஸ் வெளியீடு



**தரம் - 05 2017**

20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு முற்றிலும் எதிர்பார்க்கக்கூடிய மாதிரி

## வினாத்தாள்களும் விடைகளும்

**280/=**

கிடைக்கும் புத்தகசாலைகள்

- பூபாலசிங்கம் - யாழ்
- லக்சுமி - யாழ்
- துர்க்கா - சுன்னாகம்
- மொடேன் - நெல்லியடி
- அறிவுநதி - கிளிநொச்சி
- மோகன்ஸ் - பளை
- பொதிகை - தனங்கிளப்பு சாவகச்சேரி
- பூபாலசிங்கம் - கொழும்பு
- யதீஸ் - மன்னார்
- யாழ் - கிளிநொச்சி
- அகரம் - கிளிநொச்சி
- அன்னை - யாழ்
- சாரங்கா - யாழ் இந்து மைதானம் அருகில்
- சித்திவினாயகர் - சுன்னாகம்
- அருள்நாயகி - கொடிகாமம்
- வர்ணா - கிளிநொச்சி சந்தை
- கஜன் - வவுனியா (பஸ் நிலையம் முன்)
- ஜெயா - கொழும்பு
- ஷேத்ரபாலகா - கொடிகாமம்
- யுனைற் - மட்டக்களப்பு
- சிதம்பரப்பிள்ளை - நெல்லியடி
- பாக்கியா - கொக்குவில்

தொடர்புகளுக்கு
**077 844 8763 / 077 593 7166**

## ரவி விவகாரம்;...

நாயக்கவை தற்காலிகமாக பதவி விலக்க ஜனாதிபதிக்கு விருப்பம் உள்ளதாகவும், எனினும் பிரதமருடன் இடம்பெறும் கலந்துரையாடலை அடுத்தே இது தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அமைச்சர் ரவி கருணாநாயக்கவை அமைச்சர் பதவியிலிருந்து நீக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## இளை...

இதுவரை தெரியவரவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இளைஞரின் சடலம் மீட்கப்பட்டுச் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

மேலும், இந்த சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-11)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு

உடுவில் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள 5 பரப்பும் 15.5 குளியும் கொண்ட காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. **தரகர் தேவையில்லை.**

**தொடர்பு: 0777755175**

## PERSONAL,GROUP CLASS

இரசாயனவியல் (A/L) 2017, 2018, 2019 Repeat Batch 37 வருட Past Papers கற்பிக்கப்படும்
**சி.அங்கதன்** B.Sc (Chem.Spl) (038)

**தொடர்பு: 0779208945**

## பணிப்பெண் தேவை

கொழும்பு கல்கிசையில் வசிக்கும் வயோதிபத் தம்பதிகளைப் பராமரிப்பதற்கு 30 வயதிற்கு மேற்பட்ட சமையல் தெரிந்த, தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

**தொடர்பு: 0715360895**

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

**UK - 550/=** (C-9206)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
**CANADA - 400/=** மட்டுமே (நிபந்தனைக்குட்பட்டது)

**V2 TRAVELS-0768226240**

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## அண்ணா வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

**070 330 5500** (C-9232)

அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

கனடாவுக்கு (Canada) மிகக் குறைந்த கட்டணத்தில் கப்பல் ஊடாக அனுப்பிடவும்

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | ஊர்காவற்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# Techno world

(மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி அருகாமை, புதிய லிங்கம் கூல்பார் அருகாமை)

A/L தொழில்நுட்ப பிரிவில் பாடசாலை மட்டத்தில் முதலிடத்தை பெற்ற எமது மாணவர்கள்

**2019 A/L**

| No | Name | Rank | School | Marks | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | Bio-Tec | SFT | தெரிவுப் பாடம் |
| 01 | லாவன்யா | 1st | J/KHC | 90 | 85 | 90 |
| 02 | சந்துயா | 1st | J/MHC | 88 | 86 | 83 |

புதிய கிளை:-யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாணவர்களுக்காக யாழ் Town இல்

### A/L தொழில்நுட்ப பிரிவு

A/L-2018, 2019
A/L 2019-புதிய பிரிவு
ஆரம்பம்-(06.08.2017), ஞாயிறு காலை 9.00, 3.00

**தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (SFT)**
சக்தி (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

**பொறியியல் தொழில்நுட்பவியல் (E-TEC)**
பிரபல ஆசிரியர்
ஜெகநாதன் (விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி)

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (Bio-Tec)**
திருக்குமரன் (நெல்லியடி மகா வித்தியாலயம்)

**ICT**
உமாகாந்தன் BIT (யா/மத்திய கல்லூரி)

**விவசாய விஞ்ஞானம்**
விஸ்ணுவர்த்தன் (யா/வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி)

GROUP Class, தனிப்பட்ட வகுப்புக்கள் அமைத்து தரப்படும்

**0770175346**

Note:-(தொகுதிப் பாடங்கள் அனைத்தும் நடைபெறும்)
விரும்பிய பாடங்களை மட்டும் கற்கமுடியும்
எமது கிளைகள்:-கொக்குவில் (குளப்பிட்டிச் சந்தி)
அச்சுவேலிச் சந்தி (யூனியன் வங்கி அருகாமை)
புத்தூர்ச் சந்தி (நெஸ்லே அருகாமை)
நெல்லியடிச் சந்தி (NSB அருகாமை) (C-9254)

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள வீடு ஒன்றிற்கு சமையல் வேலை செய்வதற்கு பெண் ஒருவர் தேவை.
- வேலைக்கு காலை வந்து மாலை போகலாம் அல்லது தங்கி நின்றும் வேலை செய்யலாம்.

**தொடர்பு: 0768514296**

**8ம் அணி மாணவர்களும் வேலைவாய்ப்பில் இணைந்தனர்**
**O/L உடன் மாதம் 25,000/-க்கு மேல் சம்பாதிக்க**



நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி
**வெற்றிநடை போடும்**

Diploma in Tourism & **Hotel Management** 9ம் அணி

**3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்**

புதிய பிரிவு ஆரம்பம்: ஒகஸ்ட் 7 திங்கள் 9மணி

பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு

SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY (சி-9214)

அனுமதிகளுக்கு 077 3616 798 / 021 222 0011

175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.

## உடனடி வேலைவாய்ப்பு

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

- **அலுவலகச் செய்தியாளர்கள்** (உள்ளகம் வெளியகம், இருபாலாரும்)
- **கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு** (இருபாலாரும்)
- **பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர்** (சிங்களம் கட்டாயம் தெரிந்திருத்தல் வேண்டும்) (பெண்)

**தகைமை**

- க.பொ.த உயர்தரத்தில் சித்தி
- 25 வயதுக்கு மேற்பட்டவர்கள்
- யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் வசிப்பது மேலதிக தகைமையாகக் கணிக்கப்படும்.

தகைமையும் ஆர்வமும் உள்ளவர்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணபத்துடன் 07.08.2017 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள

**வலம்புரி**

அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

-பொது முகாமையாளர்

UNREGISTERED TOYOTA
**KDH** SUPPER GL HIACE VAN
MODEL YEAR:2013/12
COLOUR: SILVER

KDH HIGHROOF GL
MODEL YEAR: 2014
DUAL AC
COLOUR: WHITE



விற்பனைக்குண்டு (சி-9242)
தொடர்புகளுக்கு
**SMART KINGS (PVT)LTD.**
077-3754040
12, Point Petro Road, Jaffna (வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org